
# சாயி மார்க்கம்


ஜூலை - டிசம்பர் 2014



இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சஞ்சிகை



இரத்த தானம் – வடபிராந்தியம்



மாற்றுவலுவுள்ளோர் தினம் – வடபிராந்தியம்



பகவான் பாபாவின் 89 ஆவது அவதார தினத்தையொட்டிய
பல சேவைத் திட்டங்கள் – வடபிராந்தியம்



"சாயி கமலம்" – தாமரைக்கேணி சாயி நிலைய திறப்புவிழா – கிழக்குப் பிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி மார்க்கம்
# Sai Markam

மலர்: 21
இதழ்: 53

ஒரே ஒரு மதம் அது
அன்பென்னும் மதம்

ஜுலை - டிசம்பர்
2014



**ஆசிரியர்:**

Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**

திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442




இலங்கையில் தனிப்பிரதி ரூபா 50.00
வருடச் சந்தா ரூபா 200.00 (4 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Sai Markam
Sathya Sai Seva Organisation (NZ)
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.

**89 ஆவது அவதார தின விழா**
**நவம்பர் 23**

## உள்ளே......




| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 02 |
| அக ஆய்வு கருத்தரங்கு | 03 |
| தெய்வத் தாயின் தெள்ளமுதாம் | 09 |
| இசையும் சிகிச்சையாகலாம் | 10 |
| இலிகித நாம யக்ஞம் | 12 |
| பகவானிடம் சரணாகதி | 13 |
| சத்யம் | 14 |
| அவதாரம் | 18 |
| ஸாயி கமலம் | 21 |
| ஹிருதயநிவாசி | 22 |
| எம்முடன் நிதர்சனமாய் சுவாமி | 26 |
| தண்ணீரில் மறைந்துள்ள செய்தி | 29 |
| கடவுளை அனுபவித்தல் | 30 |
| உடல் பற்றே துன்பத்துக்குக் காரணம் | 32 |
| சிந்தனையிலும், திட்டமிடலிலும் மாற்றம் | 38 |
| சத்திய சாயி மனித மேம்பாட்டு பாடல்கள் | 42 |
| பாலவிகாஸ், மகா சமாதி பாடல்கள் | 43 |
| ஒரு அடி எடுத்து வைத்தால் பல அடி வைப்பேன் | 44 |
| கேள்வி – பதில் | 45 |
| நிறுவனச் செய்திகள் | 46 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத மாற்றம் -அக ஆய்வு - ஆத்ம விசாரணை
# Transformation - Introspection - Who I am ?

நாம் எல்லோரும் விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ ஆன்மீகப் பாதையில் பயணித்துக் கொண்டேயிருக்கிறோம். ஆத்மீகப் பாதை ஒவ்வொருவருக்கும் தனித்துவமானதேயாகும். இதன் நோக்கு உற்பத்தியான இடத்தைச் சென்றடைவதேயாகும். அதாவது பரமாத்மாவிலிருந்து உற்பத்தியானது பரமாத்மாவுடன் கலப்பதேயாகும். ஒன்பது பில்லியன் மக்களுக்கும், 9 பில்லியன் பாதைகள் உண்டா? ஒவ்வொருவரின் கர்மவினை, மனப்பாங்கு, சூழல் ஆகியவற்றிற்கு அமையப் பயணப் பாதையுமிருக்கும் என்றாலும் எல்லாப் பாதைகளையும் நான்கு அடிப்படை மார்க்கங்களாக பிரித்துள்ளார்கள். அவையாவன கர்மமார்க்கம், பக்தி மார்க்கம், ஞானமார்க்கம், இராஜயோகம் என்பவையாகும். இவற்றைவிட நான் யார்? என்ற ஆத்ம விசாரணையே மகா மார்க்கம் என்று ரமணமகரிஷி கூறியுள்ளார். பகவான் சத்திய சாயி பாபாவும் எல்லா மார்க்கங்களும் வேறுபட்டவைபோல் தெரிந்தாலும் ஒன்றுக்குள் ஒன்று சேர்ந்து இறுதி இலக்கை அடையும் பொழுது ஒன்றானதாலேயே அனுபவம் ஏற்படும். சுவாமியும் படிப்படியாக, பஜனைகள், வழிபாடுகள், சத்சங்கங்கள், சேவை, கல்வி முறை, தியானம், ஆத்ம விசாரணையென்று எமக்கு விளக்ககங்களுடன் போதித்து, செய்து காட்டி வாழ்ந்தும் காட்டியுள்ளார்.

ஆன்மீகப் பயணத்தை பரவலாகவும், தீவிரமாகவும் திரிபுபடுத்தப்படாமலும் செயற்படுத்தத்தானே சத்திய சாயி சேவா நிறுவனத்தையும் ஸ்தாபித்துள்ளார். பக்தர்களின் பயணப்பாதை சீராகவும் தளம்பாமலும் இருப்பதற்கான பொறுப்பையும் நிறுவனத்திற்குக் கொடுத்துள்ளார். மனிதன் முதல் அடி எடுத்து வைத்தால் தான், தான் எத்தனை அடியும் எடுத்து வைக்கத் தயாரென்று கூறியுள்ளார்.

இந்த நோக்கை நிறைவேற்றுவதற்காக வடபிராந்தியத்தில் 2013 ஆம் ஆண்டை உன்னத மாற்ற ஆண்டாகவும், 2014 ஆம் ஆண்டை அக ஆய்வு ஆண்டாகவும் பிரகடனப்படுத்தி பல செயலமர்வுகள் நடாத்தி பக்தர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். பக்தர்கள் தங்களது முன்னேற்றத்தை பரிசீலிக்க நாளாந்த நாட்குறிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். சுவாமி அருளிய 9 கோட்பாடுகளையே அத்திவாரமாக வைத்தே செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுகின்றன.

இறைவனில் முழுமையான நம்பிக்கை வைத்து மிகவும் பொறுமையுடன், தளர்வடையாது (அர்ப்பணிப்பு, பக்தி, கட்டுப்பாடு, பகுப்பாய்வு, மனவுறுதி) - 5D யுடன் 9 கோட்பாடுகளையும் நாளாந்த வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் உன்னத மாற்றத்தை ஏற்படுத்தலாம். இதன் அளவு கோல் 5 அடிப்படை மனித மேம்பாடுகள் (சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை) ஆகியன என்ன வீதத்தில் எமது உணர்வு எண்ணம் சொல், செயலில் வெளிப் படுவதே யாகும்.


சுருக்கமாகக் கூறின் எமது உணர்வு, எண்ணம், சொல் செயலில் தூய்மையும் ஒருமையும் ஏற்படுவதே மனித உன்னதத்தின் முதற்படியாகும். 12 வருடங்கள் இதைக் கடைப்பிடித்தால் நாம் நினைப்பது, சொல்வது, நிகழ்ந்தே தீருமென்று ஆத்மீக மகான்கள் கூறியுள் ளார்கள்.

இந்த உன்னத மாற்றம் என்றால் என்ன? அதை அடைவதற்கு உள்ள தடைகள் என்ன? எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம்? மனதின் செயற்பாடு ஆகிய வற்றைப் பற்றி ஆய்வு செய்வதே அக ஆய்வு ஆகும். ஆறு எதிரிகளான ஆசை, குரோதம், மோகம், லோபம், மதம், மாச்சர்யம் என்பவற்றைக் கட்டுப்படுத்தி நிர்மூலமாகு வதை ஆய்வதும் அடங்கும்.

அக ஆய்வின் மூலமாகவும், சாதனைகள் மூலமாகவும் மனது தூய்மை அடைந்து உன்னத மாற்றம் ஓரளவு ஏற்பட்டதும் அடுத்தபடியான நான் யார் என்ற ஆத்ம விசாரணை தானாகவே தொடங்கி விடும். இதில் ஆத்மா அனுபவ ரீதியாக உணரப்பட்டு ஒரு தடையுமின்றி அதன் பிரகாசம் ஊடுருவி வெளிப்படத் தொடங்கும். இது முடிவிலே முக்தி நிலையாகும். பயணமும் முடிந்து விடும்.

ஜெய்சாயிராம்

ஆசிரியர்



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக ஆய்வு கருத்தரங்கு

**அக ஆய்வு என்ற தலைப்பில் திரு.ந.புவனேந்திரன் அவர்கள் யாழ்ப்பான சாயி நிலையத்தில் நிகழ்த்திய உரையின் சாராம்சம் - முதற்பகுதி**

சாயிராம்.

இக்கருத்தரங்கிற்கு வந்திருப்போர் எண்ணிக்கை பெரியளவில்லாதிருந்தாலும் எனக்கு மகிழ்ச்சி. கடுமையான கடும் சொற்களைத் தவிர்த்து, நாளாந்த வாழ்வில் உபயோகிக்கும் சொற்களையே உபயோகிப்பேன். இயன்றளவு நகைச்சுவையாகவும் ஏதாவது கூறுவேன். அப்படியென்றால் உங்களுக்கு ஒரு கவர்ச்சி ஏற்படும். நான் சபையோரிடம் இடைக்கிடை கேள்விகள் கேட்பேன். கோபிக்கக்கூடாது.

இரண்டு நிமிட அமைதியிருக்கையைப் பேணுவோம். ஓம் என்ற ஒலிக்குப் பின் மௌனம். பின்பு ஓம் என்ற ஒலியுடன் மௌனம் கலைய வேண்டும்.

**வேண்டுகோள்:**

1. உங்களின் அபிப்பிராயப்படி உங்களிடம் உள்ள மிகச் சிறந்த குணமொன்றை கொப்பியில் எழுதுங்கள்.
2. நீங்கள் நினைக்கின்ற உங்களிடமுள்ள மிகக் கெட்ட குணமொன்றை எழுதுங்கள்.

**கேள்வி:** உலகத்திலேயே உங்களுக்கு ஆண்டவனால் தந்த மிகச் சிறந்த கொடை எது? பல பதில்கள் எழுந்தன. அவரின் பதில்: **நான் நினைப்பதை மற்றையவர்கள் தெரிந்து கொள்ள முடியாதது.** அல்லாவிடில் எவ்வளவு குழப்பம் ஏற்படும். சபையிலிருந்த ஒரு அன்பர், தனது கெட்ட குணம் கோபம் என்று சொன்னார். பல வருடங்களாக் கூடாத குணம் என்று தெரிந்தும் அதை விட முடியவில்லை∴ இதற்குரிய காரணம் சூழல் என்றும் சொன்னார். இதைப் பற்றி பின்பு ஆலோசிப்பதாகச் சொல்லப்பட்டது,



ஆன்மீக செயற்பாட்டில் நிலைப்பதற்கு இன்றைய உலக நிலையைப் பார்ப்போம். பகவானே கூறியுள்ளார்.

**"கொள்கையில்லா அரசியல்**
**நேர்மையற்ற வாணிபம்**
**மனிதநேயமற்ற விஞ்ஞானம்**
**ஒழுக்கமில்லாத கல்வி**
**அன்பில்லா மதம்"**


இவை விரும்பத் தகாதது மட்டுமல்ல மிகவும் ஆபத்தானவையுமாகும்.

பிழைகள் விடுவது மட்டுமல்ல அதற்கு நியாயமும் கூறப்பழகி விட்டோம். இது மிகவும் மோசமான நிலையாகும். அரசியலில் வெற்றி பெற எவ்வழியையும் பின் பற்றலாம். அதிகாரத்திற்கு வந்த பின்பு சரிப்படுத்தலாம். என்று நியாயம் சொல்வார்கள். வணிகத்திலும் எப்படியாகினும் லாபத்தை பெருக்க வேண்டும். கிருமிநாசினி இரசாயனப் பசளை ஆகியவற்றை அளவுக்கு மேல் பாவித்து நஞ்சையல்லவோ விதைக்கிறார்கள். பெரிய விளைச்சல், பெரிய பழங்கள், கவர்ச்சியான பொருள்தான் முக்கியம். மனிதருக்கு தீங்கு விளைவிக்குமா என்று யோசிப்பதில்லை. மருந்துக் குளிசைகள், கூட்டுக் குளிசைகள் தரம் குறைவானதைச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்தைப் படுத்துகிறார்கள். இதனைச் சந்தைப்படுத்தும் உத்தி என்று நியாயம் கூறுகிறார்கள்.

"பேய் அரசாட்சி செய்தால் பிணம், தின்னும் சாஸ்திரங்கள்" என்று பாரதியார் மனவேதனையுடன் கூறியுள்ளார். எங்களைக் கெடுக்கும் அடுத்த சாதனம் தொலைக்காட்சி. தொடர் நாடகக் காட்சிகள், சம்பாஷணைகள் எம்மை வன்முறைக்கு அழைத்துச் செல்கின்றன. இலாப நோக்கத்திற்காக எமது இதிகாச உண்மைகளைத் திரிவு படுத்தி படம் தயாரித்துக் காட்டுகிறார்கள்.

அரசியல் அநியாயங்களுக்கு இராஜதந்திரம் என்றும், வணிகக் கேடுகளுக்கு சந்தைப்படுத்தும் யுத்தி என்றும் மனிதநேயம் அற்ற விஞ்ஞானத்திற்கு உலகமய நோக்கு என்றும், பிழைகளைத் தண்டிக்கப்போனால் மனித உரிமை என்று நியாயம் சொல்கின்றார்கள். இந்த நிலையை நாம் மாற்ற வேண்டும். இந்தச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும். ஏதோ எம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும். இராமாயணத்தில் அணில் செய்தது சிறிது என்றாலும், இராமபிரான் அதை மெச்சி ஆசிர்வதித்தார்.

நாம் மாற்ற வேண்டிய கருவியாக மாற வேண்டும். நாங்கள் தொடங்கினால் பகவான் உதவி செய்வார். எங்களுடைய மனப் பாங்கை திருத்த வேண்டும். எம்மைத் தகுதியாக்க வேண்டும். பகவான் தனது அவதாரப் பணியில் சேருபவர்களுக்கு WATCH என்ற கோட்பாட்டைக் கொடுத்துள்ளார். இதன் அர்த்தம் சொல்லைக் கவனி, செயலைக் கவனி, எண்ணங்களைக் கவனி, ஒழுக்கத்தைக் கவனி, இதயத்தைக் கவனி என்பதாகும்.

இதில் கஷ்டமானது எண்ணங்களைக் கவனிப்பதே யாகும். எண்ணங்கள் புலன்களூடாகவும் வேறுவிதமாகவும் தானாகவே எழுகின்றன. எமது எண்ணங்களே எமது தலை விதியையும் நிர்மானிக்கின்றன. எமக்குத் துன்பம் வரும் போது மற்றவர்களின் தலையில் போடுகிறோம். ஏன் பகவானுக்கே கருணையில்லையா என்று முறைப்பாடு செய்கிறோம். எண்ணங்களைத் தியானத்தின் போது உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். எண்ணங்களின் கூட்டே மனம். இரு ஓங்காரங்களுக்கிடையில் நிலவும் மௌனத்தை நீடிக்கப்பழக வேண்டும். சுவாமி எண்ணங்களைக் கட்டுப்படுத்து என்று சொல்லவில்லை. அவதானி என்றே சொன்னார். எண்ணங்களே பிறப்புக்கு காரணம். எண்ணத்தை அவதானித்து தீயது என்று உணர்ந்ததும் சொல் செயலுக்குப் போகாமல் தடுத்துக் கொள்ளலாம். மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் சொல் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.


நாம் ஒரு செயலை திரும்பத் திரும்பச் செய்தால் அது பழக்கமாகி விடும். அப்பழக்கம் பின்பு ஒழுக்கமாக மாறி எமது தலைவிதியாகவும் மாறும். சொல்லைக் கவனிக்க வேண்டும். சொல் உண்மை யானதாகவும், இனிமையானதாகவும், மென்மையானதாகவும் மற்றவர்களுக்குப் பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும். அல்லாவிடில் மௌனமே மேன்மையானது.

நாம் நேர்மறையான எண்ணங் களையே விருத்தி செய்வோமென உறுதி பூணுவோம். சொல்வதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**ஒரு நிகழ்வு:** அரச சபையில் அரசனை வாழ்த்துவதற்காகப் பல புலவர்கள் தங்களின் ஆக்கங்களைச் சமர்ப்பித்தார்கள். ஔவையார் எழும்பி **"வயரம்புயர"** என்ற ஒரு சொல்லில் வாழ்த்தி அமர்ந்தார். சபையோருக்கு அதிர்ச்சி: விளக்கம்: கேட்டார்கள்.

வரம்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் விளையும்
நெல் விளைய வருமானம் உயரும்
வருமானம் உயர செழிப்புயரும் என்று விளக்கம் கொடுத்தார்.

**நேர்மறையான எண்ணம் பலன ளிக்கும்** என்பதற்கு ஒரு கதை: ஒரு ஆபிரிக்க நாடு. அங்கே மக்கள் யாரையும் இராசாவாக தெரிவு செய்யலாம். ஆனால் அவர் 5



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் தன் விருப்பப்படி விரும்பிய தெல்லாம் பெற்று ஆனந்தமாக வாழலாம். 5 வருடத்திற்குப் பின்பு அவரை ஓர் நதியைத் தாண்டி அங்கேயுள்ள காட்டில் விடப்படுவார். அங்கே கொடிய விலங்குகள், நரமாமிசம் உண்ணும் மனிதர்களும் உள்ளனர். இது மகிழ்ச்சியும் துன்பமும் மாறி வரும் என்பதைக் குறிக்கிறது. ஒருவன் அரசனாக வர சம்மதித்தான் அவன் பின்வரும் பாடலைப் பாடிக்கொண்டு நேர்மறை எண்ணத்துடன் செயற்பட்டான்.

இறப்பும் பிறப்பும் உனக்கில்லை
இதயம் நிறைந்தாய் சத்திய சாயிராம்
ஜெய் சாயிராம்! ஜெய் சாயிராம்!

முதல் வருடம் குறிக்கப்பட்ட சேனையுடன் சென்று கொடிய விலங்குகளை அழித்தான். அடுத்த வருடம் காடுகளை அழித்து வயல் நிலமாக்கினான். அடுத்த வருடம் நர மனிதர்களை விரட்டியடித்தான். கடைசி வருடம் 500 குடும்பங்களை அங்கு குடியேற்றினான். அரசாட்சி முடிய மிகவும் மகிழ்வுடன் நதியைக் கடந்து அடுத்த கரையில் வாழத் தொடங்கினான்.

( தேநீர் இடைவேளையின் பின் தொடர்ந்தது கருத்தரங்கு )

ஒரு முறை வைற்பீல்டில் பிருந்தா வனத்தில் சுவாமியின் தரிசனத்திற்குப் பின்பு சில பெண்கள் (திருமதி கமலா பத்மநாதன் உட்பட) ஒரு மூலையில் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். சுவாமி மெதுவாக அவர்கள் பின் வந்து நின்றதைக் கவனிக் கவில்லை. சிறிது நேரத்திற்குப் பின்பு அவர்களுக்குக் கதை சொல்லத் தெரியுமா என்று கேட்டார். ஆம் என்று சொல்ல, பாட்டுப் பாடத் தெரியுமா என்று கேட்டார். ஆம் என்று சொல்ல நடிக்கத் தெரியுமா? என்று கேட்டார். ஆம் என்று சொல்ல அப்ப நீங்கள் சிறு பிள்ளைகளுக்குக் கதை சொல்லி, பாட்டுப் பாடி, நடித்து, மனித விழுமியங்களைக் கற்பிக்கலாம் என்று கூறினார். இச் சம்பவமே பாலவிகாஸ் கல்வி முறையை 1969 இல் ஆரம்பித்து வைத்தது.




கோபம் தான் தனது மிகக் கொடிய கெட்ட குணமென்று ஒரு அடியார் சொன்னார். எத்தனை வருடம் கோபம் கூடாதென்று தெரியுமென்று கேட்க, 30 வருடங்கள் என்று பதிலளித்தார். 30 வருடமாக இது கெட்டது என்று அறிந்தும் ஏன் விடுபடவில்லை. மனிதனுக்கு பகுத்தறிவு இருந்தாலும் கெட்ட குணத்தைவிட முடிவதில்லை. இவர்கள் படித்தவர்களும் கூட ஏதோ ஒரு சக்தி தடுக்கிறது. அது எது? ஆணவமா? கர்மமா? மாயையா?

பேதமையென்பதொன்றறியாதெனினே தங்கொண்
டூதியம் போகவிடல் - 831

பேதமையுனெல்லாம் பேதமை காதன்மை
கையல்ல தன்கட் செயல் - 832

என்று இரு குறள்களையும் கூறினார். இச்சமயத்தில் மனதைப் பற்றிய விளக்கம் அவசியமாகிறது. டாக்டர். ஆட் ஒங் யும்சாய் மனதின் தொழிலகத்தைப் பற்றி இவ்வாறு கூறினார். மனம் எங்கு இருப்பதென்பதை சுட்டிக் காட்ட இயலாது.




எங்களுக்குத் தெரியாமலேயே அடி அறி மனதில் பதிவுகள் ஏற்படுகின்றன. அடி அறி மனமே சிந்தனைக் கொத்து. கருவுலேயே பதிவுகள் நடைபெறுகின்றன. அது மிகவும் பலம் வாய்ந்தது. முற் பிறப்புக்கள் கருவிலும், இப்பிறப்பில் சூழலிலிருந்தும் பதிவுகள் ஏற்படுகின்றன.

நாம் முதலில் எமது அடி அறி மனத்தை ஆராய வேண்டும். அதிலுள்ளது எனக்கு மாத்திரம் தான் தெரியும். நாம் எண்ணங்களை அவதானிக்க வேண்டும். அடி மனதை மாற்றாது எமது செயலில் மாற்றத்தை ஏற்படுத்தவியலாது. அடி அறி மனதில் நேர்மறையான எண்ணப் பதிவுகளைக் கூட்ட வேண்டும். இதற்கு அகப்பார்வை முக்கியமானதாகும். பாட்டுப்பாடி கருத்தரங்கு நிறைவு செய்யப்பட்டது.

(முதற் பாகம் முடிவுற்றது. முதல் நிலையிலேயே இங்கு பதிக்கப்பட்டுள்ளது. )

ஜெய் சாயிராம்

மே 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அக ஆய்வு கருத்தரங்கு

**அக ஆய்வு என்ற தலைப்பில் திரு.ந.புவனேந்திரன் அவர்கள் யாழ்ப்பாண சாயி நிலையத்தில் நிகழ்த்திய உரையின் சாராம்சம் - இரண்டாம் பகுதி**


சாயிராம்!

நான் இக்கருத்தரங்கை நடாத்த வருவது எனது திருப்திக்காகவேயாகும். எனக்கு நன்மையாகவிருக்கிறது. 2013 ஆம் ஆண்டு உன்னத மனமாற்ற ஆண்டாக வட பிராந்தியம் பிரகடனம் செய்ததை பிரசாந்தி சபை தனது கூட்டத்தின் போது நல்லதென்று விமர்சித்துள்ளது.

முன்னர் கூறப்பட்டதை மீட்டல் செய்யப்பட்டது. முதலில் நாம் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு சுவாமி தந்த WATCH என்றதைப் பின்பற்ற வேண்டும். இவற்றுள் முக்கியமாக எண்ணங்களை அவதானிக்க வேண்டும்.





இவ்வட்டத்தை ஒழுங்கான உன்னதமானதாக மாற்ற செயல், சொல் எண்ணத்தை அவதானித்து மாற்ற வேண்டும்.





வாழ்க்கையில் இரட்டை நிலையிருப்பதைக் குறைத்து மனத்திருப்திடைந்து அமைதியை நிலைநாட்ட வேண்டு மென்பதையே மேலேயுள்ள வரைபடம் குறிக்கிறது.
மனதின் செயற்பாடு விளங்கப்படுத்தப்பட்டது.

அடி அறி மனதைத் தூய்மையாக்குவதே ஆன்மீக மாகும். உயர் அறி மனம், அதாவது மனச்சாட்சி (ஆத்மா) யின்




படி நடப்பதே ஆன்மீகம்.

மேற்கூறிய இரண்டையும் கடைப் பிடித்தால் "மனிதன் என்பவன் தெய்வ மாகலாம் நாம் இன்றே தொடங்க வேண்டும். முதல் அடியை எடுத்து வைப்போம்.




மனதின் பெரும்பகுதி நனவு நிலையில் இல்லை. சமுத்திரத்திலுள்ள பாறைக் கல்லுக்கு ஒத்ததாகும். சிறு பகுதியே மேலே தெரியும். அதுவே நனவு நிலைக்கு எழுப்பக்கூடியதாக இருக்கும். மனப்பாங்கை நேர்மறையாக்குவதே ஆன்மீகம்.


உன்னத மாற்றமும், அக ஆய்வும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. இந்தத் தொடர்ச்சியான ஒன்றிணைந்த விழிப்புணர்வை பகவான் அடிக்கடி கூறியுள்ளார். உதாரணமாக அப்பர் சுவாமிகள் கல்லையும் வைரத்தையும் ஒன்றாகவே கண்டார். தொடர்ச்சியான விழிப்பு நிலையில் இருந்தார்.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக ஆய்வின் மூலம் எண்ணம், சொல், செயலில் ஒருமையும் தூய்மையும் ஏற்படுகிறது. அடி மனதில் தேவையில்லாத விரும்பத்தகாத பதிவுகள் ஏராளம் உண்டு. சபையோரை அமைதியிருக்கையில் இருந்த பின்பு தங்களில் உள்ள கோபம், அகங்காரம், ஆசை, பொறாமை, புறங்கூறல் ஆகிய கெட்ட குணங்களின் விகிதாசாரத்தைக் குறிக்கச் சொன்னார். பின்பு தனது மனதிலுள்ள விகிதாசாரத்தை எழுதினார். கோபம் 40 வீதம், அகங்காரம் 20 வீதம், ஆசை 15 வீதம், பொறாமை 15 வீதம், புறங்கூறல் 10 வீதம் அகும். அக ஆய்வுப் பயிற்சியின் பின்பு கோபம் 90 சதவீதத்தால் குறைந்தும், புறங்கூறல் முழுதாக விடப்பட்டதாகவும் கூறினார். இதே போல் நாம் தினமும் சுய மதிப்பீடு செய்து ஆவணப் படுத்த வேண்டும்.

கோபத்தை ஒழிக்க முயற்சிக்க வேண்டும். எம்மில் தமஸ், ரஜஸ், சத்விக் என்ற மூன்று குணங்களும் ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு விகிதத்தில் உள்ளன. கோபம், தமஸ், ரஜஸ் இரண்டிலும் எழும். தமஸை ரஜஸால் மாற்றிய பின்பு ரஜஸை சத்வீக்காக மாற்ற வேண்டும். இறுதியில் சத்விக்கும் இல்லாமற் போக வேண்டும். இதற்கு சுவாமி தந்த 9 கோட்பாடுகளும் தொடர்ச்சியான நாமஸ்மரணையும் உதவி செய்யும். அக ஆய்வு மூலம் மனோமய, விக்ஞானமய கோஷங்களை அகற்ற வேண்டும். நாம் ஐம்புலன்களை அடக்கி மனதை வெல்ல வேண்டும். இதனால் தேகாபிமான அடிப்படையில் எழுந்த நான் என்ற உணர்வு அற்றுப் போக வேண்டும். இதனாலும் கோப எழுச்சி இல்லாமற் போய்விடும். சுவாமியே கோபத்தை அடக்க பின்வரும் யுத்திகளைத் தந்துள்ளார்.

- இடத்தை விட்டு போதல்
- தண்ணீரை பருகுதல்
- முழுமையாக மல்லாந்து படுத்தல்
- முகம் பார்க்கும் கண்ணாடியில் முகத்தைப் பார்க்க வேண்டும்
- 5 D ஐ பின்பற்ற வேண்டும்.

**5 Dகளாவன:**

அர்ப்பணிப்புடன் கடமை - Duty with Dedication
பக்தி - Devotion
கட்டுப்பாடு - Discipline
பகுப்பாய்வு - Discrimination
மனஉறுதி - Determination

சபையோரை எத்தனை Dக்களைப் பின்பற்றுகிறோம் என்று குறிப்பிட்டு வைக்கச் சொன்னார். நாம் எமது சக்தியை விரயம் செய்யக்கூடாது. நாங்கள் சுவாமியை மானசீகமாக வணங்கலாம். பாதநமஸ்காரம் எடுக்குமாப்போல பாசாங்கு செய்ய வேண்டும். பின்பு இது யதார்த்தமாகும்.

கொடிய விலங்கு மனப்பாங்கை இதயத்தில் வைத்து அர்ச்சனை செய்தேன், அதாவது சில படிகள் முன் வந்து பாதத்தில் விழுந்து வணங்கியதும் எங்கே இருக்கப் போகிறேன் என்பதை தெரிவு செய்யலாம். சனாதன தர்மமே எமது இறுதியான இலக்கு. ஆசையையும் அகங்காரத்தையும் நாம் அழிக்க முடியாவிட்டாலும் கூடியவரை கட்டுப்படுத்தலாம். உள்ளிருக்கும் 6 எதிரிகளை அகற்றும் வழிகளைத் தெரிய வேண்டும். உண்ணும் உணவு மனதின் செயற்பாட்டில் பெரும் பங்கு வகிக்கின்றது. சாத்வீக உணவையே உண்ண வேண்டும்.

பரம்பொருளிலிருந்து அவதாரம் தோன்றி எம்முடன் தொடர்பு கொண்டது. ஆனால் இப்போது அவதாரத்தின் உடல் மறைந்தாலும் அதனால் ஏற்படுத்தப்பட்ட தொடர்பு இப்போது நேரடியாக பரபிரமத்துடன் இருக்கின்றது. இதை நாம் மறக்கக்கூடாது.

பொறாமையையும் அகற்றுவது கஸ்டம். மகா பாரதத்தில் அர்ஜுனனுக்கும் துரோணாச்சாரியாருக்கும் இருந்த பொறாமைக் குணத்தினால் ஏகலைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரலை துரோணாச்சாரியார் தனக்குத் தட்சணையாக கேட்டார். நாம் பொறாமையை ஒழிக்க வேண்டும்.

இக் கட்டத்தில் கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

**கேள்வி:** நாங்கள் தீய குணங்களை அழிக்க முற்படும் போது, மாயா சக்தி அல்லது சாத்தான் தடை செய்கிறதா?

**பதில்:** சாத்தான் யாரென்றால் உள்ளிருக்கும் 6 எதிரிக ளேயாவர். தீதும் நன்றும் பிறர்தர வாரா

**கேள்வி:** அன்பை எவ்வாறு விரிவு படுத்தலாம்?

**பதில்:** ஜோதி தியானமே சிறந்த வழி

**கேள்வி:** உலக வாழ்க்கையில் எழும் சிக்கல்களை எவ்வாறு எதிர் கொள்ளலாம்?

**பதில்:** ஆத்ம நிவேதனம் தான் ஒரேயொரு வழி பூரண சரணாகதியடைய வேண்டும் இதைப்பற்றிய ஒரு ஐயமும் எழக்கூடாது.

**கேள்வி:** கடிய விமர்சனம், புறங்கூறல், குறையைச் சுட்டிக் காட்டல் என்பவற்றிலுள்ள வித்தியாசங்கள் என்ன? எவ்வாறு எதிர் கொள்ளலாம்?

**பதில் :** வாய்ப்பேச்சை அவதானிக்க வேண்டும். இனிமையாகவும், மென்மையாகவும். உண்மையாகவும், பயனுள்ளதாகவும் பேச்சு இருக்க வேண்டும். மனப்பாங்கு அன்பின் அடிப்படையில் எழ வேண்டும். தவறைச் சுட்டிக் காட்ட வேண்டும். ஒருவரின் தவறை வேறு ஒருவரிடம் சொல்வது புறங்கூறல். விமர்சனம் உண்மையைப் பேசுவதாக இருக்க வேண்டும்.

**கேள்வி:** ஆசிரியர் மாணவன் மீது கோபம் கொள்ளலாமா?

**பதில்:** அவனைத் திருத்துவதற்காகப் பாசாங்கு கோபம் கொள்ளலாம். வெறுப்புணர்வு இருக்கவே கூடாது. கண்டிப்பு அன்புடன் செய்யப்பட வேண்டும்.

**கேள்வி:** உள் எதிரிகள் ஆத்மாவைத் தாக்க மாட்டாதா?


**பதில்:** உள் எதிரிகள் மனம் மூலம் ஆத்மா உணர்வைத்தடை செய்கின்றன. அக ஆய்வு மூலம் மனதைச் செயலிழக்கச் செய்தால் ஆத்மா பிரகாசிக்கும் இன்று நாம் மனதையே ஆராய்கிறோம்.

**கேள்வி:** கெட்ட குணத்தை நூறு வீதம் அகற்றினால் மறு பிறவியிலும் வரலாமா?

**பதில்:** நூறுவீதம் அழிக்கப்பட்டால் மறு பிறவியில் எழ மாட்டாது. மறு பிறவிக்குப் பல காரணிகள் உண்டு.

**கேள்வி:** ஏனைய மதங்களில் மாமிசம் உண்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதை விளக்கவும்?

**பதில்:** வேறு மதத்தினரும் மனத் தூய்மையடைந்துள்ளார்கள்.



நமக்கு பகவானின் வழிகாட்டுதல் மாமிசம் புசிப்பதை விடுவதே யாகும். வேறு மதத்திலும் பல ஆன்மீக மகான்கள் மாமிசம் புசிப்பதை விட்டுள்ளார்கள். நாங்கள் காலம், இடம், சூழல் ஆகியவற்றுடனே இதைப் பற்றி ஆராய வேண்டும்.

**கேள்வி:** தற்பெருமையை எவ்வாறு அழிக் கலாம்.

**பதில்:** தற்பெருமைக்கு அத்திவாரம் தாழ்மை மனப்பாங்கேயாகும். எமக்கு செயற்திறன் இல்லாவிட்டால் இருக்குமாப் போல் பாசாங்கு செய்வதே தற்பெருமையாகும். ஆகவே நாம் தாழ்வு மனப்பாங்கை அகற்ற வேண்டும்.

மங்கள ஆராத்தியுடன் முடிவுற்றது.

ஜெய்சாயிராம்

5.10.2014



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத் தாயின் தெள்ளமுதாம் திருக்காட்சி

தெய்வத் தாயின் தெள்ளமுதாம் திருக்காட்சி என்ற புனித நூலின் ஊடாகப் பெற்ற அற்புதமான அனுபவங்களை பக்த அன்பர்களுடன் பகிர்ந்து கொள்வோம். எண்ணற்ற முற்பிறவிகளில் நாம் ஆற்றிய பூர்வ புண்ணியங்களின் தவத்தால் இன்று தவமுடையார் தரிசிக்கும் புண்ணிய பூமியில் காலடி வைக்க சுவாமியின் அன்புக் கட்டளை பெற்றோம். இக்கூற்றை சுவாமி அழகாக வர்ணிக்கிறார். எனது சங்கல்ப்பமின்றி ஓர் அணுவும் அசைய மாட்டாது. புட்டபர்த்திப் பூமியில் உங்கள் காலடிபட நீங்கள் பல முற்பிறவிகளில் நிறைவேற்றிய நன்மையான கருமங்களின் தகமையே உங்களை ஈர்த்தது. இந்த உண்மையான கூற்றை என்றும் மறவாதீர்கள்.

இன்னும் சுவாமி அக மகிழ்ந்து அள்ளிச் சொரியும் அமுத வாக்கு: நீங்கள் இங்கே பெற்ற ஆசிகள் தக்க தருணத்தில் வெளி காட்டும். மலர்ந்து கனிதரும். சுவாமியின் அன்பு சொரியும் வாழ்த்துக்கள் உள்ளங்களை உருக வைத்து விழிநீர் விழிகளை மறைக்கிறது.

சுவாமி அளவிலா ஆனந்தத்தில் மூழ்கி அளிக்கும் கண் கொள்ளாக் காட்சி அதிஷ்டசாலியான பார்வையாளர்களை என்றும் இனிமையாகச் சுவைத்து நீங்காத நினைவில் ஆழ்த்தும் மறக்க முடியாத அனுபவமாகும். என்றும் கருணையே திருவுருவமாக விளங்கும். சுவாமியை நாம் நோக்கும் போது, அனைவரையும் இணைவற்ற, ஒப்புயர்வற்ற, சமநிலையான மனச் சாந்தியையும் தந்து, சக்தி வாய்ந்த உள்ளுணர்வான பேரானந்தத்தால் நிரப்பி ஆனந்தமடையச் செய்யும். நாம் சுவாமியின் திருவுருவத்தின் மேல் எங்கள் விழிகளைச் செலுத்தும் போது பெறும் தனது தெய்வீக உணர்வை, இயல்பை சுவையான



மொழிகளால் பொழிகிறார். எங்கள் செவிகளில் தெய்வீக உணர்வு இனிமையான ஓசையாக ஒலித்தது. அற்புதமான ஓசை செவிகளில் எழுப்பும் மணியோசையுடன் புனித யாத்திரை நிறைவெய்தியது.

சுவாமியின் அருளமுதம்....

- உங்கள் வதனங்கள் என்றும் புன்னகையே பொழியட்டும்
- வாடிடும் மலர்கள் எனக்குகந்ததல்ல. உங்கள் இதயங்களில் மலர்ந்த அன்பு மலர்களே நான் விரும்பும் மலர்கள்.
- நாமஸ்மரணை இறைவனுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் சாதனம்.
- இறைவனுடைய ஆசி உள்ளுணர்வாகவோ சமிக்ஜை யாகவோ வர முடியும்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு: திருமதி. சத்தியா கந்தவனம்.
யாழ் .முன்னாள் மகளிர் தலைவி
தெகிவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் சிகிச்சையாகலாம்

இறைவன் சங்கல்ப்பத்துடன் பிரபஞ்சம் ஓம் என்ற ஓசையுடன் படைக்கப்பட்டது. ஓம் என்ற பிரணவம் நாத பிரம்ம தரிசனம். ஏனைய ஓசைகள் எல்லாம் ஓம் என்ற ஓசையின் பரிணாமங்களேயாகும். அசைவு எங்கெல்லாம் இருக்குமோ அங்கு ஓசையும் இருக்கும். ஆனால் சகல ஓசைகளும் எமது காதுகளுக்குக் கேட்காது. ஓசைக்கு இராகம், தாளம், சுருதி, பாவம், இனிமை எல்லாம் அமைந்ததுடன் சங்கீதம் என்று சொல்கின்றோம். காலத்தால் அழியாதது கர்நாடக சங்கீதம். பொப் இசை சிறிது காலத்தில் மறைந்து விடும்.

மென்மையான, இனிமையான, பக்தி பூர்வ மான இசைக்கு உடல் உள ஆரோக்கியத்தை மேன்மை யாக்கும் சக்தி உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். இசை பதட்டத்தைக் குறைக்கும். உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கும் ஏனைய மருத்துவ சிகிச்சை முறைகளுடன் மருத்துவ இசைச் சிகிச்சையையும் சேர்த்தால் விரைவில் ஆரோக்கியம் ஏற்படும்.

இசையால் மயங்காதார் யாருமிலர், ஆனால் ஒருவருக்கு விருப்பமான இசை இன்னொருவருக்கு சத்தமாக இருக்கும். ஒலிபெருக்கிகள் ஓரளவிற்கு மேல் கூட்டி விட்டால் இனிமையான ஓசையும் அலறும் சத்தமாக மாறிவிடும்.

பிள்ளைகள் சிறு வயதில் சங்கீதம் பயின்றால் அவர்களின் மூளை வளர்ச்சி தூண்டப்படுகிறது. மொழி யாள்தலும் வளர்ச்சியடைந்து விடுகிறது. நபரிடை உறவும், தொடர்பாடல் திறனும் இசை பயில்வதன் மூலம் வளர்ச்சி யடைகிறது.

முதியவர்களின் மூளைத்தேய்வைக் குறைக்கும். இசை இவர்களின் ஞாபக சக்தியைக் கூட்டும். நரம்பியல் வியாதியால் பாதிக்கப்பட்ட மூளையின் செயற் திறனும் அதிகரிக்கும். இசை யாரையும் மகிழ்விக்கும். டோப்பமின் என்ற ஹார்மோனின் அளவு அதிகரிக்கிறது.

அமெரிக்காவில் பிரபல்யமான மாசசுசெற் வைத்திய சாலையில் இருதய நோயாளர்கள் இசை மூலம் தங்களது இரத்த அழுக்கம், இதயத்துடிப்பு, பதட்டம் ஆகியன சீராக்கப்பட்டுன.

நித்திரையை வருவிப்பதற்கும் இசை கருவியாக மாறுகிறது. பின்வரும் நல்ல செயல் விளைவுகளை தற்கால ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.


- பதட்டத்தைக் குறைத்தல்
- தியான நிலையை ஏற்படுத்தல்
- மூளைத்தளர்ச்சியை நிவர்த்தி செய்தல்
- மனநிலையை மேலோங்க செய்தல்
- அறிகைத் திறனைக் கூட்டுதல்
- நெருக்கடிகளை சமாளிக்க உதவுதல்
- சத்திரசிகிச்சைக்கு முன்பு சாந்தத்தை ஏற்படுத்தல்
- வாகனம் ஓட்டும் போது சாந்தத்தை அளித்தல்
- புற்று நோயாளிக்கு சாந்தத்தை அளித்தல்
- பாரீச வாதங்களின் பலவீனத்தை சீராக்கல்
- நீண்டகால முதுகு வலியைக் குறைத்தல்
- வேலைத்திறனை அதிகரித்தல்

ஆகியவற்றை விஞ்ஞான ஆராய்ச்சி யாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். எதுவா யிருந்தாலும், நம்பிக்கை விசுவாசம் இருந்தால் தான் பலிக்கும்

சிவனையே மகிழ்வித்த சாமகானம் மனதில் உள்ள சஞ்சலங்களை நீக்கி துன்பம் நீக்கும் உபாயமாகப் பண்டைய காலத்தில் இருந்துள்ளதாக நாம் அறிகிறோம். தேவார முதலிகளான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மூவரும் இறை இசையாம் தேவாரம் மூலம் பல நோய்களைக் குணப்படுத்தி அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளனர். இந்தப் பண்ணிற்கு சமனான இராகமான மாயா மாளவ கௌளனை உடலில் உருவாகும் நச்சுப் பொருட்களை நீக்க வல்லது என்று கூறியுள்ளார்கள். ஸ்ரீ குன்றக்குடி வைத்தியநாதன் ஆனந்த பைரவி ராகம் மூலம் கவிஞர் கண்ணதாசனின் உயர் குருதி அமுக்கத்தைக் குறைத்துள்ளார். ஒவ்வொரு ராகங்களும் வெவ்வேறு நோய்களைக் குணப்படுத்தக் கூடியன.

உதாரணமாக:

- நீரழிவுக்கு - பாகே ஸ்ரீ ராகம்
- உயர் குருதியமுக்கம் - ஆனந்த பைரவி
- ஞாபக மறதி - சிவரஞ்சனி
- பித்த ரோகத்திற்கு - சாரங்கா



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுநீரக நோய்களுக்கு - ரஞ்சனி
- கபால குத்திற்கு - மோகன ராகம்
- இருதய நோய்க்கு - சாருகேசி

இசை கற்கும் சிறு பிள்ளைகள் மிகுந்த கல்வியறிவு, ஞாபகசக்தி, ஒழுக்கம், சிறந்த ஆளுமையுடையவர்களாக தமது வருங்காலத்தில் மிளிர்வார்கள்

சுவாமியின் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் ஒருவன் வயலின் வாசிப்பதில் மிகவும் திறமையாக இருந்தார். அத்துடன் கர்வமும் மேலோங்கி விட்டது, ஒரு முறை சுவாமியின் முன்னிலையில் வயலின் வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. முடிவில் சுவாமி அவரைப் பாராட்டி, இசை என்றால் என்ன என்றொரு கேள்வியைக் கேட்டார். மாணவனுக்குச் சரியான பதில் கூறமுடிய வில்லை. இசை தெய்வீகமானது என்று சுவாமியே விளக்கினார். ஆகவே இசையில் கர்வம் எழக்கூடாது. இம் மாணவன் இரண்டு வருடங்கள் வயலினைத் தொடவே இல்லை. பின்பு சுவாமியே தனது வயலினைக் கொடுத்து எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு பக்க இசை கொடுக்கச் சொன்னார்.

திருவிளையாடல் படத்தில் "பாட்டும் நானே பாவமும் நானே பாடும் உன்னை நான் பாட வைத்தேனே" என்ற கண்ணதாசன் அவர்களின் பாடல் இதை ஆழமாகச் சித்தரிக்கிறது.

ஜெய் சாயிராம்

தொகுப்பு:
ஆசிரியருடன்
டினேசன் பேரானந்தராஜா
யாழ்ப்பாணம்.



# சமர்ப்பணம்

மனித மேம்பாடுகளுடன் இணைந்த தலைமைத்துவ பயிற்சியின் பின் வற்றாப்பளை மகா வித்தயாலய மாணவத் தலைவியின் சத்திய வாக்கு:

- அதிகாலையில் 4.30 க்கு எழுவோம்
- இந்நாளை நல்ல முறையில் நடாத்த இறைவனைப் பிரார்த்திப்போம்.
- காலைக்கடமைகளைச் செய்வோம்
- தியானம் செய்வோம்
- மனித நேயப் பண்புகளைக் கடைப்பிடிப்போம்
- அனைவரையும் சமமாக மதிப்போம்
- பெரியோர், பெற்றோர், ஆசிரியரை மதிப்போம்
- உணவு உண்ணுமுன் உணவை அளித்த கடவுளுக்கு நன்றி கூறுவோம்.
- இனிய சொற்களைப் பிரயோகிப்போம்
- பாடசாலை செல்ல முன் பெற்றோரை வணங்குவோம்
- நேரம் தவறாது பாடசாலை செல்வோம்
- வீதியொழுங்கை கடைப்பிடிப்போம்
- தேவையற்ற எண்ணங்களைத் தவிர்ப்போம்
- கோபத்தைக் குறைத்துக் கொள்வோம்
- பாடவேளையில் அமைதியாக பாடங்களை செவி மடுப்போம்
- நல்ல நூல்களை வாசிப்போம்
- வீதியில் வழி தெரியாது தவிக்கும் வயோதிபர்களுக்கு உதவுவோம்
- பகிர்ந்துண்ணுவோம்
- பெற்றோருக்கு உதவுவோம்
- கொலை, களவு, பொய், கோபம் இவற்றை தவிர்ப்போம்
- எண்ணம், சொல், செயல் என்பவற்றை நன்றாக அமைப்போம்
- நல்ல செயல்களில் ஏற்படும் தடைகளை அகற்றுவோம்
- பலவீனத்தை அகற்றுவோம்
- தாழ்வு மனப்பாங்கை நறுக்குவோம்
- ஏழைகட்கு உதவுவோம்
- உயர்வு தாழ்வு இன்றி செயற்படுவோம்
- நித்திரைக்கு முன்பும் படிக்க முன்பும் தியானம் செய்வோம்.

(வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் 5.6.2013 இல் மனித மேம்பாடுகள் இணைந்த தலைமைத்துவம் என்ற பயிற்சிப்பட்டறை மாணவர் தலைவர்களுக்கு நடந்தது. குழுவின் தலைவி முன் வைத்த சமர்ப்பணமே இதுவாகும்)




89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலிகித நாம யக்ஞம்



பகவானின் அருளுரைகளிலிருந்து

தெய்வீகத்தை ஓர் உணர்வு அனுபவமாக்க வேண்டு மானால் எமது செயல்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணிக்க வேண்டும். வேறு ஒரு ஆன்மீக சாதனையும் தேவையில்லை. வேறு விதமான வழிபாட்டுக்களை தவிர்க்க வேண்டு மென்பது இதன் அர்த்தமல்ல. என்ன சாதனை செய்தாலும் இதய பூர்வமான அர்ப்பணிப்புடனும் மனக் குவிப்புடனும் செய்ய வேண்டுமென்பதே அர்த்தம்

உதாரணமாக லிகிதஜெபம் என்ற சாதனையைப் பார்ப்போம். நாம் இதை இயந்திரம் போல் செய்யக்கூடாது. நாமத்தை எழுதத் தொடங்கும் பொழுது நாமத்தை ஆழமாகப் பதிந்து சிந்தித்தல் வேண்டும். நாமத்தை வாயால் சொல்லவும் வேண்டும். இத்துடன் தான் கைகளால் எழுத வேண்டும். இப்படிச் செய்தால் இலிகித ஜெபம் ஒரு தவச் செயலாக மாறுகிறது. சிலர் கார்பன் வைத்தும் எண்ணிக்கைக்காக எழுதுவார்கள். இது இலிகித ஜெபம் அல்ல. நாமம் இதயத்தில் பதிந்து விட்டால் அதிலிருந்து எத்தனை பதிவுகளும் எடுக்கலாம்.

ச.ச.அருளமுதம் 28 (18 ஜுலை 1995)

தற்காலத்தில் மக்கள் அருளுரைகளைக் கேட்பதில் மட்டும் திருப்தியடைந்து விடுகிறார்கள். ஸ்ரீனிவாசஇராகுலன் இலிகித ஜெபத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். இது எண்ணம், சொல், செயலில் ஒருமையை ஏற்படுத் துவதை உய்விக்கிறது. இம் மூன்றும் தூய்மையான இதயத்துடன் முன்னெடுக் கப்பட வேண்டும்.

ச.ச.அருளமுதம் 26 (31 அக்டோபர் 1993)

தொடக்கத்தில் அகங்காரத்தை ஒழிக்க வேண்டும். அப்படியாகில் குரோதம் அடங்கி விடும். கடமையைச் செய்ய வேண்டும். ஒரு நாளும் அகங்காரத்தை தலைதூக்க விடக்கூடாது. ஒருவருக்கு ஒருவர் உதவும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்களின் வேலையை ஆனந்தத்துடன் செய்ய வேண்டும். நட்பு மனப்பாங்கை வளர்க்க வேண்டும். இப்படியாகச் செயற்பட்டாலே இலிகித ஜெபத்தின் பலனைப் பெற முடியும். இக் காலத்தில் உலகில் பல இடங்களில் நில நடுக்கம், பஞ்சம், வெள்ளப்பெருக்கு, எரிமலைக் குமுறல், போன்ற இயற்கை அனர்த்தங்கள் நிகழ்கின்றன. என்ன காரணம்? இதயத்தில் ஏற்படும் குழப்பமே நிலநடுக்கமாக வெளிப்படுகிறது. நல்ல எண்ணங்களால் மனதை நிரப்பி, நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும். கடவுளின் நாமத்தை இடைவிடாது சொல்ல வேண்டும். ஆகாயம் தெய்வீக நாம அலைகளால் நிரப்பப்பட்டால் சூழலும் தூய்மையடைந்து விடும். மாசில்லாத காற்றைச் சுவாசிப்ப வர்களின் எண்ணமும் தூய்மையானதாகவே இருக்கும். மாசடைந்த காற்றை நாம் தூய்மைப்படுத்த வேண்டும்

ச.ச.அருளமுதம் 26 (31 அக்டோபர் 1993)

ஜெய் சாயிராம்

**இச் சாதனை இளைஞர் அணியினரைத் தீவிரமாகச் செய்யும்படி அறிவித்தல் பிரசாந்தி நிலையத்திலிருந்து வந்துள்ளது. எழுதிய நாமத் தாள்கள் பிரசாந்தி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.**



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானிடம்



**ஏன் பதட்டமடைகிறாய்?**

உனது பணிகள் எல்லாவற்றையும் என்னைக் கவனிக்கவிடு. ஆனால் என்னிடம் சரணாகதியடைய வேண்டுமென்ற ஒன்றையே எதிர்பார்க்கின்றேன். பின்பு உனக்கு ஒரு கவலையுமில்லை. எல்லாப் பயங்களுக்கும் முட்டுக் கட்டைகளுக்கும் பிரியாவிடையை அளித்து விடு. நீயோ என் மீது முழு நம்பிக்கையில்லையே மாறாக என்னைக் கண்மூடி நம்ப வேண்டும்.

கஷ்டங்களிலிருந்தும் சகல பிரச்சினைகள், கவலைகள் எல்லாவற்றிலுமிருந்து எண்ணங்களை என் பக்கம் திருப்பி:

"இறைவா உனது சங்கல்ப்பமே நிகழட்டும் சிந்தனையும் உமதேயாகட்டும். எனது கவலைகள் பிரச்சினைகள் யாவையும் எடுத்துள்ளீர், உன்னதமான முடிவையே தருவீர். அதற்காக நான் நன்றி கூறுகின்றேன்" என்று பிரார்த்திக்க வேண்டும்.

"செயலின் விளைவைப் பற்றிச் சிந்திப்பதே சரணாகதிக்கு மாறானதாகும். உனக்கு விரும்பியபடி பலன் கிடைக்கவில்லையென்று கவலைப்பட்டாயானால், என் மீது என் அன்பின் மீது நம்பிக்கையில்லை யென்பதையும், உனது வாழ்வு என் கையில் உள்ளதென்பதையும் என்னிடமிருந்து ஒன்றும் தப்ப முடியாதென்பதையும் நம்பவில்லை யென்பதையே குறிக்கிறது".

"என்ன நடக்கப் போகுதோ? என்ன மாதிரி முடியப் போகுதோ என்றெல்லாம் சிந்தித்தாயானால் என்னிடம் நம்பிக்கையில்லையென்பதே அர்த்தம். பகவான் செய்யட்டும் என்று விட்டால் ஒரு வித அழுத்தமும் ஏற்படாதே நான் உன்னை வழிநடத்துவேன். சரணாகதி பூரணமாயின் நீ விரும்பிய பாதையை மாற்றி வேறு நல்ல பாதையில் கொண்டு செல்ல வேண்டுமாயின் நான் உன்னை என் கைகளிலேயே ஏந்திச் செல்வேன்".

"உன்னைக் குழப்புவது, உன்னுடைய சிந்தனை, ஆற்றல், விறுமைத்தனம் நான் செய்து முடிப்பேன் என்ற மனச்செருக்கும் ஆகியவையேயாகும். கண்ணைமூடி "பகவானே நீரே செய்யும் என்று என்னிடம் முழுமையாக விட்டால் கூடிய அளவில் கிடைக்கும். ஆனால் நீங்களோ துன்பம் வந்தால், உங்களின் விருப்பப்படி என்னை செயற்படும்படி பிரார்த்திப்பீர்கள். என்னை உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு ஆடக் கேட்பீர்கள். இது தவறு நோயாளி வைத்தியரிடம் போய் என்ன மருந்து தர வேண்டுமென்று கேட்பதைப் போல் நடக்காதீர்கள். இப்படிச் செய்யாதீர்கள். மிகவும் நெருக்கடியான நிலையிலும் சரி "ஆண்டவா இச் சோதனையைத் தந்ததற்கு உன்னைப் புகழ்ந்து நன்றி கூறுகிறேன். நெருக்கடியை நீரே தகுந்த முறையில் தீர்த்து வைக்க வேண்டும். எனக்கு எது நன்மை பயக்கும் என்று உமக்குத்தானே தெரியும்"என்று பிரார்த்திக்க வேண்டும்".

"சில வேளைகளில் நெருக்கடிகள் கூடிக் கொண்டும் வரலாம். பதட்டமடையாதே. கண்ணை மூடி முழு நம்பிக்கையுடன் இதய பூர்வமாக "எல்லாம் உமது சங்கல்பமே" அதன்படி நடக்கட்டும் என்று பிரார்த்திக்கவும். முழுமையான சரணாகதிக்கு நான் செவி சாய்த்து நல்லதையே ஓர் அற்புத நிகழ்வாக முடிப்பேன். நீ என் மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும்".

பகவான் சத்திய சாயி பாபாவின் கூற்றுக்கள்

# சரணாகதி




89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம்



சுவாமியுடனான எனது அனுபவங்கள்

நான் சுவாமியை 2006 ஆம் ஆண்டிலிருந்து தீவிரமாக சுவாமியை நேசிக்க தொடங்கினேன். அன்றிலிருந்து சுவாமியின் அருளுரைகள், வழிகாட்டல்கள் அனைத்தையும் தீவிரமாக எனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகின்றேன். 2006 ஆம் ஆண்டில் இருந்து 9.2.2014 வரை அதிக அளவான சுவாமியின் அற்புதங்கள், அனுபவங்கள் என்னிடம் புதைந்து இருக்கின்றன. அவற்றை எல்லாவற்றையும் இங்கு குறிப்பிட முடியாது. அவற்றில் நான் அனுபவித்துக் கொண்டு இருந்த சில உண்மைகளை கட்டாயம் வெளிப்படுத்த வேண்டிய தேவை இவ்விடத்தில் காணப்படுகிறது.

14.1.2014 திகதி இரவு 2 மணிக்கு ஒரு கனவில் கணணி ஒன்று உள்ளது. அதில் சுவாமியின் அதிகளவான பக்தர்கள் காணப்பட்டனர். பின் அந்த கனவில் ஆங்கிலத்தில் அடி மனம் என்ற ஆங்கில வசனம் காணப்பட்டது. பின்னர் கண் விழித்து விட்டேன். பின்பு அடிமனம் என்ற வாக்கியம் தொடர்ந்து என்னை தூண்டி விட்டது. நன்றாக கண் விழித்த நிலையில் அமைதியாக இருந்த போது எனது இதயத்தில் இருந்து பின்வரும் வார்த்தைகள் சுவாமியால் என்னிடம் தொடர்ந்து கூறப்பட்டது. இதயத்திலிருந்து வந்த வார்த்தைகள் என் காதில் நன்றாக ஒலித்துக் கொண்டு இருந்தன. அவையாவன நீயே சாயி... நீ நல்லவன்.. நீ எனக்கு நெருக்கமானவன்.. நீ எனது நிறுவனத்தை வழிநடத்து,. இதயம் சாயி... உதயம் சாயி ... போன்ற வார்த்தைகள் வந்து கொண்டன. இவை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இந்த வார்த்தை பிரயோகத்தை கேட்டதும் எனக்கு உறக்கம் வரவில்லை. இந்த விடயத்தை உடனடியாக எனது நாட்குறிப்பேட்டில் எழுதி வைத்துள்ளேன். சுவாமியால் கூறப்பட்ட வார்த்தைகள் இவ்வுலகில் விலை மதிக்க முடியாத சொத்துக்கள் என்பதை குறிப்பிடுகின்றேன். இது நமது சுவாமியால் எனக்கு வழங்கப்பட்ட சான்றிதழ் களாகும். மற்றும் இவை பரிசில்களாகும். இவற்றை யெல்லாம் தவிர இந்த உலகத்தில் வேறு என்ன தேவை, எனது அன்பான சாயி சகோதர சகோதரிகளே அனுபவத்தை நீங்களும் அனுபவியுங்கள். எல்லோர் இதயத்திலும் பகவான் இருக் கின்றார் என்பது மட்டும் அல்ல எல்லோரும் கடவுள் தான் என்று சுவாமி கூறுகின்ற வார்த்தை எனது அனுபவத்தின் மூலம் உண்மை என்று உணர்கிறேன். இதை மனிதர்கள் உணராது இருக்கின்றார்கள் என்று சுவாமி தனது அருள் உரைகளில் குறிப்பிடுகிறார். சுவாமி எனக்கு கூறப்பட்ட இந்த வார்த்தையை நினைத்துக் கொண்டு இருக்கிறேன். இதன் பின்பு ஒரு நாள் சுவாமியின் இணையத் தளத்தை பார்வை யிட்ட போது அதில் ஒரு வாசகம் கூறப்பட்டு இருந்தது, சுவாமி பல பக்தர்களுக்கு கூறியிருக்கும் வார்த்தை **"எனது இருப்பிடம் பிரசாந்தி நிலையம் அல்ல உங்களது இதயமே எனது வீடு"** என்று குறிப்பிட்டு ள்ளார். இப்படியாக சுவாமி கூறுகின்ற அனைத்தும் நமது வாழ்வை முன்னேற்றுவது மட்டுமல்ல, வீடு பேற்றினை அடையச் செய்வது என்ற கருத்தை காட்டுகின்றது.

மேலும் 2006 ஆண்டில் சுவாமியை அதிகமாக நேசித்தேன். அதாவது எனது சிந்தனை முழுவதையும் சுவாமியின் மீது செலுத்தியிருந்தேன். பின்பு 22.8.2007 அன்று எனக்கு பைத்தியம் ஏற்பட்டது. இந்தப் பைத்தியம் பிடித்ததனால் எனது உடம் பையும் எனது மன நிலையையும் அதிகமாக பாதித்தது. அதாவது இந்த நோய் தாக்கத்தினால் நான்பட்ட துன்பங்கள் வார்த்தைகளால் எழுத முடியாது தடுமாறு கின்றேன். மூன்று தடவைகள் விசம் அருந்தி தற்கொலை செய்ய முயற்சி மேற் கொண்டேன். பின்பு வைத்தியசாலையில் அவசரபிரிவில் 2 வாரங்கள் சிகிச்சை பெற்று வந்தேன். இந்தக் காலப்பகுதியில் எனக்கு



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய நினைவற்று இருந்தேன். பின்பு நமது சுவாமி என்னை மரணத்தின் பிடியில் இருந்து தூக்கி எறிந்து விட்டார். பின்பு உயிர் பிழைத்தேன். ஆனால் நோய் எனக்கு சுகமடையவில்லை.

பின்பு 2008 ஆம் ஆண்டு சுவாமி யிடம் புட்டபர்த்திக்கு சென்றேன். சுவாமியை தரிசித்து பின்பு நாடு திரும்ப சென்னைக்கு வந்தேன். மீண்டும் எனக்கு முன்பு ஏற்பட்ட நோயினை விட அதிகமாக நோய் ஏற்பட்டது. அதன் தாக்கம் அதிகமாக இருந்தது, அதாவது நான் விமான நிலையத்திற்கு சென்று விமானத்தில் ஏறினேன். அங்கு நான் விமானத்தில் உள்ளிருந்து பல பிரச்சினை களை ஏற்படுத்தினேன். விமான கதவுகளை காலால் உதைத்துத் தாக்கினேன். பின்பு எனது இரண்டு கைகளை பின்பக்கத்தில் வைத்து விமான ஊழியர்கள் பாதுகாப்பு பிரிவினர் விமானத்திலிருந்து இறக்கி விட்டார்கள். இதனால் விமானம் புறப்படத் தாமதமாகியது. பின்பு என்னை இந்திய தனியார் மனநல மருத்துவ மனைக்கு கொண்டு சென்றார்கள். பின்பு என்ன நடந்தது என்று எனக்கு சுயநினைவு இல்லா திருந்தேன். அங்கு எனக்கு சிகிச்சை அளித்தார்கள். பின்பு நோய் குணமடைந்து நாடு திரும்பினேன். பின்பு இதுவரையும் நோய் ஏற்படவில்லை. ஆனால் 2008 தொடக்கம் 2013 ஆண்டு வரைக்கும் மனநிலை குன்றிய நிலையில் இருந்தேன்.

இந்த நிலையில் சீர்டி சாயியின் வசனம் எனக்கு நினைவுக்கு வந்தது, "உலகத்திலுள்ள நோய்களும் என்னில்தான் உள்ளது. அவற்றுக்கான நிவாரணமும் என்னில் தான் உள்ளது" என்று அந்த வசனம் ஆகும். இந்த வசனத்தை நான் அடிக்கடி நினைப்பதுண்டு நான் நமது சுவாமியிடம் எனது மனநோயை தீர்க்கும்படி கேட்க வில்லை.

மேலும் 30.1.2014 திகதி அதிகாலை நான் தியானத்தில் ஆழ்ந்திருந்த போது எனது உடம்பில் இருந்து நான் உடம்பு அல்ல என உணர்வு வந்ததும் நமது சுவாமியவர்கள் எனக்கு பின்புறத்தில் இருந்து சீமெந்து தரையில் 8-10 தடவைகள் தனது கையால் அதிக சத்தத்துடன் அடித்தார். தியானத்தில் எனது சிந்தனையில் சுவாமி நான் உனக்குப் பின்னால் இருக்கின்றேன் என்ற உண்மையை நிரூபித்து சென்று விட்டார். இந்த சம்பவங்கள், அற்புதங்கள் அனைத்தும் சுவாமி பகவானின் இடத்தில் இடம் பெற்றது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுகிறேன். அதாவது நான் பகவானின் மண்டபத்தில் தினமும் உறங்கிக் கொண்டு வருகிறேன்.

2014.01 மாத காலப்பகுதியில் நான் தியானம் செய்து கொண்டிருந்த போது நமது சுவாமியவர்கள் எனக்கு ஒரு பெயர் வைத்துள்ளார். அதாவது நமது சுவாமி உனது பெயர் சத்தியம் என்று கூறினார். இதற்காகவே இந்த அனுபவ உரைக்கு சுவாமி எனக்கு சூட்டிய பெயரான சத்தியத்தை தலைப்பாக வைத்துள்ளேன் என்பதை குறிப்பிடுகின்றேன். மற்றும் மேலும் 2014 பெப்ரவரி மாத காலப்பகுதியில் தியானத்தின் போது சுவாமி அவர்கள் எதிர்வரும் காலப்பகுதியில் சுவாமியின் நிறுவனத்தில் நான் வகிக்கவுள்ள பதவி ஒன்றையும் எனக்கு குறிப்பிட்டுச் சொன்னார். இந்தப் பதவி என்ன என்பது இவ்விடத்தில் நான் குறிப்பிட விரும்பவில்லை.

மேலும் சுவாமி தனது அருளமுத உரையில் குறிப்பிட்டுள்ளார். தெய்வத்தியானம் எனும் தூய ஏரியில் மட்டும் நீந்தி விளையாடு. புலன் இன்பம் எனும் அழுக்கு குட்டையில் விளையாட ஏன் சபலம் கொள்கிறாய் என்று குறிப்பிட்டுள்ளார். எனது சாயி சகோதர சகோதரிகளே எனது அனுபவத்தை நீங்களும் அனுபவியுங்கள். சுவாமி கூறிய இந்த தியானத்தை பயின்று அல்லது வாழ்க்கையில் கடைப் பிடியுங்கள். சுவாமி நிறைய அனுபவங்கள் உங்கள் நினைவை தொட்டுச் செல்லும்.

மேலும் இதே காலப்பகுதியில் நான் தியானத்தில் இருந்த போது உனக்கு மன நோய் இல்லை என்று நமது சுவாமி கூறினார். இப்போது எவ்வித நோயும் இல்லாமல் நமது சுவாமியின் கருணையால் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். வைத்தியர்கள் குணமாக்க முடியாத நோயை நமது சுவாமி எனக்கு குணமாக்கியுள்ளார். இது தான் சுவாமியின் கருணை, அவர் கடவுள் அல்லவா? அவர் சர்வ சாயி, அவர் ஒரு மனிதனில் உறைகின்ற ஆத்மா அல்லவா. அவர் 1000 தாய்மாரின் கருணையை அல்லவா கொண்டுள்ளார். நமது சுவாமி அவர்கள் தனது அருளமுத உரையில் குறிப்பிட்ட ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடுகின்றேன். எவன் ஒருவன் என்னில் பூரண விசுவாசம் கொண்டவனாக இருக்கின்றானோ அவன் ஏதாவது ஒன்றைக் கேட்டால் நான் அவனுக்காக 100 கேட்காமலே கொடுக்கத் தயாராக இருக்கிறேன். என்று கூறுகிறார். இது தான் நமது சுவாமியின் கருணை. அவர் கருணைக்கடல் அல்லவா.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நான் நமது சுவாமியின் உருவத்தை தொடர்ந்து சிந்தனையில் வைத்திருப்பதால் அவரை தியானிப்பதன் மூலமும் அவரை இடையுறாது வணங்குவதன் மூலமும் எனக்கு எவ்வித ஆசையும் இல்லை என்பதைக் குறிப்பிடுகிறேன். நமது சுவாமி உருவத்தின் அத்தகைய மகிமை அல்லவா? அவர் ஆனந்தக் கடல் அல்லவா? இந்த இடத்தில் பகவான் சீரடி சாயியின் வாக்கு ஒன்றை இங்கு நினைவு படுத்துகிறேன். **"என்னை நினைவில் வைத்திருப் பவர்கள் எங்ஙனம் உலகப் பொருட்கள், உணர்ச்சிகள் இவைகளில் கவன முள்ளவர்களாக இருக்க முடியும்"** என்று கூறியுள்ளார். இது உண்மையான எனது அனுபவத்தின் ஊடாக உணர்கின்றேன். நமது சுவாமியை தியானிப்பதன் ஊடாக எனக்கு அகங்காரம், கோபம், பொறாமை மாயமாய் சென்று விட்டன.

சுவாமி தனது அருளமுதத்தில் குறிப்பிட்டுள்ளார். **தெய்வத்தை தியானிக்கும் போது பொறாமை, பேராசை அனைத்தும் அழிந்து** விடும். அனைத்தும் அழிந்து விடும். என்ற வார்த்தை எனது அனுபவத்தின்கூடாக உணர்கிறேன். இது தெய்வ வாக்கு அல்லவா? நான் எனது வாழ்க்கையில் உண்மை பேசுகிறேன். மற்றவர்களுடன் உரையாடும் போது சத்தியத்தை வலியுறுத்துகிறேன். சத்தியம் சத்தியத்திற்கு அடி பணியுமே தவிர வேறு பொய்மைக்கு அடி பணிய மாட்டாது. இதனால் தான் சுவாமி எனக்கு சத்தியம் என்று பெயரை சூட்டியுள்ளார். என்று நினைக்கிறேன்.

மேலும் நான் நமது சுவாமியை நல்ல தாயாக, தந்தையாக, குருவாக , தெய்வமாக இதற்கு மேலான எனது நண்பனாகவும் சுவாமியை பயன்படுத்துகின்றேன். அனுபவிக் கின்றேன்.

2014. ஜனவரி மாத காலப்பகுதிக்குள் ஒரு நாள் நான் சுவாமியிடம் அதிகமாக அழுது புலம்பினேன். அது என்ன வென்றால் இந்த உலகத்தில் சுவாமி **உங்களை விட்டால் எனக்கு வேறு யாரும் இல்லை** என்று எனது வாயால் கூறிய போது: நமது சுவாமி எனது வாயால் **எனக்கு உன்னை விட்டால் எனக்கு ஆள் இல்லை** என்று கூறிவிட்டார். சுவாமி கூறிய வார்த்தையில் இந்த வசன அமைப்பில் எழுதுகின்றேன். கேட்டீர்களா சாயி சகோதர சகோதரிகளே நமது சுவாமியை இந்த உலகம் எல்லாம் முயற்சி செய்தாலும் நமது சுவாமி பற்றிய மர்மத்தை அறிய முடியுமா? அது நடக்காத காரியம் அல்லவா.

நமது சுவாமி 1008 நாளாந்த சிந்தனையொன்றினை கூறுகிறார். என்னவென்றால் நமது சுவாமியைப்போல் வாழ்க்கை நடத்துபவர்கள் மட்டுமே அவரது மர்மத்தை குறிப்பிட்டளவு அறிந்து கொள்ள முடியும் என்று கூறுகிறார்.


எனது பிரார்த்தனைகள் தினமும் நான் சுவாமியைப் போல் வாழ்க்கை நடாத்தி முடிக்க விரும்பு கின்றேன் என்று நமது சுவாமியிடம் அடிக்கடி கூறுவேன். எனது வாழ்வின் இலக்கு பிறருக்காக வாழ்கின்றேன். ஏனெனில் நான் கிராமப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற காரணத்தினாலும் மற்றும் நமது சுவாமியின் கருணையால் இந்த துன்பங்கள் 40 வருட காலப்பகுதியில் அனுபவித்த காரணத் தினாலும் என்று உறுதிபட கூறுகின்றேன்.

சுவாமி கூறுகிறார் **"நோய் உள்ளவர் களும், துன்பப்படுகின்றவர்களும் செய்யும் சேவை நேரடியாக என்னை வந்தடையும்"** இதை கருத்தில் கொண்டு உங்களது வாழ்க்கையை பிறருக்காக செலவிடுங்கள். நமது சுவாமி அகிலாண்ட நாயகன் அல்லவா. மற்றும் நான் கடந்த மாதம் ஓர் இரவில் கண்ணை விழித்த நிலையில் எனக்கு சுவாமி சொல்கிறார் **"அடிச்சு சொல்லு காமம் இருந்தால் சுவாமி வரமாட்டார் என்று கூறு"** இந்த வசனம் சுவாமி கூறியபடியே எழுதுகின்றேன்.

மற்றும் சுவாமி தனது 1008 நாளாந்த நற்சிந்தனையில் குறிப்பிட்டுள்ளார். அதாவது "தெய்வீகமானது தரமற்ற பாத்திரங் களையோ அல்லது வீணான காட்சிப் பொருட்களையோ அலங்கரிக்க மாட்டாது எனவும் மற்றும் பரிசுத்தமற்ற உடல்களில் எனது தெய்வீகத்தை உட்செலுத்த மாட்டேன். என்று சுவாமி கூறுகிறார். இதை எனது அனுபவத்தின் பயனாக சொல்கின்றேன்.

எனக்கு ஏற்பட்ட தெய்வீகம் பற்றி தொடர்ந்து எழுதுகின்றேன். 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எனது உடல் சில நாட்கள் காற்றில் பறப்பது போன்ற உணர்வு காணப்பட்டது. அது ஒரு ஆனந்தமாக இருந்தது.


அதே காலப்பகுதியில் ஒரு நாள் அலுவலகத்தில் கடமையில் மேற்கொள்ளும்



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போது நான் கதிரையில் உட்கார்ந்த போது எனது உடலில் ஏற்பட்ட இன்பமானது 5-10 நிமிடங்கள் வரை நீடித்தது நிலைத்தது. நான் சேட் றவுசர் மற்றும் பாட்டா என்பன அணந்திருந்த போதிலும் இவை எல்லாம் என் உடம்பில் இருக்கின்றதா என்ற உணர்வு இல்லாமல் நான் தொடர்ந்து பல நிமிடங்கள் இன்ப வெள்ளத்தில் தொடர்ந்து மூழ்கினேன். இந்த இன்ப சொர்க்கத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது தடுமாறுகின்றேன். இதை தொடர்ந்து அனுபவிக்க சுவாமி விரும்ப வில்லை. என்னவோ தெரியாது, நமது சுவாமி அதை நிறுத்தி விட்டார். மீண்டும் பழைய நிலைக்கு வந்து விட்டேன். இது நமது சுவாமி குறிப்பிடுகின்ற பேரானந்தம் அல்லவா இந்த விடயம்.

2008 ஆண்டு காலப்பகுதியில் எனது உடலிலிருந்து அபூர்வமான அலைகள் 4-6 நாட்கள் தொடர்ந்து வெளியேறிக் கொண்டி ருந்தன. இந்த அலை எனக்கு இன்பத்தை ஏற்படுத்தவில்லை. விளங்கிக் கொள்ள முடியாத ஒரு மர்மமாக இருந்தது. என் உடம்பிலிருந்து ஒரு வித அலை வெளியேறு வதை என்னால் நன்றாக உணரக்கூடியதாக இருந்தது. பின்பு குறிப்பிட்ட நாட்களில் இவை அனைத்தும் நின்று விட்டன. இங்கு நான் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் நமது சுவாமியின் மர்மங்கள். என்பதை கவனத்திற் கொள்ளுங்கள். அதாவது மனிதன் தெய்வீக மானவன் என்பதை குறிப்பிடுகின்றேன்.

8.2.2014 திகதி அதிகாலையில் சுவாமி எனக்குள்ளே இருந்து பேசினார். யமன் உனக்கு வழக்குப் போட்டிருக்கிறான் என்னிடம் கூறினார். அதாவது என்னை தூக்கு மேடையில் ஏற்றுவதற்காக என்றார். அதாவது இது எனது மரணத்தை குறிப்பிடுகின்றார். அதாவது எனது யாதகத்தின்படி எனக்கு குறுகிய ஆயுள் என்பதை இங்கு குறிப்பிடுகின்றேன். இவற்றையெல்லாம் விடுத்து சுவாமி என்னிடம் சொன்னார். "எனது உயிர் நீ என்றார்" இது தான் நமது சுவாமியின் நேசமாகும். இது தான் அவரின் அன்பு வார்த்தையாகும். இந்த சம்பவங்கள் விளக்க வார்த்தைகள் போதாது என்பதை குறிப்பிடுகின்றேன். பகவான் சீரடி சாயி கூறிய வார்த்தைகளில் ஒன்று எனது நேசத்திற்குரியவர்கள் யாரென்றால் தங்களது வாழ்வை பிறருக்காக வாழ்கின்ற வர்கள்.

9.2.2014 அதிகாலையில் மீண்டும் சுவாமி எனக்குள்ளே இருந்து பேசுகின்றார். அது என்னவெனில் நீ எவ்வளவு காலம் உயிர் வாழ விரும்புகிறாய் என்று சுவாமி கேட்டார். பின் நான் யோசித்தேன் தற்போது 40 வயது என்று சிந்தித்து பின்பு சொன்னேன் 60 வயது என்று சொன்னேன் பின்பு 70 வயது என்று சொன்னேன். பிறகு பார்ப்போம் என்று சொன்னேன். இங்கு சுவாமி சொன்ன மிக முக்கியமான வசனம் என்ன வென்றால் உனக்காக நான் எதையும் செய்வேன் என்றார். இது சுவாமி கூறியது. இது இங்கு சுவாமியின் நமது நேசத்தின் அடையாளம் அல்லவா. அவர் அற்புத நாயகர் அல்லவா. நான் இந்த வயது மட்டும் வாழ வேண்டும் என்ற காரணம் என்னவென்றால் பிறருக்காக சேவை செய்து ஆயுள் முழுவதையும் முடிக்க விரும்புகிறேன் என்பதற்காகவும் என்று இந்த இடத்தில் குறிப்பிடுகிறேன்.

மேலும் சுவாமி கூறுகிறார்: **"என்னிடம் வருபவர்கள் அற்ப சொற்ப ஆசைகளை என்னிடம் கொண்டு வருகிறார்கள் என்றும் மற்றும் நான் கொடுக்க வந்ததை கேட்காமல் உலக ஆசைகளையே கேட்கிறார்கள்"** என்று குறிப்பிடுகிறார். அன்பான சாயி சகோதர சகோதரிகளே நமது சுவாமியுடன் நெருக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள். நமது சுவாமி நமக்கு தர வந்தது வீடு பேறு ஆகும். இது அவரது பிரதான நோக்கமாகும். எனவே நமது பிறவிக்கடலில் இருந்து விடுதலை பெற சுவாமியை இறுகப் பற்றிக் கொள்வோம்.

ஜெய்சாயிராம்

வே.பிரேமச்சந்திரன்
வீரமுனை சாயி நிலையம்
மட்டக்களப்பு

(2014 தேசிய சாயி இளைஞர் மாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கட்டுரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதாரம்

**அவதாரம்** என்ற சொல் **"அவதரணம்"** என்ற சொல்லிலிருந்து வந்தது. அவதரணம் என்றால் இறங்குவது என்று பொருள். பூவுலகில் வாழும் மக்களை தெய்வீகத்துக்கு உயர்த்துவதற்காக பகவான் அவதரிக்கிறார். எவ்விதமான பயமோ தயக்கமோ இல்லாமல் பக்தர்கள் தன்னை அணுகுவதற்கு வசதியாக எல்லா மனிதர்களைப் போன்ற நடையுடை பாவனைகளை கைக்கொள்கிறார்.

ஒரு முறை டாக்டர்.கோகக் அவர்கள் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிடம் அவதாரத்தின் சிறப்பியல்புகள், பண்பு நலன்கள் யாவை என்று கேட்டார். அவதாரங்களுக்கு 16 கலைகள் உண்டு, மனிதர்களுக்கு 9 கலைகள் மட்டுமே உண்டு. பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொட்டுணர்தல் ஆகிய ஐந்து இயல்புகளும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவானவை.

மனிதர்களுக்கும், அவதாரங்களுக்கும் மனம், இதயம், புத்தி நுட்பம், உள்ளுணர்வு ஆகிய நான்கு கலைகள் பொதுவானவை. இந்த ஒன்பது போக மீதியுள்ள ஏழு கலைகள் அவதாரங்களுக்கு மட்டுமே உரியவை. அவையாவன:

- முயற்சிக்குத் தக்க அருள் புரிதல்
- பெறுபவருக்கு தகுதி /தகுதியின்மை கருத்தில் கொள்ளாது தனிப் பெருங்கருணை
- சமூகத்தில் ஓர் புதிய வாழ்க்கை முறையை உருவாக்குகின்ற ஆற்றல்
- நல்லதற்கு பாதுகாப்பு இல்லாத போது அத்தகைய உள்ளார்ந்த நல்லவற்றை ஆதரித்து காக்கின்ற ஆற்றல்
- தீயனவற்றை அழிக்கக் கூடிய ஆற்றல்
- தனது திரு உருவத்தையும் திருநாமத்தையும் பக்தர்கள் ஆத்மார்த்தமாக நினைத்த மாத்திரத்தில் உருவமாகவோ, ஆத்மீகமாகவோ பிரசன்னமாகிற ஆற்றல்
- தனது திருநாமத்தால் பக்தர்களின் பிரச்சனைகளை தீர்க்கின்ற ஆற்றல்

**அவதார புருஷர் என்பவர் யார்?**

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் கீழ்க்கண்ட பண்புகளை விளக்கியிருக்கிறார்.

- அவதார புருஷர் என்பவர் உலகத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் உடையவர். அவரை ரிஷிகள், முனிவர்களுடன் ஒப்பிட முடியாது. ரிஷிகள் கலங்கரை விளக்கம் போல வழிகாட்டிகளாக விளங்கு கிறார்கள். அவதார புருஷர்கள் நாம் சம்சாரப் பெருங் கடலை கடப்பதற்குரிய பெரிய தோணிகளைப் போன்ற வர்கள்.
- அவதார புருஷர்களின் சக்தியும் ஆற்றலும் அளத்தற் கரியது. மக்களை இந்த யுகத்தில் மட்டுமல்லாது பல யுகங்கள் கடந்த பிறகும் சரியான பாதையில் செல்வதற்கு வழிகாட்டிகளாக இருக்கின்ற ஆற்றல் அவர்களுக்குண்டு.
- தங்களது பூத உடலை நீத்த பிறகும் மனித குலத்தைக் காக்கக்கூடிய ஆற்றல் அவர்களுக்குண்டு.
- காலம் அவர்களது காலடியில் அடிமையாக அவர்களது கட்டளைக்காகக் காத்திருக்கிறது. சாதாரண மனிதர்கள் இவ்வுலகை விட்டு நீங்கிய பிறகு அவர்களது செல்வாக்கு குறையத் தொடங்குகிறது. ஆனால் அவதார புருஷரின் பெருமை அவரது ஸ்தூல உடல் மறைந்ததும் குறைவதில்லை. மாறாக அதிகரிக்கின்றன. காலத்தின் சக்திக்குட்பட்ட மனிதர்கள்தான் பெருமைக்குப் பங்கம் ஏற்படுவதையும் அனுபவிக்கிறார்கள்.

**ஒரு அவதார புருஷர் என்பவரை எப்படி விளக்குவது?**

ஒரு தனி மனிதரா? சாதாரண மனிதரா? அல்லது தெய்வீகத் தன்மை உடையவரா? என்றால் இவை எல்லாமே அவருள் மறைந்திருக்கின்றன. இவை எல்லாவற்றின் சேர்க்கையாக அவர் இருக்கிறார்.

அவதாரம் என்பவர் குறையற்ற நேர்த்தியின் சிகரமாக இருக்கிறவர். அவரது ஆளுமை எப்போதும் முழுமை அடைந்து பிரகாசிக்கிறது.

இந்த உலகில் மனிதர்களை உயர்ந்தவர்கள்?, மிக உயர்ந்தவர்கள் என்ற பல படித்தரங்களாக வகைப்படுத்தலாம். ஆனால் ஒரு அவதார புருஷரின் முன் இச் சிறப்புக்களெல்லாம் ஒன்றும் இல்லாததாக விடும்.

ஒரு அரசனையோ, பெரிய மனித



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையோ ஒரு அவதாரத்திற்கு சமமாக சொல்ல முடியாது. அவதார புருஷனின் ஒப்பற்ற சக்திக்கு முன் எல்லாமே சாதரண மாகி விடும்

அவதார புருஷர் முடிவில்லாதவர் அளக்க முடியாத பெருமை உடையவர், மற்றவர்கள் அப்படியில்லை.


மனிதர்களுக்குள் மறைந்து கிடக்கும் தீய இயல்புகள் அளவற்ற ஆசைகள் அறியாமை ஆகியவற்றைப் பொசுக்கி புனிதப்படுத்தும் ஆற்றல் அவர்களுக்குண்டு. ஒரு அவதாரத்தின் ஒப்பற்ற சக்தி சூரிய ஒளியின் கடும் வெப்பத்தைக்கூட பனியின் குளிர்ச்சியாக மாற்ற வல்லது. சோகமும் துயரமும் கூட மகிழ்ச்சியாகவும், ஆனந்த மாகவும் மாறும். சந்தேகம் நம்பிக்கையாக மாறுகிறது. நாஸ்திகம் ஆஸ்திகமாக மாறுகிறது. மரணம் என்கிற விஷம் அமரத்துவம் அளிக்கின்ற அமிர்தபானமாக மாறுகிறது. அவதார புருஷன் என்றே சொல்லே அவர்களது சக்தியையும், ஞானத்தையும் விளக்குகிறது. அத்தகைய சக்தியும், ஞானமும் பெற்றவர்கள் இப்பூவுலகில் நடமாடுவதைப் பார்க்கிறோம். மக்களின் மனதில் ஆத்மீகத்தை ஊக்குவிப்பதே அவர்களது குறிக்கோள். அவர்கள் தங்களது பெற்றோர்களைத் தாமே தெரிவு செய்து கொண்டு இப் பூமியில் அவதரிக்கிறார்கள்.

**அவதாரங்கள் நிகழ்வது ஏன்?**

ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணரே இதற்கும் பதிலளிக்கிறார். நல்லவர்களை காப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.

நமது பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா கூறுகிறார்.

- கஷ்டப்படுபவர்கள் எல்லோருமே என்னிடம் வாருங்கள்.
- நீங்கள் என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் நான் உங்களை நோக்கி பத்து அடிகள் எடுத்து வைக்கிறேன்.
- உங்கள் முழு நம்பிக்கையையும் என்மீது வையுங்கள். நான் உங்களை பாதுகாக்கிறேன்.
- நான் உங்கள் ஒவ்வொருவருடைய சேவகன்
- நீங்கள் என்னை எந்த நாமத்தை வைத்தும் அழைக்கலாம். எல்லா நாமங்களும் என்னுடையதே என்பதால் அதை நான் ஏற்றுக் கொள்வேன்.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23

அவதாரங்கள் நிகழ்வதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. உதாரணமாக ஒரு செல்வந்தர் இருக்கிறார். அவரது மகன் அவரது அருமை, பெருமைகளை உணராமல் அவரது செல்வங்களையும், மதிப்பையும் அவற்றை ஈட்டுவது எவ்வளவு அரிது என்பதையும் உணராமல் வாரி இறைத்து வீணாக்கி விடுகிறான். மகன் செல்வத்தின் மதிப்பை உணர்வதற்கு அவனது தந்தை அவனிடத்தில் ஒரு பெரிய தொகையை கொடுத்து "இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு உன் வாழ்க்கைக்கு தேவையானதை சம்பாதித்துக் கொள் என்று சொல்லி வீட்டை விட்டு அனுப்பி விடுகிறார். வீட்டை விட்டு வெளியேறிய மகன் அந்தப் பணத்தையும், தகாத வழிகளில் விரயம் செய்து விடுகிறான். செல்வத்தை இழந்து மிகவும் துன்பப்பட்ட பிறகு தான் அவனுக்கு தன் தந்தையின் அருமை புரிகிறது. தன் வீட்டிற்கே திரும்பி வந்து தன் தந்தையிடம் தன்னை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு இறைஞ்சுகிறான். மகன் தன் தவற்றை உணர்ந்து, மனித வாழ்வின் அருமையைப் புரிந்து கொண்டு விட்டதனால், தந்தையையும் அவனை மீண்டும் ஏற்றுக் கொள்கிறார். இந்த உருவகக் கதையில் பகவான் தான் தந்தை. நாம் எல்லோரும் வழி தவறிய மக்கள். பகவான் பௌதிக உலகத்தை சிருஷ்டித்து எம்மை இங்கு அனுப்புகிறார். நாம் நமது தந்தையாகிய இறைவனை மறந்து, இந்த உலக இன்பங்களில் ஆழ்ந்து மோகம் கொள்கிறோம். துன்பம் வரும் போது தான் நமது மடமையை உணர்ந்து இறைவனை சரண் அடைகிறோம். அவரது ஆசியை வேண்டுகிறோம். இந்த ஆவல் எப்போது உண்மையாகவும், தீவிரமாகவும் ஆகிறதோ அப்போது நம் அழைப்பை ஏற்று பகவான் அருள் புரிகிறார்.

முக்காலத்தில் அவதாரங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு மக்கள் பெரிதும் முயன்றனர். வேத வியாசர் அவதாரங்களை ஆறு வகையாகப் பிரிக்கிறார். அவை

1. புருஷஅவதாரங்கள்
2. குண அவதாரங்கள்
3. யுக அவதாரங்கள்
4. ஆவேச அவதாரங்கள்
5. மன்வந்தர அவதாரங்கள்
6. லீலா அவதாரங்கள் என்பவையாகும்.

லீலா அவதாரங்களின் மூலமாகத்தான் சாதாரண மனிதர்கள் பகவானுடைய அளப்பரிய ஆற்றல்களையும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூறுதற்கரிய பெருமைகளையும் ஓரளவாவது அறிந்து கொள்ள முடியும். தவசீலர்கள் மட்டுமே தம் அகக்கண்களால் மட்டுமே அனுபவிக்கக் கூடிய பகவானுடைய சக்திகளை உணர்ந்து கொள்ள முடியும். 25 லீலா அவதாரங்கள் உள்ளன. அவற்றில் பத்து அவதாரங்கள் தசாவதாரம் என்ற பெயரில் பலரும் அறிந்து கொண்டுள்ளவை. இந்த 25 அவதாரங்களுள் பிரம்மாவின் ஒரு நாளில் அதாவது நான்கு யுகங்கள் கொண்ட ஒரு கல்பத்தில் நிகழ்கின்றன. இவைகளில் சில சாட்சாத் ஆவேச அவதாரங்கள் என்றும், சில சக்தி ஆவேச அவதாரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

பகவான், தானே அவதாரம் செய்து பூமிக்கு வருவது சாட்சாத் ஆவேச அவதாரம். அவர் தன்னுடைய சக்தியை வேறொருவருக்கு அளித்து நிகழ்த்துவது சக்தி ஆவேச அவதார். இவர்கள் பூமியில் பிறந்து வாழ்ந்தவர்கள். சில தனிச்சிறப்புடைய ஆற்றல்கள் அவர்களுக்கு பகவானால் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அருளப்பட்டது. உதாரணமாக குமார, நாரத, ப்ருது, பரசுராம அவதாரங்களை சொல்லலாம்.

இந்த 25 அவதாரங்களும் பரப்பிரமத்திலிருந்தே தோன்றுகின்றன. பரப்பிரம்மமும் அவதாரங்களும் ஒன்றே. பகவான் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக அதற்கு தேவைப்பட்ட ஆற்றலுடன் அவதாரம் செய்கிறார். அவதார காலத்தில் மேலும் ஆற்றல் தேவையானால், பரப்பிரம்மத் திடமிருந்தே அதைப் பெற முடியும். உதாரணமாக நீங்கள் ஒரு சொத்து வாங்குவதற்காக அருகிலுள்ள கிராமத்துக்கு செல்கிறீர்கள். போகும் போது 10 இலட்சத்துக்கு காசோலையும் 40000.00 ரூபா பணமும் எடுத்துச் செல்கிறீர்கள். சொத்தை விற்பவர் உங்களிடம் இந்த அளவுதான் பணம் இருக்கிறதா? என்று கேட்டால் என்னிடம் இன்னும் அதிகமான பணம் உள்ளது தேவைப்பட்டால் எடுத்துக் கொடுக்க முடியும் என்று சொல்வீர்கள்.

அடுத்த நாள் இன்னொரு வீட்டை யோ நிலத்தையோ வாங்க செல்லும் போது 25 இலட்சம் ரூபாவிற்கு ட்ராப் எடுத்து செல்கிறீர்கள். மேற்கண்ட இரண்டு சந்தர்ப் பங்களிலும் சொத்து வாங்கத்தான் சென்றீர்கள். ஆனால் எடுத்துச் சென்ற பணத்தின் அளவு மாறுகிறது. அது போல வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு ஆற்றல்களுடன் அப்போது இருக்கும் சூழ்நிலை, அதன் தேவைகளுக்கேற்றபடி பகவான் அவதாரம் செய்கிறார். அவதாரங்களின் இயல்பில் மாற்றமில்லை. அவர்கள் அந்த அவதாரத்துடன் எடுத்துக் கொள்ளும் சக்தியின் அளவில் மாற்றம் உண்டு.

ஆறுவகை அவதாரங்களும் பரப் பிரமத்தையே மூலாதாரமாகக் கொண்டு ள்ளன. ஆனால் அவர்களது ஆற்றல்கள் வேறுபடுகின்றன. அவையாவும் பகவானது இயல்பையே உடையவை.

ஒரு கிராமத்தில் உள்ள ஒரு வங்கியின் கிளை அலுவலகத்திற்கு நீங்கள் சென்று ஒரு பெரிய தொகையை கடனாக தந்து உதவுமாறு கேட்டால் அந்த வங்கியால் உங்களுக்கு உதவி செய்ய முடியாது. குடிசைத் தொழில் செய்வதற்கு தேவையான சிறிய முதலீட்டுக்கான பணத்தைத்தான் அந்த வங்கியால் தர முடியும். அடுத்த நிலையில் ஒரு சிறிய நகரத்தில் செயற்படும் வங்கியின் கிளை ஒரு நடுத்தர அளவிலான முதலீடு தேவைப்படுகின்ற ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்குத்தான் உதவ முடியும். வங்கியின் தலைமை அலுவலகம் தான் மிகப் பெரிய தொகையை ஒரு பெரிய தொழிலைத் தொடங்குவதற்கு உதவ முன்வர முடியும். அது போல 25 அவதாரங்களின் சக்தியின் அளவு தேவைக்கேற்ப மாறுபடும். இந்த உதாரணத்தில் பரப்பிரமத்தை வங்கியின் தலைமை அலுவலகத்தோடு ஒப்பிடலாம். கிராமத்துக் கிளை, நகரத்துக்கிளை, இவை எல்லாவற்றின் செயற்பாடுகளும் தலைமை அலுவலகத்தில் நடைமுறையாவது போல பரப்பிரமத்தில் 25 அவதாரங்களின் எல்லா ஆற்றல்களையும் காண முடியும்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஒவ்வொரு பக்தருக்கும் அவருக்குத் தக்க உத்தியைக் கையாண்டு அவரை நல்வழிப் படுத்துகிறார். அவரவரது நம்பிக்கை, மனநிலைப்படி வெவ்வேறு பாதைகளை கைக் கொள்வதை அனுமதித்து, அவர்கள் யாவர் க்கும் வாழ்வின் பயனை அளிப்பதாக உறுதி அளிக்கிறார். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனக்கிசைந்த ஆன்மீக வழியினை பின்பற்றி வாழ வழிகாட்டி நிகரற்ற, ஒப்பற்ற பூர்ண வதாரமாக பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா திகழ்கிறார்.

ஜெய் சாயிராம்

தொகுப்பு: ஸ்ரீ.ஆர்.ஸ்ரீஸ்கந்தராஜா
யாழ்ப்பாண நிலையம்

**ஆதாரம்: ஸ்ரீ சத்திய சாயி ஆதிபுருஷர்**
**திரு.ரி.ஜி.கிருஸ்ணமூர்த்தி**



**89 ஆவது அவதார தின விழா**
**நவம்பர் 23**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸாயி கமலம் பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா நிலையம்

மட்டக்களப்பு பார் வீதியில் அமைந்துள்ள தாமரைக்கேணி, பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா நிலையம் 1995ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையங்களின் முன்னாள் கிழக்குப்பிராந்திய இணைப் புக்குழு தலைவர் காலம் சென்ற திரு. அ. சிவஞானம் அவர்களால் ஒரு மண்டலியாக ஸ்தாபிக்கப்பட்டு 01-01-2003ம் திகதி தொடக்கம் முழுமையான ஒரு ஸாயி சேவா நிலையமாக செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

முழுமையாக நிறைவு பெறாமல் இருந்த இக்கட்டிடத்தின் சுற்றுமதிலை அமைப் பதற்காகத் திட்டமிடப்பட்டு அதற்கான அடிக்கல் 15-05-2014 அன்று இலங்கை ஸ்ரீ ஸத்ய ஸாயி மத்திய அறைக்கட்டளைத் தலைவர் திரு. டி. ஈஸ்வரன், இணைச் செயலாளர் செல்வி. மாலா சபாரத்தினம், இலங்கை ஸ்ரீ ஸத்ய ஸாயி மத்திய சபைப் பிரத்தித் தலைவர் திரு. எல். பிரபாகரன் ஆகியோரால் நடப்பட்டு பகவான் திரு வருளால் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. ஆனால் இக்கட்டிடத்தின் சுற்று மதிலை மட்டுமே அமைக்கத் திட்டமிடப்பட்டு அதற்காக ஸ்வாமியை நோக்கி ஒரு அடியினை எடுத்து வைத்தபோது ஸ்வாமி 100 அடிகளை எடுத்து வைத்து பல லட்சம் ரூபா செலவில் இக்கட்டிடத்தை முழுமையாக அழகுற புனரமைத்து தற்போதய நிலைக்கு நிறைவுசெய்து தந்துள்ளார்.

அழகுற நிறைவாக அமைக்கப்பட்ட இக்கட்டிடத்தின் புனருத்தாரண நிறைவேற்று விழா 23-08-2014 அன்று ஸ்வாமி அருளால் சிறப்பாக நடைபெற்றது. இவ் வைபவத்தில் இலங்கை ஸ்ரீ ஸத்ய ஸாயி மத்திய சபைப் பிரதித் தலைவர் திரு. எல். பிரபாகரன் அவர்கள், இலங்கை ஸ்ரீ ஸத்ய ஸாயி மத்திய அறக்கட்டளை இணைச்செயலாளர் செல்வி. மாலா சபாரத்தினம், ஸாயி அணுக்கத் தொண்டரும் பிரதான நன்கொடை யாளருமான திரு. சிவா செல்வரத்தினம் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

தாமரைக்கேணி, பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா நிலையம் சாயி நிலைய புதுக்கட்டிடத் திறப்பு விழாவையொட்டி, ஸ்ரீ ஸத்ய ஸாயி கிராமிய ஒன்றிணைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மிகவும் பின்தங்கிய நிலையில் தொலைவில் இருக்கும் யுத்தத்தினாலும் வேறுபல காரணங்களாலும் பாதிக்கப்பட்டு பலவித கஷ்டங்களின் மத்தியில் வறுமைக்கோட்டின் கீழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வடமுனை, ஊத்துச்சேனை, கறடியண்குளம் ஆகிய கிராமங்களில் ஸ்வாமியின் அருளால் பலவிதமான மனிதாபிமான மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுப் பணிகளை செய்துகொண்டு வருகிறது.

வடமுனை, ஊத்துச்சேனை ஆகிய கிராமங்கள் மட்டக்களப்பிலிருந்து 70 கி.மீ தூரத்தில் காட்டுப்பிரதேசத்தில் மட்டக்களப்பு பொலநறுவை மாவட்டங்களின் எல்லைப் புறத்தில் அமைந்திருக்கும் கிராமங்களாகும். இக்கிராம மக்கள் கடந்த 30 ஆண்டு காலமாக நடந்த யுத்தத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு பலதடவைகள் இடம்பெயர்ந்து தற்காலிக அகதி முகாம்களில் வாழ்ந்ததுடன் தங்கள் உடமைகள், உறவுகளை இழந்தவர்களாவார். தற்காலிக அகதி முகாம்களில் இருந்து மீள்குடியேறிய இவர்கள் இதுவரை எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாமலே வாழ்ந்து வருகின்றனர். தற்போது இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பலரிற்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குடிதண்ணீர் பிரச்சனை, வாழ்வாதாரப் பிரச்சனை, போக்குவரத்துப் பிரச்சனை என்ப வற்றுடன் விசேடமாக யுத்தத்தினால் விதவைகளான பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரப் பிரச்சனையும் முக்கியமான பிரச்சனைகளாக இக்கிராமங்களில் காணப்படுகின்றன. கல்பாறைகள் நிறைந்த வடமுனை கிராமத்திலும் ஊத்துச்சேனைக் கிராமத்திலும் தலா ஒவ்வொரு குடிநீர்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.



தாமரைக்கேணி, பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா நிலைய மகளிர் அணித்தொண்டர்கள், இளைஞர் அணியினர் ஆகியோர் அக்கிராமங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் வேறு பல திட்டங்களையும் அமுல்ப் படுத்துவதன் மூலம் அம் மக்களை சமூகவலுவூட்டல்படுத்தி வருகின்றனர்.

ஜெய்சாயிராம்

திரு.எஸ். சாமித்தம்பி


தலைவர், தாமரைக்கேணி சாயி நிலையம்

**(நிலையத்தின் முகப்புத் தோற்றம், ஆதிமூலம் என்பன பின்பக்க மட்டையில் உள்ளது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹ்ருதயநிவாஸி



***கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் தெய்வம்***
***எல்லா நிலையினர்க்கும் ஏற்றம் அருள் தெய்வம்***
***எங்கும் நிறைந்த தெய்வம் எல்லாம் செய்ய வல்ல தெய்வம்***
***அன்பே உருவான தெய்வம், ஆனந்த சாயி தெய்வம்***

பகவான் ஆபத்பாந்தவன் ஹ்ருதயநிவாஸி பக்தப்பிரியன் சத்யஸ்வரூபன் சாயீஸ்வரூபன்.
பகவானுடைய பொற்பாத கமலங்களுக்கு எனது அனந்த கோடி நமஸ்காரங்கள்

எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ நாம் எல்லாம் கலியுக அவதாரம் புட்டபர்த்தி சக்கரவர்த்தி சத்யசாயியை கண்ணாரக் கண்டு, அவர் தர்ஷணம், சம்பாஷனம் செய்து வைத்துக் கொண்டோம். ஏனென்றால் ராமரைப் பார்த்தவர் எத்தனைபேரோ, கிருஸ்ணரைப் பார்த்தவர் எத்தனை பேரோ, பகவானை சாட்சாத் சாயீஸ் வரனை நடமாடும் தெய்வமாக கண்டு, அவர் பாதங்களை தொட்டு, அவர் நம் அருகில் வந்தே நம்மைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்ததென்றால் அது சாயி பக்தர்களுக்கு மட்டுமே. ஏனென்றால் சாயி பக்தர்கள் அவ்வளவு பாக்கியம் செய்தவர்கள் என்று அனைவருக்கும் தெரியும்.

பகவான் எவ்வளவோ சொல்கின்றார், எவ்வளவோ செய்கின்றார். ரொம்ப முக்கியமானது என்னவென்றால் சேவைக்கே மிகவும் முக்கியத்துவம் கொடுக்கின்றார். நிறையக் கொடுக்கிறார். நிறையப் பண்ணுகிறார். எங்கு பார்த்தாலும் சத்திய சாயி வாட்டர் புறொஜெக்ட், 2007 இல் சென்னையில் அதிருத்ர மகா யக்ஞம் பண்ணி விட்டு யாராலும் முடியாத ஒரு காரியமாகவிருந்த சென்னைக்கு தண்ணீர் வழங்குவதையும் பகவான் நிறைவேற்றி முடித்தார்.

இராமரைப் பற்றி புராணங்களில் படித்தோம், கிருஸ்ணர் லீலைகள் அறிந்தோம். பகவான் அவதார புருஷராகவிருந்தாலும் பக்தர் களுக்காக எவ்வளவோ நல்லது பண்ணி யிருக்கின்றார். நமக்குத் தெரியாது, தெரியாமல் எவ்வளவோ பண்ணியிருக் கின்றார். இன்று பிரசாந்தி நிலையத்திலும் பெங்களூரிலும் உள்ள ஸ்ரீ சத்திய சாயி சுப்பர் ஸ்பெஷலிட்டி மருத்துவ மனைகளில் எவ்வளவோ ஆப்பரேசஷ் நடக்கின்றது. இராம அவதாரத்திலும் கிருஸ்ண அவதாரத்திலும் இவ்வாறு நடந்ததா எனத் தெரியாது. ஆனால் சுவாமி இந்த அவதாரத்தில் எங்கள் அனைவருக்கும் நல்ல வாய்ப்புக்களை அளித்துள்ளார். நாம் அனைவரும் அதை உணர்ந்து கொண்டிருக்கின்றோம். அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

நான் கோவிலுக்குச் சென்று இறைவனின் சிலையைப் பார்த்து நமஸ்காரம் பண்ணினேன். பகவானிடம் சென்று சுவாமி என் குடும்பச் சூழ்நிலை சரியில்லை என்று பகவானிடம் முறையிட்டால் பகவான் அதை நிறைவேற்றுகின்றார்.

"அந்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம
தமஸ்மாத் காருண்ய பாவேன ரக்ஷ ரக்ஷ சாயீஸ்வரா"

"பகவான் தான் கதி, நீயே கதி உன்னை விட்டால் எங்களுக்கு வேறு யாருமில்லை என்றைக்கும் நீ தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்"

பகவான் ஒருவரால் மட்டும் தான் நம்மைக் காப்பாற்ற முடியும்.
"சாயி அண்டே ஓயி அண்டானு"

சாயி என்றால் ஓய் என்று சொல்வேன். என்பார் பகவான்.

ஆத்ம சொரூபன், ஆபத் பாந்தவன் என்றால் அது பகவான் தான். அதில் சந்தேகம் இல்லை.

சேவைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். "மாதவ சேவை மகேசன் சேவை"



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு சமயம் சுவாமி கொடைக்கானல் சென்று வரும் வழியில் கோயம்புத்தூர் என்ற ஊருக்கு வந்தார். கோயம்புத்தூரில் மதுக்கரை என்ற இடத்தில் ஒரு பெரியவர் எழுபத்தைந்து வயதுடையவர், கல்யாணம் முடிக்காமல் வாழ்நாள் முழுவதும் சேவையிலேயே ஈடுபட்டு வந்தார். அவருக்கு உடல் நலம் சரியில்லாமல் படுக்கையிலேயே இருந்தார். இதனை அறிந்த பகவான் அவருடைய வீட்டிற்குச் சென்று அவருக்கு விபூதி சிருஷ்டித்துக் கொடுத்து அவரை நன்கு குணமாக்கி விட்டார். அப்பொழுது ஒரு பக்தர் சுவாமியிடம் கேட்டார். "ஏன் சுவாமி அவர் மகிவும் உடல் நிலை நோயுற்றவராக விருந்தார் நீங்கள் சென்று என்ன செய்தீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு சுவாமி: அவன் நீண்ட நாட்களாகச் சேவைக்கு முக்கியத்துவம் கொடுத்தான் அதனால் அவனின் ஆயுளை நீடித்தேன். அவன் சேவை இன்னமும் தொடர வேண்டும் என்றார். நாம் சேவை செய்ய ஆரம்பித்தால் சுவாமி நம் தலையெழுத்தையே மாற்றி எழுதி விடுவார். இவ்வுலகை மாற்றுவதற்கு சாயி இளைஞர் களால் மட்டும் தான் முடியும் என பகவான் கூறுவார்.

மேலும் சுவாமி
நா பணி நுவு சூஸ்தே
நீ பணி நேனு சூஸ்தானு எனச் சொல்வார்.
"என்னுடைய வேலையை நீ பார்த்தால் உன்னுடைய வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன்".

ஓ ஸ்ரீ சாயி ஸித்த ஸங்கல்பாய நமஹ: பகவானுடைய ஸங்கற்பம் எங்கு இருந்தாலும் அவர் நடத்திக் கொள்வார்.

திக்கு லேன்னி வாரிக்கி தேவுடே கதி, கதியற்றவர் களுக்கு கடவுள்தான் கதி. கஷ்டப்படுபவர்கட்கும் கடவுள்தான் கதி.

எனது தாயார் அனந்தப்பூரில் பகவானின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிகின்றார். தாயார் பல வருடங்களாக பகவானிடம் சேவையாற்றி வருகின்றார். இறுதி மூச்சு வரை சேவை செய்ய வேண்டு மென்று நினைப்பவர். ஒருநாள் அவ அனந்தப்பூரிலிருந்து பிரசாந்தி நிலையம் வந்து கொண்டிருந்த பொழுது, இடியுடன் கூடிய மழை அத்தோடு சேர்ந்து மின்சாரத்தடையும் ஏற்பட்டது. அப்பொழுது அவவுக்கு பயமாயிருந்தது. அவ தானாகவே தனது காரை ஓட்டுபவர். அப்பொழுது சாயி காயத்ரீ சொல்லிக் கொண்டு பயத்துடன் காரை ஓட்டினார். அப்பொழுது பகவான் திடீரென தனது பக்கத்து இருக்கையில் அமர்ந்து கொண்டிருப் பதைப் பார்த்தார். "பகவான் நான் தூங்கலாம் எனச் சென்றேன், ஏன் என்னை அழைத்தாய்" எனக் கேட்டார். அம்மாவுக்கோ சந்தேகம் பகவான் இல்லை, இது கனவா என நினைந்த பொழுது, உடனே பகவான் தனது வலது கையைத் கொடுத்துக் கிள்ளிப் பார் என்று சொன்னார். அப்பொழுது தான், பகவான் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் எனத் தெரிய வந்தது,



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23

இந்த உடல் சேவைக்கு வந்த உடல். சேவை நம் மூச்சு. இப்பொழுதும் பகவான் நடமாடும் தெய்வமாக உள்ளார் என்பதை பெங்களூருக்கு அருகே உள்ள முத்தனகள்ளி என்ற இடத்திற்குச் சென்று பார்த்தால் தெரியும். அங்கு சுவாமியின் கல்லூரி புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. அங்கு வைக்கப்படும் பிரசாதத்தை ஏற்று உணவருந்தியிருப்பதைக் காணலாம். இன்னும் பல மகிமைகள் அங்கு நடந்து கொண்டிருக்கின்றன.

ஏன் எனக்கு நடந்த சம்பவத்தைப் பற்றிக் கூறுகின்றேன். பல வருடங்களாக என்னுடைய பிறந்தநாளின் போது சுவாமி பாத நமஸ்காரம் தந்து ஆசீர்வதிப்பது வழக்கம். மே மாதம் 13 ஆம் திகதி 2011 இல் எனது பிறந்த தினத்தன்று பகவான் தன் படத்திலிருந்து கையை வெளியே நீட்டி அட்சதை தலையில் போட்டு ஆசீர்வாதம் செய்தார். இந்த வருடம் மே மாதம் 13 ஆம் திகதி 2012 அன்று பகவான் தன் இருப்பிடமான யஜுர் மந்திரின் முன்பக்கம் உள்ள கதவின் முன்பாக நான் சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணிக் கொண்டிருந்த சமயம் கதவின் மேலேயிருந்து ரோஸ் பூவிதழ்களும், அட்சதையும் தலையில் போட்டு ஆசீர்வாதம் பண்ணினார். **சுவாமி நமக்கு முன்பு என்ன செய்தாரோ அதனை தொடர்ந்து இன்றும் செய்து** கொண்டேயிருக்கின்றார். பகவானுக்கு உடம்பு அவசிய மில்லை.

பகவானை அவதாரமாக ஏற்றுக் கொண்டு இந்த உலகத்தையே சாயி அவதார உலகமாக மாற்றுவதற்கு சாயி இளைஞர்களால் தான் முடியும்.

பகவானின் கிருபை என்பது உலகத்தில் மதிப்பிடற் கரிய பொருள். அதனை விலை கொடுத்து வாங்க முடியாது. அப்படிப்பட்ட பகவான் அவருடைய கிருபையை நமக்கு எவ்வளவு சுலபமாக கொடுத்திருக்கின்றார். அதற்கு நன்றிக் கடனாக நாம் செய்ய வேண்டியது சேவை.

போன நாட்கள் போகட்டும்: இனிமேல் வருகின்ற நாட்களில் சத்ய சாயி சேவா அமைப்புக்கள் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சாயி பக்தர்கள் என்றால் தங்கத் தேரில் உள்ள மாதிரி.

சுவாமி சொல்லுவார்: “ஏ ஜென்மலு சேசின புண்ணியமோ, இ ஜென்மலு நா தக்கிற ஒச்சினாடு” என அதாவது எந்த ஜென்மத்தில் செய்த புண்ணியமோ இந்த ஜென்மத்தில் நாம் இங்கு அவதாரம் கிட்ட வந்துள்ளோம்.

சாயிராம் - தாயன்புடைய ராம், யார் நமக்கு எல்லா சூழ்நிலையிலும் சந்தோஷத்தைக் கொடுக்கின்றாரோ அவரை ராம் என்று கூறலாம் (ரம்யதி இதி ராம)

இத்தனை நாட்கள் செய்த தவறுகளை மன்னித்து விட்டு, இன்று நாங்கள் சாயி சமுத்திரத்தில் மூழ்கி புது மனிதர்களாகப் பிறந்து, இன்றிலிருந்து சேவை செய்ய ஆரம்பிப்போம் என்று உறுதி கொள்ளுங்கள்.


நாம் சேவை செய்ய ஆரம்பித்தால், பகவானின் பொற்கமலப் பாதங்களுக்கு நாம் செல்வோம். அது மட்டுமல்லாமல் நம் வாழ்க்கை நல் வழியில் செல்லும் என்பது உண்மை. ஏன்? அனைத்திற்கும் மேலாக நம் தலை எழுத்தை எழுதிய ப்ரமனிடம் சென்று நம் தலை எழுத்தை மாற்றி எழுதுவார் பகவான். ஏனென்றால் அப்படிப்பட்ட அவதாரத்திடம் நாம் உள்ளோம்.

கோயம்புத்தூரின் அருகில் சென்னிமலை, அங்கு சுப்பிரமணிய சுவாமி கோவில் உள்ளது. ஒரு நாள் அங்கு இலவச மருத்துவ முகாம் ஒன்று நடாத்தப்பட்டது. நான் அதிகாலை அங்கு சென்று இரவு வந்தேன். அந்த நேரம் ஆட்டோ எதுவுமே ரோட்டில் இல்லை. அப்பொழுது திடீரென ஒருவர் இருசக்கர வாகனத்தில் வந்து என்னை வீட்டிற்கு கூட்டிச் சென்று விடுவதாகக் கூறி வண்டியில் ஏறும்படி கூறினார். நான் செல்ல மறுத்தேன். பின்னர் எனது முகவரியை அவரே சொல்லி உன்னை எனக்கு முன்னரே தெரியும் எனக் கூறினார். பிறகு என்னை எனது வீட்டில் ஏற்றிச் சென்று விட்டார். நான் அவருக்கு நன்றி கூறி இவ்வளவு உதவி செய்தீர்களே நீங்கள் எங்கிருந்து வருகின்றீர் கள் எனக் கேட்டேன். அவர் நான் புட்டபர்த்தியிலிருந்து வருகின்றேன் எனச் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டார். நான் அவர் செல்லும் போது பின்புறமாகப் பார்த்த போது ஆரஞ்சு அங்கியும், பகவானின் தலை முடியும் கண்ணிற்பட்டது. சிறிது நேரம் கழித்து பகவான் அப்படியே மேலே சென்று விட்டார்.

நான் ஒரு மாதம் கழித்து புட்ட பர்த்திக்குப் போன போது எனக்கு பகவான் பாத நமஸ்காரம் கொடுத்ததுடன், சுவாமி பின்வருமாறு சொன்னார். “நீ சென்னி மலையில் நல்ல சேவை பண்ணினாய், அதனால் உன்னை வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் ஏற்றிச் சென்று விட்டு விட்டு வந்தேன்”.

ஒரு பெண் இதய மருத்துவர் சுவாமியின் கல்லூரியில் படித்து, சுவாமியின் விருப்பப்படி சேவையே உயிர் மூச்செனை வாழ்ந்தவர். ஒரு நாள் அவவுக்கு உடல் நிலை சரியில்லாமல் போய் விட்டது. அச்சமயம் ஒரு நோயாளிக்கும் அவ ஒப்பரேசன் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் உடல் நிலை காரணமாக அன்று தான் வைத்தியசாலைக்கு வர முடியாது என சக மருத்துவர்களுக்கு அறிவித்தார். மற்ற மருத்துவர்கள் அந்த ஒப்பரேசனை மறுநாள் செய்யலாம் எனப் பின் போட்டனர். அச்சந்தர்ப்பத்தில் இப் பெண் மருத்துவரே அங்கு வந்தார். அப்போது மற்ற டாக்டர்கள் உடல் நிலை சரியில்லை யெனச் சொன்னீர்கள். வந்து விட்டீர்களே எனக் கேட்டனர். அதற்கு அவர் அதெல்லாம் ஒன்றும் இல்லை. ஒப்பரேசன் செய்யலாம் வாருங்கள் எனக்கூறி ஒப்பரேசனைச் செய்து முடித்தார். அந்த டாக்டர் பெண் மூன்று நாட்களாக ஆஸ்பத்திரிக்கு வரவில்லை. அந்த மூன்று நாட்களும் பகவான் அவவின் உருவத்தில் வந்து உதவி செய்தார். பின்னர் மூன்று நாட்கள் கழித்து அப்பெண் டாக்டர் வந்து தான் இல்லாத சமயத்தில் பகவானே **தன் உருவில் அங்கு அனைத்தையும் செய்திருக்கின்றார் எனக் கேட்டு வியந்தார்.** உடனே பகவான் போட்டோவில் இருந்து பின்வருமாறு பேசினார். **“உனக்கு உடல் நிலை சரியில்லையென்றால் நன்றாக ஓய்வெடுக்க வேண்டும். சேவை செய்ய முடிய வில்லையே எனக் கவலைப்படக் கூடாது. நீ கவலைப்பட்டதால் தான் உன் உருவத்தில் நானே வந்தேன்”** என்றார்.

ஒரு நாள் நாங்கள் அனைவரும் குல்வந் ஹோலில் தரிசனத்துக்காக காத்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது முதியவர் ஒருவர் திடீரென இறந்து விட்டார். அப்பொழுது பகவான் தரிசனத்துக்கு வந்து கொண்டிருந்தார். சுவாமியிடம் இந்த விடயத்தை சொன்ன போது சுவாமி சிரித்தார். பிறகு அவரின் பக்கத்தில் வந்து ஏய் எழுந்திரு என்றார். உடனே இறந்தவர் எழுந்து விட்டார். இதனை நாங்கள் படிக்கவில்லை. எங்கள் கண்களாலேயே பார்த்தோம்.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அமெரிக்க மனிதர் முதன் முதலில் சுவாமியிடம் வந்தார். தினமும் ஒரு லெட்டர் சுவாமிக்கு எழுதுவார். ஆனால் சுவாமி ஒரு லெட்டர்கூட வாங்குவதில்லை. ஆறு மாதங்களாக இவ்வாறு நடந்தது. கடைசியாக அவர் ஊருக்கு போக முன்னர் இத்தனை நாட்களாக கடிதம் எழுதினேன். நீங்கள் வாங்கவில்லை ஆனால் இன்று எழுதுகின்றேன் இதை நீங்கள் வாங்கினால் அனைவரும் சொல்கின்ற போல நீங்களே எனது யேசு. இறைவனே அவதாரம் எடுத்துள்ளார் என நம்புவேன் எனத் தன் மனதில் சொல்லிக் கொண்டிருந்தார். அவ்வாறு எண்ணிய படி குல்வந் ஹாலில் தரிசனத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தார். பகவான் தரிசனத்திற்கு வந்தார். ஆனால் அவரிடம் லெட்டர் எடுக்கவில்லை. இவருக்கு நன்கு கோபம் வந்து விட்டது, இன்று எழுதிய லெட்டரையாவது வாங்குங்கள் என்று வேண்டிக் கொண்டிருந்தார். இவர் கடைசியாக எழுதிய லெட்டரை இவ்வளவு காலமும் எழுதிய கடிதக் கட்டுக்களின் மத்தியில் வைத்திருந்தார். சுவாமி இரண்டாம் தடவை வந்து கடிதக்கட்டின் மத்தியில் இருந்த கடைசியாக எழுதிய கடிதத்தை மாத்திரம் எடுத்துச் சென்றார்.

காயே ந வாசா மனஸேந்திரியையர் வா
புத் யாத்மனாவா ப்ரக்ருதேஸ்வபாவாத்
கரோமி யத் யத் ஸகலம் பரஸ்மை பரஸ்மை
ஸாயி நாராயணாயேதி ஸமர்ப்பயாமி
ஸத்ய நாராயணாயேதி ஸமர்ப்பயாமி

இந்தச் சரீரத்தாலும் சொல்லாலும், மனசாலும், இந்திரியங்களாலும், புத்தியாலும், ஆன்மாவாலும், இயற்கை யான சுபாவத்தாலும் செய்யப்படும் அனைத்தும் ஸ்ரீமன் ஸாயி நாராயணருக்கே ஸமர்ப்பிக்கின்றேன்.

ஜெய் சாயிராம்

சாயி பிரசாத்
புட்டபர்த்தி
2012



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23

# பகவானின் மஹா விஷ்ணு தரிசனம்



வைகுந்த ஏகாதசி நாளன்று மகா விஷ்ணு ஆதிஷேசனில் படுத்து காட்சி கொடுப்பதாகக் கேள்விப் பட்டுள்ளோம்.

பல வருடங்களுக்கு முன்பு நெடுங்காலத் தொண்டனும், பிரசாந்தி நிலையக் காப்பாளருமான ஸ்ரீ ராஜா ரெட்டி பிரசாந்தி நிலைய மண்டபத்தில் முதல் மாடியில் வழக்கம் போலத் துயின்றார். நடு நிசியில் நித்திரை விழித்ததும் சுவாமியின் அறைக் கதவின் இடைவெளியூடாக ஏதோ பெரிய வெளிச்சமாகத் தெரிந்தது. நான் பார்த்த போது ஏதோ உலகத்தின் தேவர்கள் ஒன்றின் பின் ஒன்றாக பகவானின் பாதங்களை வணங்குவதைக் கண்டேன்.

அவர்களிலிருந்து ஒளி பிரகாசித்தது. சுவாமி ஆதிஷேடனில் படுத்துக் கொண்டு அவர்களின் அன்புக் காணிக்கைகளை ஏற்றுக் கொண்டிருந்தார். ஏழு ஒளிப்பிழம்புகள் சுவாமியின் கட்டிலைச் சுற்றித் தெரிந்தன. நான் அதிர்ச்சி யுற்றேன். மெதுவாக கதவுகளை மூடிவிட்டு எனது கட்டிலில் படுத்துக் கொண்டேன். எனக்கோ நித்திரை வரவில்லை.

அடுத்த நாட் காலை நான் அனுபவித்த அந்த அரிய தெய்வீகக் காட்சியை சுவாமியிடம் சொல்லி, வந்தவர்களெல்லாம் யாரென்று கேட்டேன். சுவாமி "அவர்கள் எல்லாம் தேவர்கள். எனது தரிசனத்திற்காக வந்தார்கள். ஏழு ஒளிப்பிழம்பாக கண்டவை சப்த ரிஷிகள்" என்று கூறினார். மேலும் "எனது பாதுகாப்பு அருளினால் நீ உயிரோடிருக்கிறாய் அல்லாவிடில் அதைப் பார்த்தவுடனேயே சாம்பலாகி விட்டிருப்பாய்" என்று சொன்னார்.

பகவான் பரப்பிரம்மமேயாகும்.

ஸ்ரீ ராஜா ரெட்டி
(இணையத்திலிருந்து பெற்றவை 8.11.2012)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# எம்முடன் நிதர்சனமாய் ஸ்வாமி

கலியுகத்தில் சாயியுகத்தை மலரச் செய்தவர் எம் கண்கண்ட தெய்வம் சாயி பகவான். துவாபரயுகத்தில் கிருஷ்ணன் கீதை உபதேசத்தில் அருச்சுணனிடம் மானிட வர்க்கத்தை உய்விக்கவும், தர்மத்தை பாதுகாத்து நிலைபெறச் செய்யவும் நான் மீண்டும் அவதாரம் செய்வேன். என்று கூறிச் சென்றமையை நாம் அறிவோம். அக் கூற்றை நிதர்சனமாக்க, எம் ஸ்வாமி எமக்காக கலியுககத்தில் அவதாரம் செய்தார். ஸ்வாமி தான் வாழ்ந்த வாழ்க்கை முறையை எமக்கு அவர் அளித்த செய்தி என்றும் அடிக்கடி வலியுறுத்தியுள்ளார். ஸ்வாமி எம்முடன் இணைந்திருந்தாலும், தான் மானிடத்திலிருந்து சிறப்பானவர், தனித்துவமானவவர், உயர்வானவர் என்பதைக் காட்டவே பல அற்புத லீலைகளைப் புரிந்து வருகின்றார். இன்று அவர் எம்முடன் தன் ஸ்தூல உடலில் இல்லாவிட்டாலும் சூட்சும உடலில் நாம் நினைக்கும் பொழுதும், அழைக்கும் பொழுதும், இடர்படும் பொழுதும் கனவின் போதும் காட்சி கொடுக்கின்றார். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருகின்றார். எம் பஜனை மழையில் நனைந்து எமக்கு அவர் திவ்விய தரிசனம் அளிக்கின்றார்.

20.8.2013 அன்று குருபூர்ணிமா தினமும் வியாழக் கிழமையும் ஒருங்கே அமைந்த நாள். அன்று வழமை போன்று மாலை பஜனை இடம்பெற்றது. அன்றைய தினம் பாடசாலை நிகழ்வொன்றின் காரணமாக நான் பஜனைக்குத் தாமதமாக வந்தமையால் பாட்டுக் கிடைக்கவில்லை என்ற கவலை யுடனேயே பஜனையில் பங்கு பற்றினேன். பஜனையின் பின் ஆத்மீக அருளுரையை ஸ்ரீமதி அருள்நந்தி அவர்கள் வழங்கினார். அவர் தனதுரையில், குருஷேத்திரப் போரில் கிருஸ்ணர் தொடர்பான கதையினைக்கூறி அவ்வாறே நமக்கும் ஸ்வாமி குருவாகியுள்ளார் எனவும் கூறினார். அவ்வவுரையினை தொடர்ந்து இடம்பெற்ற மகா மங்களாராத்தி வேளையிலே ஸ்வாமி நீலக்கிருஸ்ணராக தனது ஆசனத்திலே காட்சி தந்தார். உடல் முழுவதும் மேகத்தின் நீல நிறத்துடன் ஆரெஞ்சு நிற அங்கியுடன் இரு பாதங்களையும் பதித்தபடி கையை ஒரு பக்கமாக வைத்துச் சிரித்தபடி அமர்ந்திருந்தார். மேலும் ஆசனத்தின் மேலிருந்து நாகபடம் உண்மையிலேயே ஐந்து தலை கொண்ட நாக பாம்பாக படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது. இவ்வாறாக ஸ்வாமி புன்னகை புரிந்தபடி மஹா மங்களாராத்தி ஆரம்பம் முதல் விபூதி மந்திரம் முடியும் வரை காட்சி தந்தார். இவ்வாறாக அன்றைய தினம் உண்மையிலேயே ஸ்வாமி குருவாக எம் அனைவரையம் ஆசீர்வதித்தார்.

5.12.2013 வியாழக்கிழமையன்று நான் பஜனையில் பங்கு கொண்டேன். அதில் எனக்கு ஸ்வாமிக்குப் பாடும் வாய்ப்பு கிடைத்தது. நான் ஸ்வாமிக்காக "ஸாயிராம் ஸாயி ஷ்யாம்: என்னும் பாடலை படித்தேன். பாடலின் முதலாம் காலத்தினைக் கண்கள் மூடியபடி படித்துக் கொண்டிருந்தேன். இரண்டாம் காலத்தினைப் பாட கண்களை திறந்த போது ஸ்வாமி என் கண்களின் முன் தன் இளமைத் தோற்றத்தில் காட்சி தந்தார். ஸ்வாமி பீடத்திலிருந்து இறங்கி வந்து அங்கியினைத் தூக்கியபடி பஜனைப்பாடலை ரசித்தபடி கையை அசைத்து விட்டு நடந்து சென்று ஆசனத்தில் அமர்ந்தார். ஸ்வாமி முழுவதும் ஜோதிமயமாகக் காட்சி தந்தார். ஸ்வாமியின் தோற்றம் உண்மையிலேயே மிகவும் சக்தி வாய்ந்ததாகக் காணப்பட்டது. ஸ்வாமி கிட்டத்தட்ட ஐந்து நிமிடங்கள் வரை கையை அசைத்தபடி ஆசனத்தில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தார். அத்தோற்றம் ஒளி நிரம்பிய தெய்வீகத் தோற்றம். அதைத் தாங்க முடியாமல் மஹா மங்கள ஆராத்தி இடம் பெறும் வரை பிரமித்துப் போயிருந்தேன். அதன் பின்னரே என்னால் ஸ்வாமியைக் கண்ட காட்சி பற்றி உணரக் கூடியதாக விருந்தது.

கடந்த 16.12.2013 அன்று சில சாயி அன்பர்களும் மற்றும் பலரும் இணைந்து திருகோணமலைக்குச் செல்ல உத்தேசித் திருந்தோம். சாயி அன்பர்களான எமது நோக்கம் திருகோணமலை புவனேந்திரன் அவர்கள் வீட்டில் பஜனை வைப்பதாகவே இருந்தது. எனினும் ஏனையோரது விருப்பங் களிற்கமைய சில கோயில்களுக்கும் சென்று வருவதாக திட்டமிட்டிருந்தோம். அன்றைய தினம் ஸ்ரீமதி சிவகுமார் அவர்கள் ஸ்வாமிக்காக பூந்தி லட்டும், மாலையும் கட்டிக் கொண்டு வந்திருந்தார். அன்று பலர் பங்கு கொண்டிருந்தமையால் இடநெருக்கடி ஏற்பட்டது. பெண்கள் பக்கத்தில் குறிப்பாக, நான் ஸ்வாமியின் சயன அறைக்கு முன்னால் அமர்ந்திருக்கக் கிடைத்தது. நான் எட்டாவது பாடலாக "சித்த சோரா முரளிவாலா" எனும் பாடலை பாட ஆரம்பித்த போது ஸ்வாமியின் அறையினுள் ஒரு விம்பம் அசைவது போல் தென்பட்டது. நான் பாடிக் கொண்டிருக்கும்



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போது உற்றுப் பார்த்த வேளையில் ஸ்வாமி திரைச்சீலையை விலக்கிக் கொண்டு வெளியே வந்தார். நான் ஸ்வாமியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த பொழுது முகத்தைப் பார்க்க வேண்டாம் என்று கை அசைவால் காட்டி பாதத்தைப் பார்க்கும்படி காட்டினார். அவர் பாதத்தினைக் காட்டியபடி 5 நிமிடங்கள் வரை நின்றார். நான் பிரமிப்புடன் உணர்வற்று இருந்தமையால் பாதத்தை தொட்டு நமஸ்கரிக்க வேண்டும் எனத் தோன்றவில்லை. ஸ்வாமிக்கும் எனக்கும் இடையில் உள்ள தூரம் அண்ணளவாக ஒரு அடி மாத்திரமே. பின் சுவாமி தனது ஆசனத்திலிருந்த தலையணையைச் சுட்டிக் காட்டி விட்டு உள்ளே சென்றார். நான் பார்த்த போது அக் கையணையில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்த ஓம் தலைகீழாக இருந்தது. அதன் பின்னர் பஜனை முடிவடையும் வரை பிரமித்துப் போயிருந் தேன். பஜனை முடிவடைந்த பின்னர் நாங்கள் ஒவ்வொருவராக சுவாமியின் சயன அறை க்குள் சென்று வணங்கினோம். அச்சமயத் தில் ஸ்ரீமதி புவனேந்திரன் அவர்கள் லட்டு செய்து வந்தவரை அழைக்கும்படி கூறினார். காரணம் அங்கே ஸ்வாமிக்காக வைக்கப் பட்டிருந்த ஐந்து லட்டுகளில் ஒன்றின் அரைப்பங்கு உண்ணப்பட்டிருந்தது. மேலும் வெளியே இருந்த கையணையும் சாயி அன்பர்களால் மாற்றி வைக்கப்பட்டது. மேலும் போடப்பட்ட மாலையும் நன்றாக வளர்ந்திருந்தது. பஜனை பாடப்பட்டுக் கொண்டிருக்கும் போதே மாலையும் வளர்ந்து கொண்டிருந்தது. இவ்வாறாக அன்றைய தினம் ஸ்வாமி அங்கு வந்திருந்த அனைவரு க்கும் தனது லீலைகளைக் காட்டித் தனது பிரசன்னத்தை உறுதிப்படுத்தியுள்ளார். அது மட்டுமல்ல வந்திருந்த அனைவருக்கும் ஸ்வாமியின் ஆசிகள் கிடைத்திருக்கும் என்பது திண்ணம்.

1.1.2014 புதுவருட தின பஜனையில் தரிசனமும் சம்பாசனமும் கிடைக்கப் பெற்றேன். பஜனை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது ஒரு விம்பம் மண்டபத்தில் ஸ்வாமிக்காக விரிக்கப்பட்ட கம்பளத்தில் நடந்து வருவது போல் தென்பட்டது. பின்னர் சுவாமி கம்பளத்தின் மேலாக அங்கியினை உயர்த்தியபடி நடந்து வந்தார். ஸ்வாமி என்முன் வந்து நின்று தெலுங்கில் உரையாடினார். முதலில் ஸ்வாமி “சாலச் சௌக்கிய முனந்து” என்று கேட்டார். அதற்கு நான் “ஆம் ஸ்வாமி” என்றேன். அதற்கு அவர் ”அச்சா அச்சா”என்று கூறினார். பின்னர் சுவாமி: ப்ரசாதம் பக்தானு கோடிகோ கலப்பிஞ்சனாரு”எனக் கூறினார். ஸ்வாமி பின் அப்படியே நடந்து சென்று பீடத்தில் ஏறி சுவாமியின் படத்திற்கு முன்னால் நின்று இருகைகளையும் உயர்த்தியபடி அனைவருக்கும் ஆசி வழங்கினார். பின்னர் ஸ்வாமி அனைவரையும் தனது இரு கைகளிற்குள்ளே ஈர்த்து எடுத்து விட்டார். அன்றை தினம் எம் அனைவருக்கும் ஸ்வாமியின் அருள் கிடைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த 11.1.2014 அன்று வைகுந்த ஏகாதசி சிறப்பு பஜனை நன்றாக விறுவிறுப்புடன் இடம் பெற்றுக் கொண் டிருந்தது. அன்றைய தினம் ஸ்வாமிக்கு எவ்வித பிரசாதமும் வைக்கப்படவில்லை ஸ்வாமி “ஷ்யாம சுந்தர ஹரி கோவிந்த போலோ” என்ற பாடலின் ஆரம்பம் முதல் “ஜெய ஜெய ஜெய ஹேமது சூதனா” எனும் பாடலின் முதலாம் காலம் முடிவுறும் வரை தனது ஆசனத்தில் பிரசன்னமானார். ஆதிஷேசன் ஸ்வாமியை ஆசனத்துடன் தூக்கியபடி படமெடுத்து ஆட்டிக் கொண்டிருந்தது. ஸ்வாமி என்னைப் பார்த்து தனது கையை வாய்க்கு அருகாமையில் கொண்டு சென்று பிரசாதமில்லையா என்ற பாணியில் என்னிடம் கேட்டார். நான் இல்லை சுவாமி எனக் கூற சுவாமி அனந்த சயனத்தில் ஆழ்ந்து விட்டார். இவ்வாறாக சுவாமி 5 நிமிடங்கள் வரை காட்சி தந்தார். மேலும் அன்றைய தினம் பஜனை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது கிருஸ்ணரிற்காக அணிவிக்கப்பட்டிருந்த மாலையானது வளர்ந்து பீடத்தில் விழுந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பின்பு சுவாமியின் விருப்பப்படி அவருக்கு பிரசாதம் வைத்தோம்.

கடந்த 14.1.2014 மகரசங்கராந்தி தினத்தன்று அதிகாலையில் சுவாமி வானவில்லில் நடப்பது போன்றதோர் கனவு கண்டேன். அன்றைய தினம் மகரசங்கராந்தி சிறப்பு பஜனையின் போது சுவாமிக்காக “ஓ பாபா ஸாயி பாபா” என்னும் பாடல் பாடப்பட்டுக் கொண்டிருந்த போது ஸ்வாமி பீடத்தில் பிரசன்னமானார். ஸ்வாமியின் உடல் அவ்வாறே யிருக்க அவரது தலைகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போயின. சிவன், கிருஸ்ணர், புத்தர், யேசு, ஜோராஸ்டிரர், சீரடி எனப் பலர், பின் ஸ்வாமியின் உருவம் வளர்ந்து கொண்டே சென்றது. அவ்வேளையில் எமது சாயி நிலையத்தின் கூரைகள் எவையும் எனக்குத் தென்படவில்லை. இருள் சூழ்ந்த வானில் நட்சத்திரங்கள் மாத்திரம் மின்னிக் கொண்டிருந்தன. ஸ்வாமியின் உருவம் கண்ணிற்கெட்டா உயரம் வரை வளர்ந்து ஐந்து நிமிடங்கள் வரை விஸ்வரூப தரிசனமாகக் காட்சி தந்தார்.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஸ்வாமியின் உருவம் ஒடுங்கி சூரியன் போன்ற வடிவத்தில் ஓர் ஒளிப்பிளம்பாக மாறி, சுவாமியின் ஆசனத்தில் சாய்ந்திருக்கும் பகுதியில் சமஸ்கிருத ஓம் எழுதி மறைந்தது. என்னால் என்ன நடந்தது என்பதை உணர முடியவில்லை. எனது ஆத்மா விலகி விட்டது போன்றதானதோர் ஸ்தம்பித்த நிலையில் இருந்தேன். அதன் பின்னர் எமது நிலையத் தலைவர் அவர்கள் நிகழ்த்திய தன் உரையில் அன்றைய மகரஜோதி தினத்தைப் பற்றியும் இந் நேரத்தில் மகரஜோதி பிரசன்னமாகும் எனவும் கூறியிருந்ததாக பின்னர் நான் அறிந்தேன். அவரின் பேச்சின் போது நான் சகல உணர்ச்சிகளும் அற்ற நிலையில் இருந்தபடியால் அவர் என்ன கூறினார் என்பது தெரியாது. நீண்ட நேரத்திற்குப் பின்னரே நான் இயல்பிற்கு வந்தேன். அதன் பின்னர் அவர் என் அருகாமையில் வந்து இன்று மகரஜோதி தினம் என்றும் நான் ஸ்வாமியினைக் கண்ட நேரமே மகரஜோதி பிரசன்னமாகிய நேரம் என்றும் கூறினார். அதன் பின்னர் தான் நான் அனைத்தையும் உணர்ந்தேன்.

ஸ்வாமியின் இத்தகைய அரிய திவ்விய தரிசனங்களை மீண்டும் மீண்டும் நினைக்கும் போது அவர் இவற்றை எனக்கு படிப்படியாக அளித்துள்ளார். என உணர முடிகின்றது. அது மட்டுமல்ல நான் நிதர்சனமாய் காட்சி கொடுத்தேன் என்பதை எமக்கு உணர்த்தும்படி பல சான்றுகளை வைத்துச் சென்றுள்ளார். முக்கியமாக கிருஸ்ணருக்கு சாத்தியிருந்த மாலை வளர்ந்து பீடத்தில் வீழந்தமை, லட்டு உடைத்து உண்ணப்பட்டிருந்தமை, அவர் இருக்கை குஷன் கசங்கியிருந்தமை, விழ இருந்த பூ இடையில் பாதத்துடன் ஒட்டியமை என பலவற்றைக் கூறலாம். இவையெல்லாம் எம்மை ஆளும் பரம்பொருள் எம்முடன் இருந்து எம்மை ஆசீர்வதிக்கிறார் என்பதை எமக்கு உணர்த்துகின்றன. நாம் ஒரு அடி எடுத்து அவரை நோக்கிப் போகும் போது அவர் எம்மை நோக்கி எமக்காக நூறு அடி எடுத்து வைத்து வருகின்றார் என்பது தான் உண்மையும் நிதர்சனமுமான செய்தி ஆகும். அதுவே எமக்குக் கிடைத்த கிடைக்கும் அரிய பிரசாதமும் ஆகும்.

ஸாயி தரிசனம் கோடி புண்ணியம்

ஜெய் சாயிராம்

செல்வி.சாம்பவி அருள்நந்தி
தாமரைக்கேணி சாயி நிலையம்
கிழக்குப் பிராந்தியம்

(2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய இளைஞர் மாநாட்டிற்கு அனுப்பப்பட்ட கட்டுரை)

ஊரும் சதமல்ல உற்றார்
சதமல்ல உற்றுப் பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல
பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ்
சதமல்ல தேசத்திலே
ஆருஞ் சதமல்ல நின்தாள்
சதங்கச்சியே கம்பனே

*எல்லா ஆசைகளையும் துறந்தவன்*
*எதையும் வேண்டாதவன்*
*இந்த வாழ்க்கையையோ, முத்தியையோ*
*தெய்வங்களையோ, தொழிலையோ*
*வேண்டாதவன், தன்னிடம் தானே*
*பூரண திருப்தியடைந்தவன்*
*அவனது ஆசைகள் அற்று விட்டன*
*அவன் ஆன்மாவின் பெருமையைக்*
*கண்டு கொண்டவன்*
*உலகமும், தெய்வங்களும், சுவர்க்கமும்*
*தனக்குள்ளே இருப்பதை*
*உணர்ந்து கொண்டவன், அப்போது*
*தெய்வங்கள் தெய்வங்களில்லை*
*சாவு சாவில்லை*
*வாழ்வு வாழ்வில்லை*
*எல்லாம் மாறிவிட்டன*
*ஒருவனுடைய மனம்*
*துயரத்தில் கலங்காததாகவும்*
*இன்பத்தைத் தொடாததாகவும்*
*பற்றுக்கள்அனைத்தும் நீங்கியதாகவும்*
*அச்சமும், சீற்றமும் இல்லாததாகவும்*
*நிலைபெறுமானால் அவனுடைய*
*அறிவு நிலை பெற்றது.*

- ஒரு அன்பர்
யாழ்ப்பாண நிலையம்



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரில் மறைந்துள்ள செய்தி

பஞ்ச பூதங்கள் மனிதரின் எண்ணம், சொல், செயலால் எவ்வாறு தாக்கமடைகின்றன என்று ஓரளவு எங்களுக்குத் தெரியும்


இக்கட்டுரையில் டாக்டர். எமோட்டோ என்ற ஜப்பானிய விஞ்ஞானி நீரில் எவ்வாறு எமது எண்ணங்கள், ஒலி என்பன பதிகின்றன என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ளார்.

1994 ஆம் ஆண்டில் இவர் Hidden message in Water, The true Power of Water என்ற இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார். பாத்திரத்திலுள்ள நீரை, உணர்வு எழுப்பக் கூடிய சொற்களை (Love, You fool, Stress, Happiness and Unhappiness) என்ற சொற்களை எழுதி ஒட்டினார். சொற்களுக்கேற்ற அதிர்வலைகள தனது எண்ணத்தால் நீருக்குப் பாய்ச்சினார். சில நாட்களுக்குப் பின்பு சடுதியாக குளிராக்கி, பனிக் கட்டியாக்கினார். கட்டியாகும் போது நீர் மூலங்கள் பற்பல சித்திர வடிவங்களில் ஒன்றாவதை விசேட பூதக் கண்ணாடி மூலம் படம் பிடித்தார். என்ன அதிசயம் நல்ல சொற்கள், இனிமையான மென்மையான சங்கீதம் பாய்ச்சப்பட்ட நீரில் ஏற்பட்ட சித்திர வடிவங்களை படம் பிடித்து ஆராய்ந்தார். நேர் மறையான ஒலி தாக்கத்தினால் அழகான வடிவங்கள் ஏற்பட்டன.

எதிர் மறையான அதிர் வலைகளால் ஒழுங்கில்லாத முறையில் மூலகங்கள் சேர்ந்தன. சொல், கீதம் ஆகியவற்றின் உணர்வலைகளே மொழியிலும் பார்க்க முக்கியம் என்றும் அறிந்தார்.


மேலும் இந் நீரினால் ஏற்படும் சிகிச்சை விளைவுகளையும் ஆராய்ந்தார். பல நோய்கள் குணப்பட்டன.

சில தேவாலயங்களில் கிடைக்கும் தீர்த்தம் அல்லது நீர் பூஜைக்கு வைக்கும் நீர் எவ்வளவு சிகிச்சை ஆற்றல் கொண்டுள்ள தென்பதை அறிவோம். அவர் நீர் எவ்வாறு தனியாளினதும் மனித குலத்தினதும் எண்ண உணர்வுகள் எவ்வாறு நீரின் தன்மையை மாற்றுகின்றன என்பதை நிரூபித்தார்.






பிரர்த்தனைக்கு முன்பு


பிரர்த்தனைக்கு பின்பு


நன்றி


உன்னைக் கொல்லுவேன்
கோபம்


அன்பு, அழகு

எமது வேத நூல்கள் கூறியதை விஞ்ஞானம் மெல்ல, மெல்ல அறிந்து கொள்கின்றது.


ஜெய் சாயிராம்


89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளை அனுபவித்தல்



இந்த வாக்கியத்தில் இரண்டு சொற்கள். ஒன்று கடவுள். மற்றது அனுபவம். அனுபவம் நமக்குத் தெரியும். ஆனால் கடவுள் என்பது என்ன என்பதில் நமக்குத் தெளிவு தேவையாக உள்ளது. எனவே முதலில் அதைப் பார்ப்போம்.

நாம் கடவுள் என்பதை வேதங்கள் "தத்"என்றும் "ப்ரம்மம்"என்றும் கூறுகின்றன. நான்கு வேதங்களின் சாரமாகக் கூறப்படும் வேத மஹா வாக்கியங்கள்.

"ப்ரக்ஞானம் ப்ரம்மா - பேரறிவே ப்ரம்மம் என்றும்
"அயம் ஆத்மா ப்ரம்மா"- என்னுடைய ஆத்மா ப்ரம்மம் என்றும்
"தத் த்வம் அஸி"- நீ அதுவாய் இருக்கிறாய் என்றும்
"அஹம் ப்ரம்மாஸ்மி"- நான் ப்ரம்மமாக இருக்கிறேன் என்றும் கூறுகின்றன.

வேதங்களை விளக்க வந்த உபநிதடங்களோ அது வல்ல. அதுவல்ல நேத்தி நேத்தி என்று கூறுகிறது. மேலும் அனுபூதி பெற்றவர்கள் கடவுள் பற்றி விளக்குகையில்
"பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைந்த பரிபூராணந்தம்" என்றும் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு மிளிர்வது"என்றும் "வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உள்ளது மாய், இல்லாததுமாய்"என்றும்
"ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி.."என்றும்
"தெரியாமல் தெரிகின்ற தெரிவினுள் தெரிவே"என்றும்
"விறகில் தீயினன் பாலில் படுநோய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"என்றும் தமது அருட்பாக்களால் விளக்குகின்றனர்.

இந்த அனுபவங்களை எப்படிப் பெற முடியும்?
பிரபஞ்சமெல்லாம் வியாபித்து நிற்கும் அந்தப் பரதத்துவத்தை நம்மால் எப்படி அனுபவிக்க் முடியும்? அதனால் தான் போலும் "எள்ளுக்குள் எண்ணை போல் எங்கும் வியாபகமாய் உள்ளபடி உள்ள ஒன்றை உணரும்நாள் எற்றாளோ"என்று அங்கலாய்க் கிறார் ஒரு மெய்யடியார்.

கடவுள் யாரென்பதை பகவான் விளக்குகையில் "பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்து அன்பு, சேவை, தியாகம் ஆகியவைகளின் மூலமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதுமான அந்த ஏதோ ஒன்றுதான் கடவுள்"என்கிறார்.

பல தடவைகள் சமாதி நிலை கை கூடியவராகக் கூறப்படும் சுவாமி பரமஹம்ஸ யோகானந்தா ஒருநாள் தன் குருவிடம் நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா என்று கேட்டாராம். அதற்கு கிடைத்த பதிலை அவர் கூறுகையில்,: எனது குரு புன்முறுவல் பூத்தபடி சொன்னார். பிரபஞ்சத்தின் கிருமித்தாக்கமற்ற ஏதோ ஒரு மூலையில் சிம்மாசனத்தை நேசிக்கும் வணக்கத் திற்குரிய ஒருவரை நீ எதிர்பார்க்கிறாய் என்று நான் நிச்சயமாக நம்பவில்லை. ஆனந்தமே கடவுள் என்பதை எப்போதாவது அறிந்த தில்லையா" என்றாராம்.

கடவுள் கைலாயத்திலும் வைகுண்ட த்திலும் இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கும் பலருக்கு இது சற்றுக் குழப்பமாகவே இருக்கும்.

"எங்கும் வியாபகமாயுள்ள தெய்வீக தத்துவத்தை எப்போதாவது ஒரு தரம் அனுபவித்தால் அதன் பிறகு ஒரு போதும் நீ துயரப்படமாட்டாய்" என்கிறார் பாபா.

திரேதாயுகத்தில் இராமர் வனவாசம் செய்த காலத்தில் அந்த வனத்தில் இருந்த சாதுக்கள் அவரை தரிசித்து அவரது அழகில் மயங்கி ஐயனே! நாங்கள் உன்னை ஆரத்தழுவி ஆனந்தம் பெறும் வாய்ப்பை எங்களுக்கு அருளவேண்டுமென்று வேண்டிய போது உங்கள் ஆசை துவாபர யுகத்தில் நான் கிருஸ்ணனாக அவதரிக்கும் போது நிறைவேறும் என்றாராம். கிருஸ்ணா வதாரத்திலே அந்த சாதுக்களே கோபியராகப் பிறந்து கண்ணனை அனுபவித்தார்களாம்.

கடவுள் ஆனந்த மயமானவர் என்பதால்தான் நாம் சுவாமியை ஆனந்தமய பகவான் என்று பாடுகிறோம்.

பிரபஞ்சமெல்லாம் வியாபித்து நிற்கும் அந்தப் பரமதத்துவத்தை நம்மால் அறிய முடியாது. ஆனால் அதன் தன்மை



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களை நாம் அனுபவிக்கலாம் என்பது மெஞ்ஞானிகளின் கூற்று. அதனையே சுவாமியும் "என்னுடைய மர்மத்தை ஒருவரும் விளங்கிக் கொள்ள முடியாது" நீங்கள் செய்யக்கூடிய மிகச்சிறந்த காரியம் அதில் மூழ்கி விடுவதே. சுழி ஓடி ஆழத்தை அறிந்து கொள்ளுங்கள். அருந்தி சுவையை அறிந்து கொள்ளுங்கள். என்று கூறுகிறார்.

இந்துமத சாத்திரங்களின் படி கடவுளின் தன்மைகள் சாந்தி, அமைதி, ஒளி, ஒலி, பலம், அன்பு, ஆனந்தம், ஞானம் ஆகியனவாகும்.

சுவாமியிடம் ஒரு ஆன்மீக சாதகர் சுவாமி எனக்கு பலம் அருள வேண்டு மென்றாராம். அதற்கு சுவாமி ஆத்மாவே பலம் என்றாராம்.

தபசிகளும், சாதுக்களும், யோகிகளும், ஞானிகளும் தீவிர சாதனைகள் மூலமே ப்ரமானந்தத்தை அனுபவிக்கின் றனர். ஆனால் உலகியலில் உள்ள தன் அடியார்களுக்கு அவரவர் பூர்வ ஜென்ம புண்ணிய பலனாக அந்த கிடைத்தற்கரிய பேரானந்த அனுபவத்தை அருளியது சாயி அவதாரம்.

நம்முள் உறைந்து கிடக்கும் தெய்வீகத் தன்மைகளை வெளிக் கொண்டு வர நீ கடவுள் என்று நமக்கு சதா நினைவூட்டி நம்மை அந்த மேலான தெய்வீக நிலைக்கு உயர்த்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர் சுவாமி. அதைத் தன் சத்திய சாயி ஆன்மீகக் கல்வித் திட்டத்தின் மூலம் உலகுக்கு நடைமுறைப்படுத்தியும் காட்டியு ள்ளார்.

"உருவத்திலிருந்து அருவத்திற்கு"

அருவமும் உருவமாகி அனாதியாய் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பு. அது கருணையே உருவமாகி வந்ததே பகவான் பாபா. அவரது அன்புத் திருவுருவில் திளைத்திருந்த இலட்சக்கணக் கான அவரது பக்தர்கள் இன்று அந்த பேரானந்த அனுபவத்தை இழந்து நிற்கின் றனர். சுவாமி கூறிய அமுத வாக்கு இப்போது ஞாபகத்திற்கு வருகிறது.



ஐஜூர் மந்திரின் உட் பக்கம்

"எல்லாவித ஆனந்தத்தின் மிகப் பெரிய ஊற்றை அணுகும் இந்த வாய்ப்பை நீங்கள் வேறெங்கும் பெற முடியாது. அது இங்கே இருக்கிறது. மிகவும் அண்மையில் எளிதில் பெறக்கூடியதாக, அருள் நிறைந்ததாக இங்கே இருக்கிறது. இதைத் தவற விட்டால் மீண்டும் இந்த வாய்ப்புக் கிடைப்பது அரிதாகிவிடும்"

சாயி அன்பர்களாகிய நாம் இந்த வாய்ப்பை 2011 மார்ச் இழந்து விட்டோம். உருவ நிலையிலிருந்து தன் அருவ நிலைக்குத் திரும்பி விட்ட அந்தப் பிரேம சொரூபனை நாம் இனி எப்படி அனுபவிப்பது என்ற தடுமாறி நிற்கும் நமக்கு சுவாமி கூறியது.

"என்னை இந்தக் குறிப்பிட்ட உடலோடு அடையாளங் காண வேண்டாமென்று நான் அடிக்கடி உங்களுக்கு சொல்லு கிறேன். ஆனால் நீங்கள் அதை விளங்கிக் கொள்ளவில்லை. நீங்கள் என்னை ஒரு நாமத்தால் மட்டுமே அழைக்கிறீர்கள். எனக்கு ஒரு உருவம் தான் உண்டு என்று நம்புகிறீர்கள். எனக்கு இல்லாத நாமமே இல்லை. நான் இல்லாத உருவமும் இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்"

சுவாமி மேலும் கூறுகிறார்:

"கடவுள் உங்களிடமிருந்து வேறெங்கோ தொலைவில் இல்லை. அவரை நீங்கள் தேடவேண்டியதில்லை. அவர் இதயத்திலிருந்து வரும் அழைப்பிற்கு வர அங்கே ஆயத்தமாக இருக்கிறார். என்னை அழையுங்கள் நான் எப்போதும் உங்கள் பக்கத்திலேயே இருக்கிறேன்"

சுவாமியைப் புறத்தே பார்த்து அனுபவித்த நாம் இனி அவரை அகத்தே அனுபவிக்க முயற்சிப்போம்.

ஜெய் சாயிராம்

திரு.ரி.குலவீரசிங்கம்
திருகோணமலை
(2012)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் பற்றே துன்பத்துக்குக் காரணம்

மனித மனத்தை மூடியிருக்கும் அஞ்ஞானத் திரையை, வேத, சாஸ்திரங்களை வாசிப்பதன் மூலம் கிழித்தெறிய முடியாது. திரையின் ஒரு பக்கத்தில் கடவுளும், மறு பக்கத்தில் ஜீவனும் (மனிதனும்) இருக்கிறார்கள். ஒரு பக்கம் காரணமும் மறுபக்கம் காரியமும் (விளைவும்) இருக்கிறது.
- தெலுங்கு பாடல் -

கடவுள் மலைகளையும், நதிகளையும், காடுகளையும், குன்றுகளையும் படைத்தார். மிகச் சிறிய எறும்பிலிருந்து மிகப் பெரிய யானை வரை எல்லா வாழும் உயிர்களையும் அவர் படைத்தார். படைப்புக்கள் இயங்குவதற்குத் தேவையான அனைத்தையும் அவர் படைத்தார். ஆனாலும் அவருக்கு நிறைவு ஏற்படவில்லை.

தன்னையொத்த தோற்றத்தில் மனிதனைப் படைத்தார்.


இவை எல்லாவற்றையும் படைத்த பின், மகத்தான மலைகளையும், அழகிய நதிகளையும் மனதை மயக்கும் காடுகளையும் பார்த்து மகிழ்ச்சியடைய யார் இருக்கிறார்? இவற்றைப் பார்த்து மகிழ யாருமில்லை என்றால், படைப்பின் பொருள்தான் என்ன? என்று அவர் யோசித்தார். தனது அறிவையும், விவேகத்தையும் கொண்டு, எது அழிவது எது நிரந்தரமானது என்பதைப் பகுத்தறிந்து, படைக்கப் பட்டதிலி ருந்து இன்பத்தை அனுபவிக்கக் கூடியவனாக மனிதனைப் படைப்பதென அவர் அப்போது தீர்மானித்தார். மனிதனால் தான் படைக்கப்பட்ட பொருள்களிலிருந்து மகிழ்ச்சியைப் பெறவும், அதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் முடியும். மனிதன் இல்லாவிட்டால் ஏனைய படைப்புக்களுக்கு மதிப்பே இல்லை. ஏகோஹம் பஹுஸ்யாம் (நான் ஒருவனே பலவுமாவேன்) என்று அவர் சங்கல்ப்பித்துக் கொண்டு தனது வடிவை ஒத்தவனாகவே மனிதனைப் படைத்தார். அவனில் விஞ்ஞானம், சுக்ஞானம் (ஆன்மீக அறிவு), பிரக்ஞானம் (மெஞ்ஞானம்) மற்றும் தனது படைப்பை அனுபவிப்பதற்கான பகுத்தறிவு ஆகியவற்றை வைத்தார். படைத்தவனின் தரிசனத்தை மனிதன் பெற்றவுடன் அவன், வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத் (இருளுக்கு அப்பாற்பட்டவரும், கோடி சூரியப் பிரகாசம் கொண்டவருமான பரமாத்மனை நான் கண்டு கொண்டேன்) என்று பாடினான்.

தொடக்கத்தில், வேத சாஸ்திரங்களைக் கற்பதன் மூலம் இறை தரிசனம் பெற முடியும் என்று மனிதன் நினைத்தான். ஜபம், தியானம், அர்ச்சனை போன்ற ஆன்மீக சாதனைகளை அதற்காகக் கைக்கொண்டான். அவனது சாதனைகள் பலனளிக்காதது அவனுக்கு ஏமாற்றத்தை அளித்தது. இத்தனையும் செய்த பின்னாலும் அவனுக்கு ஏன் ஆனந்தம் கிடைக்கவில்லை. தவம் செய்த பின்னும், வேத சாத்திரங்களை ஓதிய பின்னும், ஒரு பிசாசைப் போலப் பிடித்தாட்டிக் கொண்டிருந்த உடல் பற்றைவிட முடியவில்லை. அப்போது அவன் தனது உடலில் இயல்பைப் பற்றியும், தேகாபிமானத்துக்கான காரணம் குறித்தும் கேள்விகளை எழுப்பினான். பல வழிகளிலும் அந்த உண்மையை ஆராயத் தொடங்கினான். தேகம்பல ஜடப்பொருட்களின் தொகுதியே, அது வெறும் கருவி மட்டுமே எனவும் அதனை ஒரு தெய்வீக சக்தி இயக்குகிறது எனவும். அவன் முடிவுக்கு வந்தான். இந்தத் தெய்வீக சக்தியே மனிதனை இயக்குகிறது. பல்வேறு செயல்களைச் செய்கிறது, சந்தோஷத்தை அனுபவிக்கிறது. இந்த சக்தி எங்கே இருக்கிறது, எங்கிருந்து வருகிறது என்று அவன் மேலும் ஆராய்ந்தான். எங்கே போனாலும் என்ன செய்தாலும் அதனைத் தொடர்ந்து சிந்தித்து வந்தான்.

மனித உடலை மதிப்புடையதாக் குவது தெய்வீக சக்தியே

ஒரு முறை சாக்கிரட்டீஸ் சத்தியத் தேடலில் மனம் மூழ்கியிருக்க நடந்து போய்க் கொண்டிருந்தார். ஓய்வு பெற்ற மற்றொரு அதிகாரி அந்த வழியே எதிரில் வந்தார். சாக்கிரடீஸும் அந்த அதிகாரியும் தத்தம் சிந்தனையில் மூழ்கியிருந்தபடியால் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. எதிரே பார்க்காமல் நடந்ததால் அவர்கள் மோதிக் கொண்டனர். இதனால் கோபமடைந்த அதிகாரி யார் நீ? என்று கேட்டார். உடனே தனது கைகளைக் குவித்து வணங்கிய சாக்கிரட்டீஸ், இதைத்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து நான் யார் என்று சொல்லுங்கள் என்றார். ஒருவர் உண்மையாகவே ஆத்ம விசாரம் செய்தால் சத்தியத்தை அறியக் கடவுள் அவனுக்கு வாய்ப்புத் தருவார். எந்தக் குருவிடமும் போகாமல், ஒரு ஓய்வு பெற்ற அதிகாரி கேட்ட யார் நீ? என்ற கேள்வியால் தனக்குள் ஆத்மீக வேட்கை ஏற்பட்டது குறித்து சாக்கிரட்டீஸ் மகிழ்ச்சியடைந்தார். அதுவொருமுக்கியமான கேள்வி என்று அவர் நினைத்தார். எப்போதும் நான் யார்? என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டிருந்தார். சாக்கிரட்டீஸை ஒரு பைத்தியக் காரன் என்று நினைத்த அதிகாரி பதில் எதுவும் சொல்லாமல் தன் வழியே போய் விட்டார்.

இப்படி யோசித்தபடி சாக்கிரட்டீஸ் கடை வீதிக்கு போனபோது அங்கே ஒரு வேடன் தான் வேட்டையாடிய உயிரற்ற



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலைக் கொண்டு போவதைப் பார்த்தார். ஒருவர் அதன் விலையைக் கேட்டார். அதற்கு வேடன் விலை ஒன்றைக் கூறினான். அந்தப் பணத்தைக் கொடுத்து அவர் அந்தச் செத்த முயலை வாங்கிக் கொண்டு போனார். அதைப் பார்த்ததும் சாக்கிரட்டீஸ், ஒரு செத்த முயலுக்குக்கூட விலை இருக்கிறது. ஆனால் **ஒரு மனிதனின் செத்த உடலுக்கு யார் விலை கொடுப்பார்?** இந்த உடலின் விலை என்ன என்று யாரும் கேட்கக்கூட மாட்டார்கள் என்று எண்ணினார். முயலைப் போன்றதொரு விலங்கின் உடலுக்கும் மரணத்திற்குப் பின் மதிப்பிருக்கிறது. ஆனால் மனிதனுக்கு இல்லை. சக்கரவர்த்தியாகவோ, பீடாதி பதியாகவோ இருந்தாலும் அவரது மரணத் திற்குப் பின் யாரும் அதனைச் சிறிது நேரம் கூட வைத்திருக்கச் சம்மதிக்க மாட்டார்கள்.

ஒரு சவத்தை மயானத்திற்கு எடுத்துச் சென்று கொண்டு இருந்த சமயத்தில் திடீரென்று பலத்த மழை பெய்தது. அருகிலிருந்த கடைக்காரரிடம் சிலர், ஐயா, இந்த உடலை உங்களின் கடையின் முற்றத்தில் சற்று நேரம் வைத்திருக்க அனுமதியுங்கள் என்று வேண்டினார். முடியவே முடியாது. எடுத்துச் செல்லுங்கள் என்று அவர் விரட்டினார். அது அரசனின் உடலா, செல்வந்தரின் உடலா, பீடாதி பதியின் உடலா என்றுகூட அவர் கேட்க வில்லை.

அதே வழியில் சென்ற ஒரு பக்தர் ஐயா, நான் என் செருப்புக்களைக் கோவிலில் அருகே விட்டால் திருடு போகலாம் அல்லது நாய் தூக்கி கொண்டு போய் விடலாம். உங்கள் கடையின் முன் இதை விடுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று கடைக்காரரிடம் கேட்டுக் கொண்டார். அதற்கு ஒப்புக்கொண்ட கடைக்காரர், உள்ளே வந்து இங்கே விடுங்கள். அதை வெளியில் விட்டால் யாராவது தூக்கி கொண்டு போய் விடலாம் என்று கூறினார்.


இதை சாக்கிரட்டீஸ் பாத்துக் கொண்டிருந்தார். உயிரோடிருந்தபோது அவருக்குச் சேவகம் செய்யப் பல பேரைக் கொண்டிருந்தார் இந்தச் செல்வந்தர். அவரைப் பார்க்க வேண்டுமானால் பல நிபந்தனைகள் இருந்தன. ஆனால் அவருடைய பிணத்தை ஒரு கடையின் முன்புறத்தில்கூட வைக்க அனுமதிக்கவில்லை. இறந்த விலங்கின் தோலினால் செருப்புச் செய்ய முடியும். ஆனால் உடலை விட்டு உயிர் பிரிந்து விட்டால், அந்த உடல் முற்றிலும் பயனற்றதாகி விடுகின்றது.

இந்த உடம்பு ஜடம், தசை, இரத்தம், எலும்பு ஆகியவற்றால் ஆனது என்று சாக்கிரட்டீஸ் நினைத்தார். அது நாற்றமெடுக்கும் மல மூத்திரங்களை உற்பத்தி செய்கிறது. இதில் என்ன பெரிய சிறப்பென்று நினைத்து மனிதன் இதனால் ஈர்க்கப்பட்டு, பற்றுக் கொண்டு விடுகிறான்? ஒவ்வொரு கணமும் அது நாற்றமடிக்கிறதே அன்றி மணம் வீசுவதில்லை. பின் எதற்காக மனிதன் தனது உடல் மீது பற்றுக் கொள்கிறான்? அதில் ஏதோ சக்தி மறைந்துள்ளது. அதுதான் மனிதன் பற்றுக் கொள்ளக் காரணமாக அமைகிறது. இல்லையென்றால் அதுவொரு தோலால் ஆன பைதான். உடலுக்குள்ளே ஒரு தெய்வீக சக்தி இருந்து கொண்டு ஆட்சி செய்கிறதென்பதை அவர் இறுதியாக உணர்ந்தார். இதனைத்தேடியறிய அவர் உறுதி பூண்டார்.

ஆத்ம விசாரத்தால் உண்மை அறி

வருணனின் மகனான பிருகு மனித வாழ்வின் உண்மையை விசாரித்தறிய விரும்பினார். மனித வாழ்வின் முக்கியமான அம்சம் எது? எல்லாவற்றிற்கும் அடிநாதமாக அமையும் ஒருமைத் தத்துவம் எது? எதனை அழகானது படைப்பு! இதைப்படைத்த பிரம்மம் யார்? அவனது வடிவம் என்ன? இந்தச் சிந்தனையை விரைவில் வலுத்துவிடவே அதனை அவரால் தாங்க முடியவில்லை. அவர் தன் தந்தையான வருணனை அணுகினார். தந்தையின் பாதங்களில் நமஸ்கரித்து, தந்தையே! பிரமம் என்பது யார்? என்று கேட்டார். பிரமத்தைப் பற்றி வருணன் தன் மகனுக்கு விளக்கியிருக்க முடியும். ஆனால் ஒவ்வொரு வரும் தானே பிரம்ம தத்துவத்தைச் சுய அனுபவத்தால் அறிய முயற்சி செய்ய வேண்டும் என்று அவர் நினைத்தார். அது மட்டுமல்ல, ஒரு தந்தை குருவின் இடத்திலிருந்து செயல்படும் போது, அவர் சீடனின் எல்லா ஐயங்களையும் தீர்த்து விடக் கூடாது. இது சீடனின் சுய முயற்சியை மந்தப் படுத்தி விடும். இது அல்லது அதுதான் பிரம்மம் என்றுகூற முடியாது. அதனை வார்த்தைகளால் விளக்க முடியாது. நீயே விசாரணை செய்து தான் அறிய வேண்டும். கண்ணுக்குத் தெரியாத சக்தி ஒன்று இந்த உடலை நிர்வகிக்கிறது. அந்தக் கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கும் வரை தான் உடலுக்கு மதிப்பு. இந்த தெய்வீக சக்தி தான் "சிவம்"(மங்களகரமானது): அது இல்லாவிட்டால் இது "சவம்"ஆகிவிடும். சிவத்துக்கும் சவத்துக்கும் என்ன வேறுபாடு? அந்த உண்மையை அறிய நீ தவம் செய்ய வேண்டும் என்று கூறிய வருணன், மகனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

தந்தையின் கட்டளைப்படி பிருகு காட்டிற்குச் சென்று ஓர் தகுந்த இடத்தில் அமர்ந்து தவம் செய்யத் தொடங்கினார். அவர் ஆத்ம விசாரத்தில் மூழ்கி விட்டார். ஒருநாள் உயிருள்ள அனைத்தும் இவ்வுலகில் உணவைச் சார்ந்துள்ளன. உணவு அனைத்தும் உயிருக்கும் அவசியம். உணவு உடலுக்கு ஊட்டம் தருகிறது. எனவே உணவே பிரம்மம் என்று அவர் எண்ணினார். தன் தந்தையிடம் சென்று இந்த முடிவை அவர் கூறினார். தந்தையே! நான் பிரம்மம் எது என்று அறிந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேன். **உணவே பிரம்மம்** என்று கூறினார். இல்லை யில்லை மகனே! மேலும் விசாரம் செய். இன்னும் தவம் செய் என்று வருணன் அமைதியாகக் கூறினார். மேலும் சிறிது காலம் தவம் செய்த பின், ஒரு நாள் உணவினால் ஊட்டம் பெற்று, உடல் வளர்ச்சியுறுகிறது. உணவைச் செரிப்பதற்கு ஆற்றல் வேண்டியதாக இருக்கிறது. அது என்ன ஆற்றல்? அதுவே பிராண சக்தி. **பிராணனே பிரம்மம்** என்று தீர்மானித்தார்.

இந்த முடிவுக்கு வந்ததும் அவர் தனது தந்தையிடம் சென்று, தந்தையே! பிராணனே பிரம்மம் என்பதை நான் அறிந்தேன் என்று கூறினார். மெய்தான். மனிதனுக்குப் பிராணன் இருக்கிறது. ஆனால் என்ன பயன்? ஒருவனுக்குத் தட்டில் வைத்து உணவு தரப்பட்டாலும், அவனுக்கு அதை உண்ண மனதில் விருப்பமில்லையென்றால் அவன் அதை உண்ணுவானா? ஆகவே பிராணன் மட்டுமே மனிதனை உயிர் வாழ வைக்காது. போ மகனே! இன்னும் சில காலம் நீ தவமும் விசாரமும் செய்து வா! என்று அவர் கூறினார். ஒரு நோயாளியின் வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்யு முன் மருத்துவர் அவனுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து உணர்விழக்கச் செய்கிறார். அவனிடம் பிராணன் இருந்த போதும், மருத்துவர் தனது வயிற்றில் என்ன செய்கிறார் என்பது அந்த நோயாளிக்குத் தெரிவதில்லை. இவ்வாறாகப் பிராணனைக் குருடாக்கவோ, செயலிழக்கவோ செய்ய முடியும்.

மேலும் சில காலம் தவம் செய்தபின், உணவும் பிராணனும் அவசியம் என்பது உண்மைதான். ஆனால் மனதின் எண்ணம் தான் (சங்கல்பம்) ஒருவரை உணவு உண்ணச் செய்கிறது. எண்ணம் மனதில் உருவாகிறது. எனவே, **மனம் தான் பிரம்மம்** என்று பிருகு தீர்மானத்துக்கு வந்தார். அவர் தனது தந்தையாரிடம் சென்று, தந்தையே! மனமே பிரம்மம் என்று நான் அறிந்து கொண்டேன் என்றார். தன்னருகே மகனை அழைத்த வருணன், மனிதனுக்கு மனம் என்பது இருக்கிறது. சிந்திக்கும் ஆற்றல் இல்லா விட்டால் அந்த மனத்தால் என்ன பயன்? அவன் கரியையோ, சாணத்தையோ, புழுதியையோ கூடத் தின்னலாம். அவனுக்கு விவேகம் தேவையாக இருக்கிறது. ஒரு பைத்தியக் காரனுக்கும் மனது இருக்கிறது. ஆனால் அவனுக்கு என்ன சொல்வது, யாரிடம் அல்லது எங்கே போவது என்பது தெரியாது. எனவே, மனது உண்மையில் பிரம்மம் அல்ல. இல்லையில்லை. இன்னும் அதிகமாக விசாரமும் தவமும் செய் என்று கூறினார்.

சற்றும் சுணங்காமல் மீண்டும் பிருகு தவம் செய்யத் தொடங்கினார். சில காலத்திற்குப் பின், எண்ணமோ, மனமோ இருந்து என்ன பயன்? விஞ்ஞானம் தான் (பகுத்தறியும் திறன்) எண்ணத்திற்குத் திசை காட்டுகிறது. என்று அவருக்குத் தோன்றியது. இவ்வாறு முடிவு செய்த பிறகு தந்தையிடம் சென்று, தந்தையே **விஞ்ஞானமே பிரம்மம்** என்று அறிந்தேன் என்று கூறினார். விஞ்ஞானம், சுக்ஞானம் பிரக்ஞானம் மூன்றும் படைத்த பண்டிதர்கள் பலர் உள்ளனர். அவர்களால் சமுதாயத்திற்கு என்ன பயன்? உண்மையில் அவர்களுடைய அஞ்ஞானம் அவர்களின் பிரக்ஞானத்தை மறைத்து விடுகிறது என்று வருணன் கூறினார். மீண்டும் காட்டுக்குச் சென்று தவமும் ஆத்ம விசாரமும் செய்யும்படி மகனுக்குக் கூறி, ஆசீர்வதித்து அனுப்பினார்.

இன்னும் சிலகாலம் சென்றது. உணவு போஷிக்கிறது.: பிராணன் ஆற்றல் தருகிறது. மனம் ஆசைகளை உற்பத்தி செய்கிறது. புத்தி விவேகத்தை தருகிறது. இதற்கெல்லாம் ஏதோ பயன் இருக்க வேண்டும். அது என்ன வென்று கண்டுபிடிக்க வேண்டும் என்று பிருகு ஒருநாள் யோசித்தார். மீண்டும் தவத்தைத் தொடர்ந்தார். ஒருநாள் அவருக்கு ஒரு ஆச்சரியமான அனுபவம் ஏற்பட்டது. தான் ஒரு ஆனந்தப் பெருங்கடலில் மூழ்கியிருப்பதாக உணர்ந்ததோடு, அந்த நிலையிலேயே தொடர்ந்து இருந்தார். தனது மகனைத் தேடிக் கொண்டு காட்டுக்குள் வந்த வருணன், பிருகு சமாதி நிலையிலிருப்பதை பார்த்தார். பிருகு தூய எல்லையற்ற ஆனந்தத்தில் இருப்பதை அறிந்தார். **ஆனந்தம் பிரம்மா.** இனி மேற் கொண்டு தன் மகனுக்கு வேறெதுவும் தேவையில்லை என எண்ணியபடி அவர் மேலே நடந்தார்.

மிகவுயர்ந்த ஆனந்தத்தை அனுப வித்த பின் பிருகுவுக்கு வேறெந்த ஆசையும் இருக்கவில்லை. எல்லா ஆன்மீக சாதனை களும் அந்த ஆனந்த நிலையை அடைவதற் கானவைதாம். இன்றைய மனிதர் அனுபவி ப்பவை கணநேர இன்பங்கள் தாம்: நித்தி யானந்தம், யோகானந்தம், பரமானந்தம், சச்சிதானந்தம், ஆத்மானந்தம் என்றெல்லாம் அறியப்படும் நிரந்தர ஆனந்தத்தை அவர் அறியார். அவை கடவுளிடமிருந்து மட்டும் கிடைப்பன. வெறொருவரிடமிருந்தும் அல்ல. ஐந்து கோசங்களின் இயல்புகளையும் ஆராய்ந்து, இறுதியாக ஆனந்தமய கோசத்தை அவன் அடைய வேண்டு மென்ற கருத்தில்தான் மனிதனை இறைவன் படைத் தார். அன்னமய கோசம் (உயவிலான உறை), பிராணமய கோசம் (பிராணத்தினாலான கோசம்), மனோமய கோசம் (மனதினாலான உறை), விஞ்ஞான மயகோசம் (அறிவினா லான உறை) ஆகியவற்றை படிப்படியாகக் கடந்து அவன் ஆனந்தமய கோசத்தை அடைய வேண்டும். அன்னமய கோசத்தை விட பிராணமய கோசம் நுண்ணியது. பிராண மய கோசத்தை விட மனோமய கோசம் நுண்ணியது. மனோமய கோசத்தைவிட விஞ்ஞான மயகோசம் நுண்ணியது. எல்லா கோசங்களையும் விட நுண்ணியதும், யாவற்றுள்ளும் பரவியதும் ஆனந்தமய கோசமே.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், துரதிஸ்டவசமாக, இன்றைய மனிதன் தனது ஆனந்தமயமாகிய தனது இயல்பை மறந்து பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றான். ஆதாவது ஆனந்த மயத்திலிருந்து விஞ்ஞான மயம், அதிலிருந்து மனோமயம், அதிலிருந்து பிராணமயம், அதிலிருந்து அன்னமயத் திற்குப் போய் அதிலேயே நின்று விட்டான். அவன் தனது உடலுக்கே மிக அதிக முக்கியத்துவம் தருகிறான். பிரமமென்ற மிகவுயர்ந்த நிலையை அடையும் பொருட்டுக் கடவுள் மனிதனைப் படைத்தார். கடவுளின் சங்கல்ப்பத்திற்கு எதிராக இன்று மனிதன் மிகத்தாழ்ந்த நிலைக்கு இறங்கி விட்டான். உடலையறியும் கல்விக்கு என்ன அவசியம்? என் கையிலணிந்துள்ள தங்கக் காப்பை பார்ப்பதற்கு கண்ணாடி எதற்கு? கடவுளைப் பார்க்கத்தான் ஆன்மீக சாதனை தேவை, உடலின் இயல்பை அறிவதற் கல்ல. உடல் என்பது ஒரு கருவியைப் போன்றது. உள்ளி ருப்பவனை மறந்து விட்டு நீ உன் முழுக் கவனத்தையும் கருவியின் மீது செலுத்து கிறாய். உடலின்பம் எத்தனைநாள் நீடிக்கும்? ஒரு சிறிய உதாரணம்: பசிக்கும் போது நீ உணவகத்திற்குப் போகிறாய். ஆறு ரூபாய் கொடுத்து மூன்று சப்பாத்திகளைச் சாப்பிடு கிறாய். பசி தீர்ந்து சந்தோஷமடைகிறாய். இந்தச் சந்தோஷம் எவ்வளவு நேரம்? இரண்டு மணி நேரத்தில் மீண்டும் பசிக்கிறது.. இந்த உடலெனும் இயந்திரம் எத்தனை ஆயிலையும் பெட்ரோலையும் குடிக்கிறது. இதை ஒரு எந்தரம் போலவே பயன் படுத்துவாயானால், அதன்மீது ஏன் அத்தனை பற்றுக் கொள்கிறாய்? உடற் பற்றைக் கடந்து செல்.

சாஸ்திரங்களின் அறிவுரைகளைப் பின்பற்று

மனித மனம் மிகச் சக்தி வாய்ந்தது, ஆனால் அதே சமயத்தில் மிகவும் அலை பாய்வது. பெரும் வீரனான அர்ஜுன னாலேயே தனது மனத்தைக் கட்டுக்குள் வைக்க முடியவில்லை. சஞ்சலம்ஹி மனஹி கிருஸ்ணா ப்ரமாதி பலவத்ருடம் (மனம் நிலையற்றது, கலக்கமுறுவது, சக்தி வாய்ந்தது) ஓ கிருஸ்ணா! மனதின் சக்தியையும் சஞ்சலத் தன்மையையும் என்னால் எப்படி விவரிக்க முடியும், ஒரு விநாடி கூட அது அமைதியாக இருப்பதில்லை. குரங்கு கூட அசையாதிருக்கலாம். மனம் இருப்பதில்லை. மனம் மிகவும் சக்தி வாய்ந்தது, ஆபத்தானது, அடக்கக் கடினமானது. இது மனதின் இயல்பு. மனதின் காரணமாகவே மனிதன் துன்பங்களை, துக்கத்தை, சோதனைகளைச் சந்திக்கிறான். சஞ்சலிக்கும் மனதே அமைதியின்மை, குழப்பம் ஆகியவற்றை ஏற்படுத்தி, இறுதியில் அவனை மனநோய் மருத்துவமனைக் குக் கொண்டு போய் விடுகிறது.

மாணவர்களே! எத்தனை நூல்களை வேண்டு மானாலும் படியுங்கள். ஆனால் கல்வியின் நோக்கத்தை அறிந்து கொள்ளுங்கள். யாராவது உங்களுக்கு பகவத் கீதையைக் கொடுத்தால் அதை மரியாதையோடு வாங்கி, தலை மீதும், இதயத்திலும் வைக்கிறீர்கள். தினமும் அதைப் பாராயணம் செய்கிறீர்கள்.


தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே சமவேத யுயுத்சவ
மமக பாண்டவஸ்சைவ கிம்குர்வத சஞ்சய

என்ற முதல் சுலோகத்தில் தொடங்குகிறீர்கள். பாராயணம் முடிந்ததும் அதைப் பீடத்தில் வைத்து அதன் மீது மரியாதையோடு இரண்டு மலர்களைத் தூவுகிறீர்கள். பகவத் கீதையின் போதனைகளைக் கடைப்பிடிக்காவிட்டால் இந்தச் சடங்கு முறை வழிபாட்டின் பயன் என்ன? பக்தர்கள் மற்றும் கல்விமான்களின் மிகப்பெரும் அறியாமையின் அடையாளம் இதுதான். பகவத்கீதை எழுதிய தாளுக்கும், சொல்லுக்கும் பூஜை செய்கிறீர்கள், ஆனால் சொல்லப்பட்ட கருத்துக்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் கிடைக்கும் ஆனந்தத் தேனைப் பருகுவதில்லை. பைபிள், குர்ஆன், வேதங்கள், உபநிடதங்கள், போன்ற புனித நூல்கள் கடைப்பிடிப்பதற்கானவையே அன்றி, வெறும் பாராயணத்துக்கானவை அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். பக்தர்களின் பலரின் கைகளில் இப்போதெல்லாம் சாய் சத்சரிதம் இருப்பதைப் பார்க்க முடிகிறது. நாங்கள் தினமும் இதைப் பாராயணம் செய்கிறோம் என்கிறார்கள். இதைவிட முட்டாள்தனம் எதுவுமில்லை. இது பாராயணம் மட்டுமே செய்வதற்கான புத்தகமா? பின்பற்றுவதற்கானது. ஷிர்டி சாய் பாபா இந்த நூலில் கூறியிருப்பதைக் கடைப்பிடியுங்கள்.

இதோ ஒரு சின்ன உதாரணம்: ஒருவனுக்கு இருமலும் ஜுரமும் இருந்தது. கிராமத்து வைத்தியர் அவனை, சுக்கு, மிளகு, இஞ்சி மூன்றையும் சேர்த்து கஷாயம் வைத்துக் குடிக்கச் சொன்னார். நான் சுக்கு, மிளகு, இஞ்சிக் கஷாயம் குடிக்க வேண்டும் என்று அவன் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டே இருந்தான். அவனுக்கு வியாதி தீரவில்லை. அந்தக் கஷாயத்தைத் தயார் செய்து குடிக்கவில்லையென்றால் அவனுக்கு நோய் எப்படித் தீரும்! அதே போல, புனித நூலின் சொற்களைக் கடைப்பிடிக்காமல், திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தால் உங்களுக்கு எப்படி நிவாரணம் கிடைக்கும்? பின்பற்றினால்தான் பயன் விளையும்.

பஞ்சபூதங்களும் பரமனின் கட்டுப்பாட்டில்

பஞ்சபூதங்களும் பரமனின் கட்டுப்பாட்டில் உள்ளன. படைத்தவனின் ஆணைக்கு அவை கட்டுப்படுகின்றன. இந்த உண்மையை யாரும் உணர்வதில்லை. இதனை உணர்ந்தால், உன் கஷ்டங்களெல்லாம் ஒரு நொடியில் விலகும். எல்லாம்



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் செயல் என்று கூறி கடவுளை நீ துணைக்கு அழைக்கிறாய். ஆனால் உண்மையிலேயே கடவுளின் கட்டுப்பாட்டில் ஏதாவது உள்ளதா என்று சந்தேகிக்கின்றாய். பைபிளில் ஒரேயொரு சந்தேகப்படும் தாமஸ் இருந்தார், ஆனால் இன்றைக்கு எல்லோருமே சந்தேகப் பிராணிகள் ஆகிவிட்டனர்.

ஒருமுறை ஷிர்டியில் ஆலங்கட்டி மழை பெய்தது. பனிக்கட்டி மக்களைக் கற்களைப் போலத் தாக்கியது. அச்சத்தால் கிராமத்தினரும் வேலையாட்களும் அங்குமிங்கும் ஓடினர். கோவில்கள், சத்திரங்கள் என்று கிடைத்த இடத்திலெல்லாம் அவர்கள் புகலிடம் தேடினர். துவாரகாமாயி மிகச் சிறிய இடம். அதற்குள்ளும் மக்கள் நுழைந்து ஒவ்வோர் அங்குல இடத்திலும் அவர்கள் நின்று கொண்டனர். பாபா கருணை கூர்ந்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று எல்லோரும் பிரார்த்திக்கத் தொடங்கினர். துவாபர யுகத்தில் கோபியரும், கோபாலரும் கடும்மழையிலிருந்து காப்பாற்ற ஸ்ரீ கிருஸ்ணரைக் கோரியது போல, ஷிர்டியில் அவர்கள் பாபாவை அழைத்தனர். அச்சா, அச்சா, தேக்கேகா, தேக்கேகா (நல்லது, நல்லது, பார்க்கலாம், பார்க்கலாம்) என்றார் பாபா. ஒரு தூணைத்தட்டி, இங்கே பார், உன் மிரட்டல் போதும், அடங்கு. இப்போதே நீ உன் கோபத்தை நிறையக் காண்பித்தாயிற்று. இவர்கள் உன் ஆற்றலைக் கண்டு அஞ்சி நிற்கின்றனர். இதற்குப் பின்னும் எதற்காக நீ ஆட்டம் போடுகிறாய்? நீ வரம்பு கடந்து போகிறாய். சாந்தமடைவாயாக என்று கூறினார். அந்தக் கணத்திலேயே ஆலங்கட்டி மழை அடங்கியது.

இதை நான் ஏதோ பெருமையடித்துக் கொள்வதற் காகச் சொல்லவில்லை. நீங்கள் மறந்து போயிருக்கலாம், இரண்டு நாட்களுக்கு முன்னால் இங்கே என்ன நடந்தது என்று நினைத்துப் பாருங்கள். நான் அருளுரை வழங்க வேண்டிய நேரத்தில் காற்றும் மழையும் சுழன்றடித்தது. இந்த மண்டபத்திற்குள்ளே சாரலடிக்கும் அளவுக்கு பலமான காற்றும் மழையும். நான் பேசத் தொடங்கியதும் எல்லாம் நின்று போனது. அதற்குப் பின் ஒரு சொட்டுக்கூட மழை பெய்ய வில்லை.


பாபா ஷிரடியில் இருந்த போது துவாரகாமாயியில் இருந்த துனியில் எப்போதும் நெருப்பை எரியவிட்டுக் கொண்டிருந்தார். அதற்கென்று பக்தர்கள் வெளியேயிருந்து விறகு வாங்கி வருவார்கள். அந்தப் புனித நெருப்பில் விறகை இடுகிற திருப்திக்காக அவர்கள் அப்படிச் செய்தார்கள். தமது செயல்களின் இலாப நஷ்டங்களை அவர்கள் எண்ணிப் பார்த்ததில்லை. ஒரு சமயம் சில முட்டாள்தனமான பக்தர்கள் சிறிதும் யோசிக்காமல் ஏராளமான விறகைத் தீயில் போட்டு விட்டார்கள். சிறிது நேரத்தில் தீ பெரிதாகிக் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. இதைப் பார்த்ததும் சியாமா? என்ன நடந்தது? என்று கேட்டார் பாபா. இங்கே அக்கினித் தேவன் எழுந்தருளி விட்டார் என்றான் சியாமா. "அக்கினித் தேவன் எழுந்தருளியது சரி, அவரை இங்கே பார்க்க யாருக்கு ஆசை?"என்றார் பாபா. பிறகு அவர் நெருப்பை நோக்கி? "யாரிடம் உன் சாமர்த்தியத்தைக் காட்டுகிறாய்? உனக்கு பாடம் கற்பிக்க இங்கு யாருமில்லாததால் தான் இப்படி நடந்து கொள்ளுகிறாய். எங்கே வேண்டுமோ அங்கே போய் உன் சாமர்த்தியத்தைக் காண்பி. அநாவசியமாக இங்கே எதற்கு?" என்று கூறியபடி, அருகிலிருந்த தூணைத் தடியால் அடித்தார். உடனேயே நெருப்பின் தீவிரம் தணிந்தது. இதன் பொருள் என்ன? காரணமில்லாமல் எதுவும் நடக்கக் கூடாது. எந்த மடையனாவது கங்கைக் கரையில் நின்று கொண்டு, "வாருங்கள் நான் உங்களுக்குத் தண்ணீர் தருகிறேன்" என்று கூவுவானா? கங்கை பெருகி ஓடிக் கொண்டிருக்கும் போது, தண்ணீர் கொடுக்க அவன் யார்? கலியுகம் நடக்கும் காரணத்தால், சிலர் எந்தக் காரணமுமின்றி முட்டாள்தனமாக நடந்து கொள்ளுகிறார்கள். பண்டிதர்களிடம் கூட இத்தகைய நடத்தை யைப் பார்க்க முடிகிறது.

சிலர் கங்கை நீரைக் கையிலெடு த்துக் கொண்டு, "கேசவாய நமஹ, மாதவாய நமஹ, கோவிந்தாய நமஹ" என்றெல்லாம் கூறியவாறு நீரைத் திரும்ப வாக்கிறார்கள். யாருடைய நீரை யாருக்கு யார் கொடுப்பது? இது உன் அப்பாவுடையதா? இல்லை. தாத்தாவுடையதா? கிடையாது. கங்கை நீரை கங்கைக்கே வார்க்கிறாய். இவ்வாறு அர்த்தம் புரியாமல் சடங்கு ரீதியாகக் காரியங்களைச் செய்வதால் இன்றைக்கு நாத்திகம் பெருகிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் இருக்கும் பொருளை நீ புரிந்து கொண்டு, அதைப் பிறருக்கும் கூறி அவர்களு டைய பாராட்டைப் பெற முயல வேண்டும். இந்த நவீன உலகில் ஒரு சிறு குழந்தை கூட எல்லாவற்றிற்கும் காரணம் கேட்கிறது.

இன்று மக்கள் அறியாமையால் அழுத்தப்பட்டுள்ளனர். ஏன்? உடல் மீது கொண்ட பற்றுத்தான் முக்கியக் காரணம். தனது உடல் பற்றைக் கடவுள் மீதான அன்பாக மாற்ற முடிந்தவன் பாக்கியசாலி. அப்போது தான் மனிதத்துவத்துக்கு மதிப்பு உண்டு. கடவுள் மீது அன்பு பூணாதவரை ஒரு செத்த முயல் பெறும் மதிப்பைக்கூட உன் வாழ்க்கை பெறாது.

ஆத்மாவில் பற்றுக் கொள்.

ஒரு சிறிய கதை இருக்கிறது: பெரிய உண்மைகளையும் சிறிய கதைகளால் விளக்கி விடலாம். "பிரபோ கோவிந்தா, தாமோதரா, நாராயணா" என்று இசைத்த படியே நாரதர் மூவுலகங்களிலும் சுற்றி வருகிறார். ஒரு முறை அவர் வைகுண்டத் துக்குப் போய் ஸ்ரீமன் நாராயணரை



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நமஸ்கரித்தார். அவரை அமரச் சொன்ன நாராயணர், "நீ மூவுலகங்களையும் சுற்றி வருகிறாய். எங்காவது என் படைப்பில் தீமையைக் கண்டதுண்டா?" என்று கேட்டார். மன்னிக்க வேண்டும். பிரபோ! உங்கள் படைப்பில் எவ்வளவோ தீயவை உள்ளன. என்றார் நாரதர். "என்ன சொல்கிறாய் நாரதா? பிரம்மதேவனின் புத்திரரான நீ இப்படி விவேகமின்றிப் பேசலாமா? என் படைப்பில் தீமையே கிடையாது" என்றார் ஸ்ரீமன் நாராயணர். "பிரபோ தினந்தோறும் மக்கள் மலங் கழிக்கிறார்களே அது தீயதல்லவா?" என்று கேட்டார் நாரதர். இதைக் கேட்டு நாராயணருக்கு அதிசயமாயிற்று. "ஓ நாரதா? அதைத் தீமை என்று நினைப்பதே தவறு. நீ புத்தியில்லாமல் பேசுகிறாய். அது தீயதல்ல. நல்லது"என்றார்."ஸ்ரீமன் நாராயணரே இப்படிப் பேசினால் நானென்ன சொல்வது! ஆனாலும், அதைக் கெட்டதல்ல நல்ல தென்பது எப்படி?"என்றார். நாரதர். உடனே நாராயணர், "சரி நீ என்னைக் கேட்பதற்குப் பதில் மனித மலத்தையே கேள்" என்றார். ஸ்ரீமன் நாராயணர் இப்படிச் சொன்னபின் நாரதரால் என்ன செய்ய முடியும்?

நாராயணர் கூறியபடி நாரதர் மலத்தினருகே சென்றார். அதனிடமிருந்து பத்தடி தூரம் இருக்கையில், "நாரதரே என்னருகே வராதீர், எட்டி இரும்" என்றது மலம். இதைக் கேட்டதும் ஆச்சரியப்பட்டார் நாரதர். "என்னிடம் வராதே என்று நான் சொல்ல வேண்டும், நீ எப்படி இதைக் கூறுகிறாய்?" என்றார். அவர் நாரதரே நேற்றிரவு நான் சுவையான பாலாகவும், தயிராகவும் சோறாகவும் சக்கரைப் பொங்க லாகவும் இருந்தேன். என்னை நிவேதன மாகக் கடவுளுக்குப் படைக்கத் தகுதியான வனாக இருந்தேன். ஒரு மனிதனுடன் சேர்ந்ததால் எனக்கு இந்தக் கதி ஏற்பட்டு விட்டது. மறுபடியும் ஒரு மனிதன் என்னை அணுகினால் இன்னும் என்ன ஆவேனோ! என்றது மலம்.


நீ படைப்பில் கெட்டது என்று நினைப்பது உனது எதிர் வினை, பிரதி பிம்பம் மற்றும் எதிரொலியே ஆகும். **உண்மையில் கடவுள் கெட்டது எதுவும் படைக்கவில்லை.** நீ எதனோடு சேர்கிறாயென்பதைப் பொறுத்ததே எல்லாம். உன்னோடிருப்பவர் யார் என்று கூறு, நீ யாரென்று நான் கூறுகிறேன். எத்தகையவரோடு நீ சேர்கின்றாயோ, நீ அத்தகையவன் ஆகிறாய். ஒரு ஜாடியில் ஆவக்காய் அல்லது கோங்குரா **ஊறு**காயை வைத்தால் அது ஓராண்டு கூட இருக்கும். இந்த மனித உடலாகிய ஜாடிக்குள் அதைப் போட்டால், அன்று மாலைக்குள் அது கெட்டு விடும். நீ மாவரைக்கும் எந்திரத்தைப் பார்த்திருப்பாய். அதில் கோதுமையைப் போட்டால், கோதுமை மாவு வெளியே வரும். அரிசியைப் போட்டால் அரிசி மாவு வெளியே வரும். பருப்பைப் போட்டால் பருப்பு மாவு வெளியே வரும். ஆனால் மனித உடலுக்குள் இனிப்பான லட்டுவைப் போட்டால், வெளியே வருவதோ நாற்றமடிக்கும் மலம்!. எனவே இந்த **உடல் மீது நீ பற்றற்ற தன்மையோடு இருக்க வேண்டும்.** ஒரு மாவு மெஷினை விட, ஒரு ஜாடியைவிட இந்த உடல் கீழானது.

அப்படி இருக்க, நீ இந்த உடலுக்கு முக்கியத்துவம் தருவது ஏன்! ஏனென்றால் இதில் தான் ஆத்மா கால் முதல் தலை வரை பரவியிருக்கிறது. "தேஹோ தேவாலயப் ப்ரோக்தோ ஜீவோ தேவஸ் ஸனாதன"(உடலே கோவில் , உள்ளுறைவதே தெய்வீகம்). இந்த உடலை நீ ஒரு தேவாலயமாகக் கருத வேண்டும். கடவுளில்லாத கோவிலை நீ ஏன் விரும்ப வேண்டும்? எப்போதும் இந்த உடலாகிய ஆலயத்தில் கடவுள் இருக்கிறார் என்றெண்ணி, செய்வதை யெல்லாம் அவருக்கே அர்ப்பணித்து விடு. அத்தகைய புனிதமான எண்ணம் வளரும் போது தான், உன் உடல், மனம், புத்தி, சித்தம், புலன்கள், அந்தக் கரணம் ஆகிய அனைத்தும் புனிதமாகும். எனவே உன் தேகாபிமானத்தை (உடல் பற்று) தெய்வாபிமானம் ஆக்கி விடு (தெய்வ பக்தி). இது தான் உண்மையான சாதனை. ஆத்மாபிமானம் இல்லாமல் வேறெந்த சாதனை செய்தும் பலனில்லை. நான் பஜனை செய்கிறேன் என்றெல்லாம் கூறிக் கொள்கிறார்கள். ஆத்மாபிமானம் அடையும் வரை அத்தகைய ஆன்மீக சாதனைகள் அவசியம் தான்.

ஒரு உயர் ரக மாங்கன்றை ஊன்றுகிறீர்கள். சிறிது காலத்தில் அது பிஞ்சு வைக்கிறது. அது பழுக்கும் வரை புளிக் கத்தான் செய்யும். பழுத்தால் தான் அது சுவையாக, இனிப்பாக இருக்கும். அது போலவே, உனது சாதனை முதிரும் போது உனக்கு ஆத்மபாவம் வரும். அத்தகைய பக்குவ நிலை வரும் வரை உனது கடமைகளைச் செய்து வா. அதே நேரத்தில் உன் இலட்சியம் எது என்பதை மறக்காதே. அந்த இலக்கை அடைய வேண்டும் என்று உன்னை நினைவு படுத்திக் கொண்டேயிரு. படிப்படியாக உன்னை தேகப்பற்றிலிருந்து விடுவித்துக் கொண்டு, ஆத்மாவோடு இணைத்துக் கொள். அப்போது தான் என்னால் நிரந்தர ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். இந்த சத்திய ஞானப் பாதையில் நடந்து போய் பரமானந்தத்தில் மூழ்கிவிடு.

ஜெய் சாயிராம்

( பகவான் 31.08.1996 இல் குல்வந் ஹோலில் ஆற்றிய அருளுரை)



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையிலும், திட்டமிடலிலும் ஒரு மாற்றம்

## Paradigm Shift

ஓம் ஸ்ரீ சாயி அவ்யக்த ரூபாய நம:

பகவானின் கமலப் பொற்பாதங்களில் கோடி வணக்கம். இங்கு பேசப் போவது, பகவானின் பேச்சாகவே இருக்க வேண்டு மென்று பிரார்த்திக்கிறேன்.

எங்களது சிந்தனையிலும், திட்டமிடலிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். பகவான் கூறிய கதை: சாயி பக்தனும் சிறிய மகனும் பகவானுக்கு நைவேத்தியம் வைத்து பஜனை பாடுவது நெடுங்காலம் நடந்தது. வீட்டுப் பூனை நைவேத்தியத்தை எச்சில்படுத்தும் என்று தகப்பனார் பூனையை கயிற்றால் கட்டி விட்டே பிரார்த்தனையைத் தொடங்குவார். காலம் ஓடி தகப்பனாரும், பூனையும் இறந்து விட்டன. மகன் வளர்ந்து விட்டான். பூஜையைத் தொடர்ந்து செய்ய விருப்பம் கொண்டான். கயிறு இருந்தது பூனை இல்லையே கட்டி வைக்க என்று கலங்கினான். இங்கே பூனையைக் கட்டி வைத்ததன் காரணம் தெரியவில்லை. அதுவும் கிரியை முறையில் சேர்ந்தது என்றே மகன் நினைத்தான். மகனுக்குச் சிந்தனை மாற்றம் தேவைப்பட்டது. விளக்கம் இல்லாத கிரியைகளினால் சங்கட ங்கள் ஏற்படலாம்.

இன்னொரு நிகழ்வு: பகவான் தனது ஆரம்பப் பாடசாலை மாணவர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அப்போது மாணவர்களைப் பார்த்து "யாருக்கு சாயி கீதா யானை வேண்டும். அதைப் பராமரிக்க வேண்டும்" என்று வினாவினார். சிறு பிள்ளைகளால் ஒரு யானையைப் பராமரிக்க முடியாதென்பது பகவானுக்குத் தெரியும். ஆனாலும் இவர்களின் சிந்தனையைத் தூண்டவே கேட்டார். சகல மாணவர்களும் சில நிமிடங்கள் மௌனமாகவே இருந்தார்கள். ஒரு மாணவன் எழுந்து "சுவாமி நான் பராமரிப்பேன்" என்று சொன்னான். சுவாமி மகிழ்ந்து. தனது கை அசைவினால் ஒரு சின்ன யானையைச் சிருஷ்டித்து அப்பையனுக்குக் கொடுத்தார். யாருக்கு "முடியும்" என்ற சிந்தனை எழும் என்று பார்க்கவே சுவாமி இந்நாடகத்தை நடத்தினார்.

திட்டங்களைத் தயாரித்து முன்னெடுத்துச் செல்பவர் களுக்கு பகவானின் செய்தி யாதெனில்:

" நீ என்னை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால்
நான் உன்னை நோக்கி நூறு அடிகள் எடுத்து வைப்பேன்"

நாம் எது செய்ய முற்படும் போதும், தொடக்கத்தில் பகவானைப் பிரார்த்தித்து அவருக்கு அர்ப்பணித்தே செய்ய வேண்டும். "சுலபப் பிரசன்னாய" பகவான் மகிழ்ந்து விட்டால் எல்லாம் செய்வார். மேலும் பகவான் சொன்னது:

" உனது தயார் நிலையைத் தெரியப்படுத்து
நான் உனக்கு வேண்டிய ஆற்றலைத் தருவேன்"

சுவாமியின் மந்திரமான வாக்கியங்களிலுள்ள தார்ப்பரியத் தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சபையோரின் முன்னிலையில் மூன்று கேள்விகளை முன் வைக்கிறேன். அவையாவன:

1. நாம் தர்மம் செய்கிறோமா?
2. சரணாகதியென்றால் என்ன?
3. ஒரு வருடத்திலுள்ள 365 நாட்களில் எந்த நான் புனிதமானது?

சாயியை அடைவதற்கு தர்மம் செய் வதும் ஒரு மார்க்கம். இப்போது சேவையின் மூலமே கடவுளை அடையலாம். உதாரண மாக நாராயண சேவையை எடுப்போம்.

"நாம் அறுவடை செய்யப்பட்ட தானியத்தில் ஒரு பகுதியைத் தியாகம் செய்து, அதன் மூலம் தயாரிக்கப்பட்ட உணவை மனித உருவில் உள்ள தெய்வங்களான நாராயணர்களுக்கு காணிக் கையாக அளிக்கிறோம்" இதிலுள்ள உள் அர்த்தத்தை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் தர்மம் செய்கிறோம் என்று சொல்வது சரியா? நாம் தர்மம் செய்கிறோம் எனக் கூறுவதற்கு, என்ன உரிமையுண்டு.

அறுவடையில் கிடைத்ததில் ஒரு பங்கை காணிக்கையாக அளிக்கிறோம். இதில் தியாகமும் நடைபெறுகிறது. **தியாகம் சேவையின் முக்கிய அம்சம்**. ஒரு கோடி வருமானமுள்ளவர் ஆயிரத்தைக் கொடுத்தால் அதில் தியாகம் இல்லை. மனித உருவில் இருக்கும் நாராயணர்களுக்குக் கொடுக்கிறோம். அறுவடைக்குத் தேவை யான எல்லாவற்றையும் இறைவனே தந்தார். நிலம், மழை, வெப்பம், காற்று எல்லாமே அவர் தந்தார். எனக்கு இவ்வளவும் தந்த இறைவனுக்கு என்ன செய்ய வேண்டும்? நன்றியைத் தான் செலுத்தலாம். இதுதான் **எமது காணிக்கை**. அந்த மனிதனாக இருக்கும் தெய்வத்திற்குத்தான் இக் காணிக்கையாகும். இப்படியான சிந்தனை மாற்றம், விளக்கம் தேவை. நாம் தர்மம் செய்யவில்லை. காணிக்கையைத் தான் செலுத்துகின்றோம்.

மானிட சேவையா? ஆன்மீக சாதனையா? அல்லது இரண்டும் தேவையா?



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை:

தன்னலமற்ற, இறைவனுக்கு அர்ப் பணிப்பு என்ற பாணியில் தேவைகள் உள்ள ஒருவருக்குச் செய்யம் உதவி.

சாதனை:

எமது நேரத்தையும், சக்தியையும் தினந்தோறும் இறைவனுடன் சங்கமமாக்கும். ஓர் நிகழ்வு.

உதாரணம்: நாமஸ்மரணை, தியானம்

இதற்கொரு கதை. பேரரசனான சிவாஜி 'நான் தான் எல்லாம் செய்கிறேன்' என்ற மனப்பாங்கிலே சகலதையும் செய்தான். அரசனின் குரு அரசனை ஒருநாள் ஒரு காட்டிற்கு கூட்டிச் சென்றார், அரசன் அங்கே இருந்த அனைத்தையும் இரசித்தான். வியந்தான், ஆனந்தித்தான். வழியில் ஒரு பாறைக்கல்லு தென்பட்டது. குரு அதில் ஒரு தட்டுத் தட்டினார். பாறைக்கல் உடைந்தது. அதற்குள் சிறிய தேரை சிறிதளவு நீருடன் வாழ்ந்து கொண்டிருந்ததை உணர்ந்தார்கள். இதைச் செய்தவன் யார்? படைத்தவன் படி அளப்பான் என்ற பழைய மொழிக்கு காட்சியுடன் விளக்கம் கிடைத்தது, நாங்கள் வெறும் கருவிகளே என்பதை அரசன் உணர்ந்தான்.


**ஆன்மீக சாதனை ஏன் அவசியம்?**

- சேவைக்குரிய சரியான மனப்பாங்கை விருத்தி செய்ய.
- செய்யும் சேவை எனக்கு என்ன செய்கிற தென்பது சேவையைவிட முக்கியமானது
- சாதனையுடன் சேவையும் இணைந்தால் தான் அன்பு மிளரும். அல்லாவிடில் சாதாரண ஒரு தொடர்பாகவே இருக்கும்.
- சேவையில்லாமல் சாதனை ஒரு சுமை யாகும்.

சாதனை மூலம் அகங்காரம் அழிந்து, திரிகரண சுத்தி ஏற்பட்டு முறையான மனப்பாங்கு விருத்தியடைந்து அன்பு மிளிரும்.

**சேவை ஏன் செய்ய வேண்டும்?**

சேவை செய்வது கடமையல்ல. கடப்பாடு என்பதை உணர வேண்டும். அசௌகரியமானதென நினைக்கக் கூடாது.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



நாங்கள் செய்யா விட்டால் பகவான் வேறு கருவிகளைப் பாவித்துக் கொள்வார்.

சேவை மனதைத் தூய்மைப்படுத்தி, ஒற்றுமையை உணரவைத்து தெய்வீகத்தை அனுபவிக்க வழி வகுக்கிறது. சாதனை, சேவைக்கான சரியான மனப்பாங்கை ஏற்படுத்துகிறது. சேவை மனதைத் தூய்மைப் படுத்தி சாதனையை இலகுவாக்குகிறது.

**கீதையின் சாராம்சத்தை நினைவு கொள்வோம்.**

நீ அழுவதற்கு எதை இழந்தாய்?
நீ இழந்து விட்டாய் என்று நினைப்பதற்கு வரும் போது எதனைக் கொண்டு வந்தாய்
நீ அழிந்து விட்டது என நினைப்பதற்கு எதனை உற்பத்தி செய் தாய்?
நீ எதையும் கொண்டு வரவில்லை
உன்னிடம் இருப்பதெல்லாம் இங்கிருந்து பெறப்பட்டதே
நீ கொடுத்ததெல்லாம் இங்கிருந்து பெறப்பட்டதே
நீ பெற்றதெல்லாம் இறைவனிடமிருந்து பெறப்பட்டதே
நீ கொடுத்ததெல்லாம் இறைவனுக்கே கொடுத்தாய்
நீ வெறுங்கையுடன் வந்தாய், வெறுங்கையுடன் திரும்புவாய்,
இன்று உன்னிடமிருப்பது நேற்று இன்னொருவருக்குச் சொந்த மாயிருந்தது. நாளை மறுதினம் அது மற்றவருக்குச் சொந்தமாகி விடும்.

சரணாகதி என்றால் என்ன? என்பதைச் சிந்திப்போம். இதற்கு மகாபாரதத்தில் நடந்த திரௌபதையின் துகிலுரிதலையே உதாரணம் சொல்வது வழக்கம். திரௌபதை இரு கைகளையும் ஏந்தி கிருஸ்ணரிடம் சரணடைந்ததும் பகவான் சேலையைப் பெருக வைத்து அருள் புரிந்தார். இங்கே சிந்தனை மாற்றம் ஏற்பட்டது. இறைவனிடம் சரீரார்த்தமாக, மனச்சாந்தியுடன், இதயபூர்வமாகச் சராணாகதியடைய வேண்டும். எதுவும் எனதல்ல. எல்லாம் உமதே என்ற சிந்தனையுடன், உனது சித்தம் எதுவோ அதுவே நடக்கட்டும் என்று எண்ண வேண்டும்.

குறித்த இலக்கையே நோக்கிச் செல்வதும், நடப்ப தெல்லாம் எனது நன்மைக்கே என்ற சிந்தனை எழ வேண்டும். இதுவே நடைமுறை வாழ்க்கையில் சரணாகதி.

**முன்னைய கேள்வி:**

- புனித நாள் எது?

இறை சிந்தனையில் இருக்கும் நாளே புனித நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரடைம்"என்பது நாம் வாழும் உலகைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளும் முறையை கட்டுப்படுத்தும் ஓர் உலகின் நோக்கு.

ஒருவித சிந்தனையிலிருந்து இன்னொரு சிந்தனைக்கு மாறுவது தான் பரடைம் மாற்றம் ஆகும்.

இந்த பரடைம் மாற்றத்தை பகவான் எவ்வாறு பெயரிட்டுள்ளார்? ஆன்மீக உன்னத மாற்றம் இந்த மாற்றத் திற்கு நாம் தகுதியானவர்களா? தடைகளைத் தாண்ட தயாரகுங்கள்.

உதாரணமாக: 4 ஐ 5 இற்கு இடையில் எழுத முடியுமா? முடியுமானால் நீங்கள் ஒரு மாற்றும் முகவர் (Changing Agent) முடியாவிட்டால் உங்களுக்கு ஒரு மாற்றும் முகவர் தேவை. (விடை F(IV)E) இந்த மாற்றும் முகவர் யாராயிருக்கலாம்?

குரு, ஆசிரியர், நண்பன், பெற்றோர், விஞ்ஞானி, கணித விற்பன்னன் யாராகவும் இருக்கலாம். மாற்றும் முகவர் மற்றையவர்களை வழி நடாத்தும் பொழுது தலைவராகிறார். பரடைம் மாற்றத்திற்கு நல்ல உதாரணம்: தனிநபர் கணணிகளும் இணையங்களும், தனியார் மற்றும் வர்த்தக சூழலை வலுப்படுத்தியுள்ளன. இதனால் புதினப் பத்திரிகை வெளியீடுகள் இணையத்தளங்களாக மாறியுள்ளன.

**மூன்று விடயங்களைக் கவனிக்க வேண்டும்:**

- பெட்டியினுள் இருந்து செயற்படும் முறையை விட்டு வெளியே சிந்தியுங்கள்
- பரடைம் மாற்றம் ஏற்படுத்த வேண்டும்
- தலைவராக இருக்க வேண்டும்

பிரச்சனைகளைப் பற்றி சிந்திப்போம்.
எமக்கு பிரச்சனை இருக்கிறதா? ஆம் / இல்லை.
ஏன் எமக்கு பிரச்சனைகள் உள்ளன?
இதற்கு எம்முடைய அறிவை அல்லது பார்வை தான் காரணம். நாம் பிரச்சனையைப் பிரச்சனையாக பார்க்காமல் நல்ல வாய்ப்பாகப் பார்க்க வேண்டும்.
உதாரணம்: எலுமிச்சை பழம் கிடைத்தால் அதனை லெமெனட் ஆக மாற்று. இது தான் பரம இரகசியம். பரடைம் மாற்றம் தான் தேவை. பகவான் பக்தர்களில் ஒரு சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தினாரா? ஆம். பகவான் பக்தர்களி டமிருந்து வேண்டுவது உன்னத மாற்றம். என்ன சிந்தனை மாற்றம்? எங்கும் நிறைந்துள்ள இறைவனை எம்முள்ளும் ஒவ்வொருவரிலும், எல்லாவற்றிலும் காண்பது என்பதேயாகும். ஒவ்வொருவரிலும் இறைவனைக் காண்பது பற்றிச் சுவாமியே தனது கடைசித் தரிசனத்தின் போது (20.4.2011) தனது கைகளைக் கூப்பி பக்தர்களுக்கு நமஸ்காரம் செய்தார். இதைவிட விளக்கம் தேவையில்லை. இதைவிட வேறு மாற்றங்களையும் செய்துள்ளார்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

சமஸ்த லோகா சுகினோ பவந்து

சகல உலகிலுமுள்ள எல்லா உயிர்களும் சந்தோசமாக வாழட்டும். நிறுவனத்தில் திறமையும் செயற்திறனும் தேவை. திறமை என்றால் சரியான முறையில் செய்வது. செயற்திறன் என்றால் சரியானதைச் செய்வது என்பதே கருத்து.

ஒரு குறிக்கப்பட்ட "பெட்டிக்குள்" இருந்து சிந்திக்கிறாயா? இல்லையா? என்று பார்ப்போம். IAS இல் கேட்கப்பட்ட கேள்விகளைப் பார்ப்போம். மறுமொழிகளும் தரப்பட்டுள்ளன.

1. How can you drop a raw egg onto a concrete floor without cracking it?
2. How can a man go eight days without sleep?
3. What can you never eat for breakfast?
4. Bay of Bengal is in which state?
5. If you throw a red stone into the blue sea what will it become?

**பெட்டியினுள் இருந்து சிந்திப்பவர்கள்**

- தற்போதைய நிலை திருப்தி
- எண்ணக்கருவின் தரத்தை தெரிந்து கொள்ள முடியாது.
- சிறந்த தீர்வைப் பெறுவதற்கு அதிக நேரத்தை ஒதுக்குவார்கள்.
- ஆக்கத்தை அழிப்பவர்கள்.

ஆக்கபூர்வமான தீர்வுக்கு நேரம் இல்லை ஏதாவது ஒரு முடிவையே வேண்டுவார்கள்.

**பெட்டிக்கு வெளியே சிந்திப்பவர்கள்:**

- நாளாந்த வேலையை புதிய கோண ங்களில் செய்ய விருப்பம் கொள்வார்கள்.
- திறந்த மனத்துடன் வெவ்வேறு வேலை களைச் செய்தல், அத்துடன் விடயங்களை வெவ்வேறு விதமாகச் செய்தல்.
- மேம்பாடுகள் தொடர்பாக புதிய கருத்துக் களை தேடுதலும் அதை செயற்படுத்த லும்.
- புதிய வழிகளில் மேம்பாடுகளை உரு வாக்க முயற்சி செய்தல். மற்றவர்களுக்கு செவிமடுத்தல்.
- மற்றவர்கள் புதிய கருத்துக்களுடன் வரும்போது அவர்களுக்கு உதவுதலும், மதித்தலும்.


பரடைம் மாற்றம் ஒருவரிடம் உள்ளே தான் ஆரம்பிக்கிறது.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயற்திறன் உள்ளவர்களின் ஏழு பழக்க வழக்கங்கள்:

- தீவிர சாதனை.
- முடிவை மனதில் கொண்டு ஆரம்பித்தல்.
- முதன்மையானவற்றிற்கு முதலிடம் கொடுத்தல்.
- வெற்றி, வெற்றி என்பதே தீர்வுக்கு சிந்தனை.
- விளக்கமாக கேட்கமுயற்சித்தலும், பின்னர் விளங்கிக் கொள்ளலும்.
- கூட்டு முயற்சிகள்
- புதுப்பித்தலும் தொடர்ச்சியான முன்னேற்றமும்.

**முன்னெடுத்துச் செல்பவனாக இருப்பதற்கு:**

- புதியது ஒன்றை ஆரம்பிப்பதற்காக முயற்சி எடுத்தல்
- மற்றவர்கள் முதலில் செய்யவேண்டும் என காத்திராமை.
- நீ செய்வதற்கு பொறுப்பாக இரு.

நேரத்தை கையாள்வதற்கு, செய்ய வேண்டிய வற்றை நாலாகப் பிரித்து செய்யப் பழகு:
அவசரமானதும் பிரதானமானதும் -- முதலிடம்
அவசரமானதல்ல ஆனால் பிரதானமானது. -- இரண்டாவது
அவசரமானது ஆனால் பிரதானமானதல்ல. -- மூன்றாவது
அவசரமானதுமல்ல, பிரதானமானதுமல்ல.-- கடைசி

முதலில் மற்றவரை விளங்கிக் கொள்ள முயற்சி யுங்கள், அதன் பின்பு உங்களை விளங்கப்படுத்துங்கள்.

உணர்வுகள், கருத்துக்கள் இரண்டையும் நிதானமாக செவிமடுங்கள்.

கூட்டு முயற்சியில் பரஸ்பர நம்பிக்கையும் புரிந்துணர்வும் வேண்டும். தனிப்பட்ட தப்பபிப்பிராயங்களை தவிர்ப்பதற்கான வழிவகைகளை கண்டறிய வேண்டும்.

நவீன முகாமைத்துவச் சொற்றொடர்
மொத்த தர முகாமைத்துவம்
TQM (Total Quality Management) என்பதில் புதுப்பித்தலும் தொடர்ச்சியான முன்னேற்றமும் இருக்க வேண்டும்.

ஜெய் சாயிராம்

எல்.பிரபாகரன்
முகாமைத்துவ நிபுணர்,
ஸ்ரீ லங்கா மத்திய சபை பிரதி தலைவர்,
கொழும்பு

(25.10.2014 அன்று யாழ். சத்திய சாயி நிலையத்தில் நிகழ்த்திய உரையின் சாராம்சம்)




IAS இல் கேட்கப்பட்ட கேள்விக்கான விடைகள்

1. Concrete will not break only the egg will break
2. He can sleep in the night
3. Lunch or Dinnar
4. Liquid state
5. it will become wat



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சத்ய சாயி

அன்பான ஆண்டவா அருளை அள்ளித் தா
அமைதியான வாழ்வு வாழ வழியைக் காட்டித் தா


அமைதி வேண்டுமே மன நிறைவு வேண்டுமே
கருணை நிறைந்த கடவுள் - எம்மைக் காக்க வேண்டுமே

சத்தியம், தர்மம், சாந்தி பிரேமை, அகிம்சை ஐந்துமே
வாழும் வழிக்கு நமக்கு இங்கு வழியைக் காட்டுமே
அடிமனதில் நாம் விதைத்திடுவோமே
நல்ல செயலைச் செய்ய எமக்கு வழியைக் காட்டுமே

அன்பு ஆண்டவா அருளை விரைந்து வழங்க வா
அன்பும் அறமும் நிறைந்து வாழ வழியைக் காட்டித் தா
அன்னை தந்தை குரு தெய்வம் ஆசி வேண்டுமே
இறைவா மன நிறைவோடு வாழ வேண்டுமே.

உண்மையே பேசி நாம் உயர்ந்திடுவோமே
உலகமே வியக்க நாம் வாழ்ந்திடுவோமே (உண்மையே)

இனிமையாய் அன்புடன் பேசி மகிழ்வோம்
அமைதியும் சாந்தியும் எமதாகுமே (3)



வாருங்கள் வந்து கேளுங்கள்
நல்ல பண்புகளைக் கேளுங்கள்
சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை
என்ற பண்புகளில் வாழ்ந்திடுவோம்
ஆர்வத்துடன் நாம் கற்றிடுவோம்
அகிம்சை வழியிலே வாழ்ந்திடுவோம்

காற்றே வா தென்றலாய் வா
புயலாய் வந்து வருத்தாதே
நெருப்பே வா ஒளியாய் வா
எரிமலையாய் வந்து பொசுக்காதே
நீரே வா பன்னீராய் வா
சுனாமியாய் வந்து வாட்டாதே
ஓம்காரம் தரும் ஆகாயம்
அகழ்வாரைத் தாங்கும் நிலமே வா (2)

இறைவா எம்மிடம் வா - எம்
வாழ்வு வளம் பெற வா
இறைவா ஓடி வா எம்
வாழ்வு நலம் பெற வா
இறைவா இறங்கி வா - எம்
வாழ்வு மலர்ந்திட வா

நல்லதைப் பார்ப்போம்
நல்லதைக் கேட்போம்
நல்லதையே செய்வோம்
இதுவே வாழும் வழி
நமக்கிதுவே வாழும் வழி

அன்புடன் வாழ்ந்து
அறத்தினைப் போற்றி
அமைதியுடன் வாழ்வோம்
இதுவே வாழும் வழி
நமக்கிதுவே வாழும் வழி

## மனித மேம்பாட்டுப் பாடல்கள்


89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலவிகாஸ் பாடல்

பாலவிகாக்ஷ் மாணவர் நாம் பாடுவோமே
ஆனந்தம் பொங்க நாங்கள் ஆடுவோமே

எம்மை ஈன்ற அன்னை தந்தை
எம்மை வாழ்த்தி மகிழ்ந்திடவே
அகிலம் போற்றும் சாயி நாதன்
அருள் எமக்கு பொழிந்திடவே (பாலவிகாக்ஷ்)

இறை அன்னை ஈஸ்வராம்பா
அருளாசி வழங்கிடவே
எங்கள் எதிர்காலம் - என்றும்
வளமோடு செழித்திடவே (பாலவிகாக்ஷ்)

சத்யம் தர்மம் சாந்தி ப்ரேமை
அஹிம்சை என்னும் பண்புகளை
பாரெங்கும் பரவச் செய்த
சாயி நாதன் மகிழ்ந்திடவே (பாலவிகாக்ஷ்)

---

பாலவிகாக்ஷ் மாணவர் நாம் ஆவலுடன் இங்கு வந்தோம்
சாயி மலர் பாதம் இங்கு கண்டு கொண்டோம் (2)

சீரடியில் வாழ்ந்த பாபா பர்த்தியிலே பார்த்த பாபா
சித்ராவதிக் கரைதனில் நடந்த பாபா (2)
(பாலவிகாக்ஷ்)

புட்டபர்த்தி க்ஷேத்திரத்தில் ஈஸ்வராம்பாள் ஈன்றெடுத்து
சுப்பம்மாள் வளர்த்த எங்கள் சாயி நாதா (2)
(பாலவிகாக்ஷ்)

இசைக் கருவி வாழ்த் தொலிக்க
நாகபாம்பு தாலாட்ட
ஈஸ்வராம்பாள் ஈன்றெடுத்த சாயி நாதா (2)
(பாலவிகாக்ஷ்)

பாலவிகாக்ஷ் கல்விதந்து, இளைஞர் அணி எமக்களித்து
பார்புகழ வாழச் செய்த சாயி நாதா (2)
(பாலவிகாக்ஷ்)

அன்பு நெறிப் பாதையிலே
அகிலமெங்கும் அமைதி காண
அகிம்சை வழி வாழச் சொன்ன சாயி நாதா (2)
(பாலவிகாக்ஷ்)

ஆக்கம்: திரு.ந.புவனேந்திரன்
திருகோணமலை



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23

# மகா சமாதிப் பாடல்கள்

பிரசாந்தி சாயி மகா சமாதி புண்ணிய க்ஷேத்திரம் வாரீர்
சாயி ராம் சாயி ராமா
சாயி ராம் சாயி கிருஷ்ணா

மனதில் தோன்றும் துன்பங்கள் எல்லாம் துரும்பாய் மாறிடும் வாரீர்
சாயி ராம் சாயி ராமா
சாயி ராம் சாயி கிருஷ்ணா

மலை போல் தோன்றும் கர்ம வினைகள் பனியாய் உருகிடும் வாரீர்
சாயி ராம் சாயி ராமா
சாயி ராம் சாயி கிருஷ்ணா

அன்பும் அருளும் அமைதியும் தோன்றும் தெய்வ ஆலயம் வாரீர்
சாயி ராம் சாயி ராமா
சாயி ராம் சாயி கிருஷ்ணா

---

ஜெய் சாயி ராம் ஜெய் சாயி ராம்
இதயத்துள் நிறைந்தாய் சத்ய சாயி ராம்
ஜெய் சாயி ராம் ஜெய் சாயி ராம்
பிரபஞ்சம் நிறைந்த சத்ய சாயி ராம் (ஜெய் சாயி)

அருவம் உருவம் அருவுருவம்
அகிலம் முழுதும் உன் நாமம் (ஜெய் சாயி)

பிறப்பும் இறப்பும் உமக்கில்லை
உன் தெய்வீகம் உலகாளும் (ஜெய் சாயி)

அன்பே உந்தன் அருளுருவம்
அகிலத்தைக் காப்பாய்
சத்ய சாயி ராம் (ஜெய் சாயி)

---

கருணைக் கடலே சாயி மாதா
இதயவாசி அருளைத் தா
தெய்வீகம் மலர அருள் தாராய்
எமது உள்ளம் உமது இல்லம்
சாயி மாதா சாயி ராம்
சாயி மாதா சாயி ராம்
வாராயோ அருள் தாராயோ
சாயி மாதா சாயி ராம்

---

சாயி மாதா சாயி மாதா
இதயம் நிறைந்த சாயி மாதா

உந்தன் பார்வை போதுமே
எந்தன் துன்பம் தொலையுமே (சாயி மாதா)

கடைக்கண் பார்வை அருளினால்
கனவாய் போகும் கவலைகள்
இமையம் போன்ற துயரமும்
இளகும் உந்தன் பார்வையால் (சாயி மாதா)

அகிலம் போற்றும் அன்னையே
அருள்வாய் உந்தன் கருணையை
உன்னை நம்பி வாழ்கிறோம்
என்றும் எம்மை காப்பாயே (சாயி மாதா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அடி எடுத்து வைத்தால் பகவான் பல அடி எடுத்து வைப்பார்

**கிளிவெட்டி சாயி நிலையத்தின் சம்புக்களிகிராமத்தில் 46 மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு வருமான வளர்ச்சித் திட்டம்**

சம்புக்களிகிராமம் மூதூர் நகரத்திற்கு சமீபத்தில் உள்ள பழம் பெரும் கிராமம் யுத்தத்தினால் அங்குள்ள மக்கள் யாவரும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து சென்று அகதி முகாம்களில் பலகாலம் வசித்து வந்தார்கள். எல்லாச் சொத்துக்களையும் இழந்து அன்றாட வாழ்க்கைக்கு வசதி இன்றி அல்லல்பட்டு தவித்த அவர்களை இவ்வருட ஆரம்பத்தில் மீண்டும் அக்கிராமத்தில் குடியேற அரசாங்கம் அனுமதியளித்தது. ஆனால் அடிப்படை வசதிகளற்ற அக்கிராமத்தவர்கள் தமது வாழ்க்கையை மீண்டும் தொடங்க யாராவது உதவுவார்களா என அங்கலாய்த்திருந்த சமயம் கிளிவெட்டி சாயி நிலையம் அவர்களது வருமானத்தை வளர்த்தெடுக்க பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் அருளால் ஓர் சிறிய திட்டத்தை தயாரித்தது, அதன்படி அங்கு முதலில் குடியேற அனுமதி பெற்ற 25 குடும்பங்களுடன் கலந்துரையாடி அவர்களின் ஆலோசனைப்படி நிலக்கடலை பயிரிடுவதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்டத்தை மூதூர் பிரதேசசெயலாளர், விவசாயத் திணைக்களம் என்பவற்றோடு கலந்துரையாடி ஒவ்வோர் குடும்பத்திற்குமுரிய நிலத்துண்டின் அளவுக்கேற்ப நிலக்கடலை பயிரிடுவதற்கான திட்டத்தை தயாரித்தது. அதன்படி 25 குடும்பங்களுக்கான விதை நிலக்கடலையை விவசாய திணைக்களம் மூலம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முழுப்பணமும் திணைக்களத்திற்கு கொடுக்கப்பட்டு விதை நிலக்கடலையும் 25 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சமயம் மேலும் 21 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்த்த அரசாங்கம் அனுமதியளித்தது. எனவே அவர்களும் தமக்கு விதை நிலக்கடலை வேண்டுமென சாயி நிலையத்தவர்களை கேட்டுக் கொண்டார்கள். ஆனால் ஒதுக்கிய பணம் முழுதும் தீர்ந்த படியால் புதியவர்களுக்கு புதிதாக பணம் தேடவேண்டிய சூழல் வந்த போது யாவரும் எதிர்பாராமல் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தமக்கு கிடைத்த விவசாய மானியத் திட்டத்தின் மூலம் நாம் ஏற்கனவே செலுத்திய பணத்திற்கு மேலும் 21 குடும்பங்களுக்கும் நிலக்கடலை வழங்க முடியும் எனத் தெரிவித்தார்கள். எனவே மேலதிக செலவு எதுவும் இன்றி முன்னர் 25 குடும்பங்களுக்கு ஒதுக்கிய பணத்துடனேயே 46 குடும்பங்களுக்கும் விதை நிலக்கடலை வழங்கி எல்லோரையும் திருப்தி படுத்த முடிந்தது. நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் பகவான் பல அடி எடுத்து வைப்பார் என்பதற்கு இச்சிறிய சேவைத்திட்டம் ஓர் சிறிய உதாரணம். மேலும் அக்கிராமத்தில் கிணறுகள் எல்லாம் பாழடைந்து கிடந்தது. கிணற்றுக்குள் அழிந்த பொருட்களும், வேண்டாத குப்பைகளும் போட்டு முடப்பட்டு இருந்தன. எனவே பழைய கிணறுகளை புதுப்பிக்க முடியாமையால் புதிய கிணறுகள் வெட்ட தமக்கு உதவுமாறும் மீளக்குடியமர்ந் தோர் கேட்டுக் கொண்டார்கள். பிரதேச செயலாளரின் உதவியுடன் மக்களின் பங்களிப்போடு புதிய கிணறுகள் வெட்டவும் மேலும் ஓர் சிறிய திட்டம் தயாரிக்கப்பட்டது. அதற்குரிய பணம் தேவையென பிரார்த்தித்த போது ஓர் சாயி அடியார் கிணறுகள் வெட்டுவதற்கு தாம் நிதியளிப்பதாக தாமே மனமுவந்து முன்வந்தார். அதன் படி 23 கிணறுகள் வெட்டப்பட்டன. சில தகுதியான கிணறுகள் மட்டும் புதுப்பிக்கப்பட்டன. தற்போது 46 குடும்பமும் மிகச்சிறந்த விளைவைப் பெற்று தலா ஒவ்வொரு குடும்பம் ரூபா 22000.00 முதல் ரூபா 49000.00 வரை தேறிய வருமானமாகப் பெற்று தமது





**தூர்ந்த கிணறும் திருத்தப்பட்ட கிணறும்**

வாழ்வைத் தொடங்கியது மட்டு மன்றி தொடர்ந்து தமது நிலங்களில் தரமான பயிர்களை மகிழ்வோடு பயிரிட்டு தமது குடும்பங்களை பராமரித்து வருகின்றார்கள்.

இதேசமயம் தேசிய இளைஞர் அணி இணைப்பாளரின் உதவியுடன் நீண்ட கால பயிரான 100 தென்னங்கன்றுகளும், 50 மாமரங்களும் இக் கிராமத்திற்கு வழங்கப் பட்டன. இக் குடும்பங்கள் தமது வீடுகளில் இதைப் பயிரிட்டு மகிழ்ந்தார்கள். தேசிய சேவை இணைப்பாளர் இத் திட்டத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தார். இப்போது மீளக் குடியமர்ந்த 46 குடும்பங்களும் தமது சொந்த வருமானத்தில் தமது வாழ்க்கையை தொடங்கியுள்ளார்கள். இதுவே சாயி வழி.

ஜெய் சாயிராம்

தகவல்:
வ.பிரதீபன்,
தலைவர்,
வடமத்தியபிராந்திய இணைப்புக் குழு.

89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேள்வி பதில்

**கேள்வி:**
சில வேளைகளில் சுவாமி அருகாமையிலிருப்பதாகவும் சில வேளைகளில் சுவாமி வெகு தூரம் சென்றுள்ளதாகவும் உணர்கிறோம். இதன் விளக்கத்தைத் தருமாறு சுவாமியிடம் கேட்கிறோம்.

**சுவாமி:**
பொறாமையும்,குரோதமுமே இப்படியான உணர்விற்குக் காரணம். இவ்விரண்டையும் அடக்கி விட்டால் பிரபஞ்ச சக்தியான பரமாத்மா உங்களுடனேயே இருப்பதை உணரலாம். எமது மாணவர்கள், சுவாமி அவர்கள் மீது கோபம் கொள்வதாகக் காட்டுவதை விளங்குவதில்லை. அவர்களின் எண்ணத்தை நான் அறிவேன். இதுவே எனது செய்கைக்கு காரணமாகிறது.

இதற்கு ஒரு கதை:
ஒரு முறை அக்பர் பேரரசனிடம், முஸ்லீம் பிரபுக்கள் குருநானக் முஸ்லீம் மக்களிடையே பெரும் செல்வாக்கை பெறுவதாகவும், அவரை அடக்க வேண்டுமென்றும், கூறினார்கள்.


அக்பர் அரசனின் தாயார் இந்து மதத்தவர். ஆகவே இந்துக்களை மரியாதையுடன் நடத்தினார். போக்கை அறிவதற்காக குருநானக்கை அரண்மனைக்கு வருமாறு அழைத்தார். குருநானக் ஏற்க மறுத்து "எனக்கு கடவுள் தான் மன்னன், உலக மன்னர்கள் இன்றிருப்பார்கள், நாளை போய் விடுகிறார்கள். நான் கடவுளைத்தான் மதிப்பேன்."என்று கூறினார்.

அக்பர் இதன் அர்த்தத்தை உணர்ந்து குருநானக்கை பள்ளிவாசலுக்கு வந்து வணக்கத்தில் கலந்து கொள்ளுமாறு அழைத்தார். பள்ளி வாசலில் மௌலவி பிரார்த்தனையை நடத்தும் பொழுது, குருநானக் உரக்கச் சிரித்துக் குழப்பினார். மக்கள் கோபம் கொண்டார்கள். அரசன் அவர்களைப் பொறுமையோடு இருக்கச் சொல்லி தான் பிரார்த்தனையைத் தொடங்கினார். நானக் அப்போது இன்னும் உரத்துச் சிரித்தார். அக்பர் நானக்கிடம் அவரின் செய்கைக்காக விளக்கம் கேட்டார். நானக் அவர்களின் பதில்:

"அரசனே நீர் நேற்றுக் கிடைத்த அரேபியக் குதிரையைப் பற்றியே சிந்தித்தீர்கள். மௌலவியோ தமது மகனின் சுகவீனத்தைப் பற்றிய சிந்தனையில் இருந்தார். நான் சிரிக்காமல் என்ன செய்திருக்கலாம்? இது ஒரு பாசாங்குப் பிரார்த்தனையல்லவா?" என்று கூறினார். நானக்கின் செயற்பாடு வெளித்தோற்றத்திலிருந்து எழவில்லை. அவர்களின் மனதில் உள்ள எண்ண உணர்வினாலேயே அப்படிச் செய்தார்.

சுவாமியும் வெளித் தோற்றத்தினால் கவரப் படுவதில்லை. சுவாமி இதயசுத்தியே அவதானிப்பவர்.

(அன்பன் எறுக் வனிபுன்டாவுடன் (Eruch B. Fanibunda) நிகழ்ந்த சம்பாசணை. - 1976)
Ref: Saibaba news


89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனச் செய்திகள்

வட மத்திய பிராந்தியம்

*கிளிநொச்சி சாயி நிலையம்*

**கண் கற்றாக் சேவை**

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 11 அன்பர்களுக்கு 23.8.2014 திகதியன்று கிளிநொச்சி சாயி நிலையத்தினரின் ஏற்பாட்டில் சாயி அம்புலன்ஸ் வண்டியில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை கண் சிகிச்சை பிரிவில் சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டு மறுநாளே உரிய இடங்களில் கொண்டு சென்று விடப்பட்டனர்.



*தண்ணீரூற்று சாயி நிலையம்*

**குருமாருக்கான பயிற்சி முகாம்**

தண்ணீரூற்று சாயி நிலையத்தில் 2014 செப்டம்பர் 6, 7 திகதிகளில் பாலவிகாஸ் குருமாருக்கான பயிற்சி முகாம் இடம் பெற்றது. இதனை சத்திய சாயி கல்விப் பிரிவினரால் நடாத்தப் பட்டது. இதில் முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலையை சேர்ந்த 45 குருமார் கலந்து கொண்டனர்.

*திருகோணமலை சாயி நிலையம்*

**இலவச வைத்திய முகாமும் நாராயண சேவையும்**

பகவானின் மகா சமாதி தினமாகிய 24.04.2014 அன்று தம்பலகாம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பட்டிமேடு கிராமத்தில் அமைந்துள்ள சாரதா வித்தியாலயத்தில் ஒரு இலவச வைத்திய முகாமும், அப்பாடசாலைக்கு அருகாமை யிலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேஷஅன்னதானமும் திருக்கோணமலை சாயி நிலையத்தால் நடாத்தப்பட்டன.

இந்த வைத்திய முகாமில் 5 வைத்தியர்களும் ஒரு கண் பரிசோதகரும், 23 சாயி தொண்டர்களும் பங்குபற்றினர். 123 பேர் நீரழிவு மற்றும் இரத்த அழுத்தம் ஆகிய நோய்களுக்காக பரிசோதிக்கப் பட்டனர். தேவைப்பட்டோருக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டன. 189 பேருக்குக் கண்பரிசோதனை செய்யப்பட்டு 156 பேருக்கு இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மிகுதி 33 பேருக்கு விசேஷமாக கண்ணாடிகள் தயாரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டது.

வைத்திய முகாமுக்கு வந்தவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட கிராம மக்கள் சுமார் 400 பேருக்கு நாராயண சேவையும் வழங்கப்பட்டது.



திருகோணமலை சாயி நிலைய ஏற்பாட்டில் 9.8.2014 அன்று அண்மையில் மீளக் குடியமர்த்தப்பட்ட தன்னமாரவெடி கிராமத் தில் கண் சிகிச்சை, மற்றும் மருத்துவ முகாம் மேற் கொள்ளப்பட்டது, 51 குடும்பத்தை சேர்ந்த 62 பேருக்கு மருத்துவ பரிசோதனை களும் 58 பேருக்கு கண் பரிசோதனைகளும் மேற் கொள்ளப்பட்டது. 48 பேருக்கு அன்றைய தினமே இலவசமாக கண்ணாடிகள் வழங்கப்பட்டன. ஏனைய 10 பேருக்கும் பின்னர் வழங்கப்பட்டது, 3 பேர் கற்றாக் சிகிச்சைக்காக இனங் காணப் பட்டனர்.



**ஆன்மீக சுற்றுலா**

திருகோணமலை நிலையத்தில் உள்ள 63 பாலவிகாஸ் மாணவர்களும் 10 குருமாரும் இணைந்து 18.10.2014 திகதியன்று மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்கும் மடு மாதா ஆலயத்திற்கும் ஆன்மீக சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.



89 ஆவது அவதார தின விழா
நவம்பர் 23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வவுனியா சாயி நிலையம்*

**பாடசாலை உபகரணங்கள் வழங்கல்**

வவுனியா சாயி நிலையத்தினரால் 2.10.2014 அன்று பூம்புகார் மணிமேகலை பாலர் பாடசாலை மாணவர்கள் 16 பேருக்கு கல்வி செயற்பாட்டிற்கு உறுதுணையாக பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. இச் சேவையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இளைஞர் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

**ருத்ர ஏகாதசினி சாதனை**

வவுனியா சாயி நிலையத்தில் 4.10.2014 திகதியன்று ஸ்ரீ ருத்ர ஏகாதசினி சாதனை இடம் பெற்றது. 50 பேர் கலந்து கொண்டனர்.

**தசரா - நாராயண சேவை**

2014 செப்டம்பர் 24, 26, 29, 30 ஆகிய நான்கு தினங்களும் வவுனியா இளைஞர்களால் ஆனந்தா இல்லம், அன்னை தெரேசா இல்லம், புதுவாழ்வு பூங்கா, மற்றும் நகர சிறார்கள் உட்பட சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன.



"குழந்தைகளே எங்கள் எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில் அவதாரப் பிரகடன தினத்தையொட்டி 25.10.2014 அன்றைய தினம் 78 சிறுவர் இல்ல மாணவர்கள், பாலவிகாஸ் மாணவர்கள், பூம்புகார் கிராம சிறுவர்களையும் இணைத்து நாடகம், பஜனை, வீடியோ படக்காட்சி, சுவாமியின் செய்தி என்பன வழங்கப்பட்டது. நிகழ்ச்சி நிறைவில் சிறார்களுக்கு மதிய உணவு, பாடசாலை உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டது.

கிழக்குப் பிராந்தியம்

*தாமரைக்கேணி சாயி நிலையம்*

**சேதனப் பசளை முறையில் பயிர்ச்செய்கை**

2014 மாரிப்போகத்தில் வடமுனை, ஊத்துச்சேனை ஆகிய கிராமங்களில் உள்ள மொத்தம் 245 குடும்பங்களிற்கும் வீட்டுத்தோட்ட முறையில் மேட்டுநிலப் பயிர்செய்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான விதைகள் மற்றும் இரசாயானப் பதார்த்தங்களினைத் தவிர்த்து இயற்கையான முறையில் பசளைகள் பாவித்தல்,கிருமிகளைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் அங்கு ஒரு இரசாயனங்கள் பாவிக்கப்படாத ஒரு ஆன்மீகப்பண்ணையை உருவாக்கும் வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட விருக்கின்றன

**வாழ்வாதார உதவிகள்**

கணவன்மார்களை இழந்த பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களிற்கு அவர்களுடைய நிலையான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக கறவை பசுக்களை ஒவ்வொரு குடும்பதிற்கும் ஒவ்வொன்றாக வழங்குவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம் 47 பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களில் இது வரை மூன்று குடும்பங்களிற்கு மட்டுமே கறவைப்பசுக்கள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் 10 பசுக்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



வட பிராந்தியம்

*இளைஞர் பிரிவினரின் செயற்பாடுகள்*

**"கல்வி உபகரணங்கள் வழங்கல்"**

25.5.2014 திகதி சமைத்த உணவுகளை வழங்கும் சேவை தொடர்பில் கீரிமலை பகுதியில் இனங்காணப்பட்ட கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டது. 400 அங்கத்தவர் கொண்ட கிராமத்தில் கல்வி கற்கும் 120 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

**"குழந்தைகளே எங்கள் எதிர்காலம்"**

அவதாரப் பிரகடன தின்ததையொட்டி வடபிராந்திய இளைஞர் பிரிவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள 9 சிறுவர் இல்லங்கள் இனங்காணப்பட்டு மனிதமேம்பாட்டுக் கல்வி,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனை போன்ற சேவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதே வேளை இச் செயற்பாடு தொடர்ந்து மேற் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**"இயற்கையைப் பாதுகாப்போம்"**
தேசிய நிகழ்ச்சித்திட்டமான மரநடுகைத்திட்டத்தை அவதாரப் பிரகடனதினத்தையொட்டி யாழ் நகரப் பாடசாலையான யா/ செட்டித்தெரு அமெரிக்க மிசன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் வீடுகளில் நடுவதற்குமாக 100 பயன்தரும் மரக்கன்றுகளான மா, வேம்பு, ஜம்பு மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

**"மனித மேம்பாட்டு வாசகங்கள்"**
வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சத்திய சாயி மனிதமேம்பாட்டு வாசகங்களை வடமராட்சி கல்வித் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு பாடசாலைகளின் வகுப்பறைக் கட்டிடங்களில் நிரந்தரமாக பொறிக்கும் செயற்பாட்டை கற்கோவளம் சாயி நிலையத்தின் இளைஞர் பிரிவினரால் கடந்த வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.


*மனித மேம்பாட்டு கல்வி*

**மாணவர்களுக்கான ம.மே.க பயிற்சி**
காரைநகர் டாக்டர். தியாகராஜா மகா வித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களுக்கான மனித மேம்பாட்டுக்கல்வி தொடர் வகுப்புகள் 10 தினங்களாக இடம்பெற்றது.



**முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ம.மே.க பயிற்சி**
5.4.2014 சித்தங்கேணி சாயி நிலையத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மனித மேம்பாட்டு கல்வி வகுப்பிலும் 52 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**ஆசிரியர்களுக்கான ம.மே.க பயிற்சி**
21, 22.08.2014 இல் டாக்டர் தியாகராஜா மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான மனிதமேம்பாட்டு பயிற்சி வகுப்பு இடம் பெற்றது. இப் பாடசாலை ஆசிரியர்கள் 15 பேர் கலந்து கொண்டனர்.



*ஆன்மீகச் செயற்பாடு*

**அகமாற்றம் தொடர்பான பட்டறை**
அகமாற்றம் தொடர்பாக வடபிராந்திய சாயி நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட இரண்டாவது பயிற்சிப் பட்டறையில் 160 பேர் கலந்து கொண்டனர்.

*மருத்துவ சேவை*

**மருத்துவ முகாம்**
11.10.2014 காட்டுப்புலத்தில் மருத்துவ முகாம். சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. 280 பேர் பார்வையிடப்பட்டனர். அதில் 242 பாடசாலை மாணவர்களும் ஏனையோர் அவர்களின் பெற்றோர்களும் என்பது குறிப்பிடத் தக்கது.

**இரத்ததானம்**
21.9.2014 திகதியன்று மேற்கொள்ளப்பட்ட இரத்த தான நினழ்வில் 44 பேர் கலந்து கொண்டு அன்புத்திரவத்தை வழங்கி னார்கள்.


**பகவானின் 89 ஆவது அவதார தின சேவை**
வடபிராந்திய சத்திய சாயி நிறுவன மருத்துவ பிரிவு, ஆன்மீக பகுதி, சேவைப்பகுதி, வீடியோப் படக்காட்சிப் பிரிவு, மனித மேம்பாட்டு கல்விப் பிரிவு ஆகியோர் இணைந்து காரைநகர் ஊரி கிராமத்தில் 2.11.2014 திகதியன்று மேற்கொள்ளப்பட்ட பல சேவை தொடர்பில் 384 பேருக்கு மருத்துவ சேவையும், 200 மேற்பட்ட சிறுவர்களுக்கு சர்வமதப் பிரியர் சாயிபாபா வீடியோ படக்காட்சியும், 100 குடும்பங்களுக்கு 1000 ரூபா பெறுமதியான உலர் உணவு வழங்கலும், 120 இற்கு மேற்பட்ட குடும்பத் தலைவிகளுக்கு மனித மேம்பாடுடனான பெற்றோரியலும் வழங்கப்பட்டன

ஏனைய பிராந்தியங்களும் தங்கள் செய்திகளை எமக்கு அனுப்பி வைத்தால் பிரசுரிக்க வசதியாக இருக்கும்.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கீரிமலை, வசந்தபுர கிராமத்தில் சிறுவர்களுக்கு பிரார்த்தனையும், சாயி செய்தியும், மதிய போசனமும் வழங்கும் சேவை – வடபிராந்தியம்




தண்ணீரூற்று சாயி நிலையத்தில் குருமார் பயிற்சி – வடமத்திய பிராந்தியம்




குழந்தைகளே எமது எதிர்காலம் – வடமத்திய பிராந்தியம்





கிளிவெட்டி சம்புவளிக் கிராமத்தில் வருமான வளர்ச்சித் திட்டம் – வடமத்திய பிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சாயி கமலம்"
## தாமரைக்கேணி சாயி நிலையம் - கிழக்குப் பிராந்தியம்



தாமரைக்கேணி சாயி நிலையம் முகப்பு தோற்றம்



தாமரைக்கேணி சாயி நிலைய பிரார்த்தனை மண்டபம்



2015 – கலண்டர்



தின வாழ்த்து
அட்டைகள்



சாயி செய்தியுடன்
அப்பியாசக் கொப்பிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org